# கரை எழில்
# 08




பிரதேச கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்
கரைச்சி
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரை எழில்

## ~08~

## 2024

பிரதேச செயலகம் - கரைச்சி - கிளிநொச்சி
DIVISIONAL SECRETARIAT - KARACHCHI - KILINOCHCHI
ප්‍රාදේශීය මහ ලේකම් කාර්යාලය, කරච්චි, කිලිනොච්චි

**பிரதேச கலாசாரப் பேரவை**

பிரதேச செயலகம்,

கரைச்சி,

கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

**நூலின் பெயர்**
கரை எழில் - 08

**நூல் வகை**
ஆண்டிதழ்

**முதற்பதிப்பு**
மார்கழி - 2024

**தொகுப்பு**
மலர்க்குழு,
பிரதேச செயலகம், கரைச்சி.

**பதிப்புரிமை**
பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், கரைச்சி.

**வெளியீட்டெண்**
08

**தாள் வகை**
70gsm Bank Paper

**பிரதிகள்**
500

**அட்டை வடிவமைப்பு**
யோ.ஜேசு.யுஜேனியன்
கிளிநொச்சி

**வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும்**
வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

**பக்கங்கள்**
92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம் - கரைச்சி - கிளிநொச்சி

DIVISIONAL SECRETARIAT - KARACHCHI - KILINOCHCHI

ප්‍රාදේශීය මහ ලේකම් කාර්යාලය, කරච්චි, කිලිනොච්චි



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார பேரவை

பிரதேச செயலகம் கரைச்சி, கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே....

❖ தமிழ்த்தாய் வாழ்த்து
❖ பிரதேச செயலகக் கீதம்
❖ மலர்க்குழு விபரம்

| | |
|---|---|
| ஆசிச்செய்திகள் | xiii - xiv |
| வாழ்த்துச்செய்திகள் | xv - xix |
| வெளியீட்டுரை | xx |

| | |
|---|---|
| 1. இலங்கையின் சைவசமய வரலாற்றில் தொன்மைமிகு உருத்திரபுரீச்சுவரர் சிவாலயம் | 1-10 |
| 2. தமிழர் பண்பாடு | 11 |
| 3. கரைச்சிப் பிரதேச மக்களின் வாழ்வியல் கோலங்கள் | 12-13 |
| 4. கிளிநொச்சி மாவட்டத்தில் இறைபணி புரிந்த நிறுவனங்கள் | 14-16 |
| 5. இலங்கையில் தமிழ்ப் பௌத்தம் | 17-21 |
| 6. முதல்மழை | 22 |
| 7. கிராமிய பொருளாதார அபிவிருத்தியானது எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான பரிந்துரைகளும் | 23-26 |
| 8. வீதிவிபத்து | 27 |
| 9. கிளிநொச்சியின் ஆலயங்களும் நிலைத்திருக்கும் தன்மையும் | 28-30 |
| 10. சைவ சமய வாழ்வியல் | 31-35 |
| 11. விரைவுணவுகளும் உடல்நலமும் | 36-37 |
| 12. "ஆதிக்கச்சிறையில் அமிழ்ந்தது போதும் ஆற்றலின் வடிவாய் எழுந்திடம்மா" | 38-39 |
| 13. மனித இயற்கை இயங்கிய வாழ்வியல் குலைப்பு | 40-47 |
| 14. மாறிவரும் உலகில் இளைஞர் சமுதாயத்தின் இன்றைய நிலை | 48-50 |
| 15. அடையாளம் | 51 |
| 16. மூத்தோர்கள் நலன் பேணுவோம் | 52-53 |
| 17. நாற்பெரும் கலைஞர்கள் | 54-59 |
| 18. கருப்பொருளூடாக காதலும் குடும்ப வாழ்க்கையும் பழந்தமிழ் இலக்கியங்கள் ஊடே ஒரு பார்வை | 60-62 |
| 19. போதை காட்டும் பாதை | 63-65 |
| 20. எமது சமூகத்தில் கைம்பெண்கள் அவர்கள் எதிர்கொள்ளும் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளும் | 66-67 |
| 21. கனத்த மௌனத்தின் பின்னும் காணவில்லை உம்மை இன்னும் | 68-69 |
| 22. அறிவியல்நகர் உருவான கதை | 70-72 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

" நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதிரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகக் கீதம்

நெல் விளையும் கழனி நிறை
கரைச்சி வளம் பெருகி
பல்லாண்டு நீடு வாழ்கவே
பலவளமும் படைத்து வாழ்கவே
(நெல் விளையும்)

பண்பாடும் கலை நலமும்
கல்விச் செல்வ வினைத்திறனும்
எல்லாரும் பெற்று வாழ்கவே
இன்ப சுகம் என்றும் மேவவே
(நெல் விளையும்)

இரணைமடுக் குளத்தால்
திரளும் திரவியங்கள்
ஏற்றத்தின் ஊற்றதாகவே
இணைத்தெழுதும் மேன்மை ஓங்கவே
(நெல் விளையும்)

அக்கராயன் முறிப்பு கரைச்சி
அபிவிருத்தி பிரதேச செயலகத்தினர்
தக்கபணி அணிபெறவே
தலைநிமிர்ந்து சிறந்து வாழ்கவே!
(நெல் விளையும்)

- கல்வயல்
கவிஞர்.வே.குமாரசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

01. திரு. த. முகுந்தன்
கலாசாரப் பேரவையின் தலைவரும்,
பிரதேச செயலாளரும்.
கரைச்சி.

02. திருமதி.மாதுகி சஜி
உதவிப் பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.




03. திரு. பூ. ராஜ்வினோத்
பிரதி திட்டமிடல் பணிப்பாளர்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.

04. திரு. சுரேஸ்குமார்
கணக்காளர்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.

05. திரு. செ.ராஜ்குமார்
கலாசாரப் பேரவையின் செயலாளரும்,
கலாசார உத்தியோகத்தரும்,
கரைச்சி.

06. திரு. ப. பரமோதயன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.

07. திரு.தி. பிரபாகரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சாமஸ்ரீ தேசமான்ய*
*நாகநாதசிவ கலாநிதி*
**சிவஸ்ரீ. அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்**
*அகில இலங்கை சமாதான நீதவான்,*
*உருத்திரபுரீஸ்வரர் ஆலய பிரதமகுரு,*
*அக்ஷய தர்ம பீடம்,*
*புளியம்பொக்கணை.*

# ஆசிச்செய்தி

ஈழமணித்திருநாடாம் இலங்கைத்தீவின் வடபால் அமைந்த இயற்கை வளம் நிறைந்த கிளிநொச்சி மாவட்டத்திலே கரைச்சிப் பிரதேச செயலகத்தினரால் வருடா வருடம் கலை கலாசார பண்பாடுகளோடு கூடிய இலக்கியப் படைப்புகளைத் தாங்கி எம் இனத்தின் தமிழ் மொழியில் இலக்கியங்களின் படைப்புத் திறன்களை உலகறியச் செய்யும் வகையில் "கரை எழில்" எனும் சிறப்புப் பெயரோடு மலரவிருக்கும் இம் மலருக்கான ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு நான் அகமகிழ்வடைகின்றேன்.

இலத்திரனியல் சாதனங்களுக்கு அடிமையாகி வாசிப்புத் திறன்களை மழுங்கடித்துச் செல்லும் இன்றைய காலகட்டத்தில் இளம் சமுதாயத்தினர்க்கு இவ் இலக்கியப் படைப்பானது மலர் வெளியீடாக வருவது பெருமைக்குரிய விடயமாகும். இலக்கியப் படைப்புகள் அருகிச் செல்லும் இவ்வேளையில் சிறந்த கலைப் படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களின் திறமைகளுக்கு ஊக்குவித்து கலைப் படைப்புகள் வெளிக்கொண்டு வரப்படுகின்றது. இம் மலர் வெளியீடானது எம் தலைமுறையோடு மட்டுமல்லாது பல தலைமுறைகள் தாண்டி வரலாற்றுச் சான்றுகளாக பகிரப்பட வேண்டியது. இவ்வாறான சிறப்பான சிந்தனைகளை முன்னிறுத்தி அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து இப்பணியை வருடா வருடம் ஏற்பாடுசெய்கின்ற கரைச்சிப் பிரதேச செயலர், கலாசாரப் பேரவையினர், உத்தியோகத்தர்கள், கலைப்படைப்பாளிகளுக்கும் மற்றும் "கரை எழில்" சிறப்பு மலர் சிறப்புற அமையவும் இம் மலர் வெளியீடானது சிறப்பாக இடம் பெறவும் வேண்டி எல்லாம் வல்ல உருத்திரபுரீஸ்வரர் திருவருளோடு கூடிய எமது நல்லாசிகளைச் சமர்ப்பித்து மகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அருட்பணி.அ.வி. சில்வெஸ்ரர்தாஸ்**
*பங்குத்தந்தை ,*
*புனித திரேசாள் ஆலயம்,*
*கிளிநொச்சிப் பங்கு.*

# ஆசிச்செய்தி

கரைச்சிப் பிரதேச கலாசாரப் பேரவையால் வருடந்தோறும் வெளியிடப்படும் "கரை எழில்" எனும் இதழ் வெளியீட்டிற்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்று அடையாளமாக, நீரும், நிலமும், செழிப்பான விவசாயக் கிராமங்களும் நிறைவாய்க் கொழிக்கும் வளம் நிறைந்த பூமியாக, பண்பாட்டுப் பாரம்பரியங்களோடும், வரலாற்று மரபியல்புகளோடும் பின்னிப் பிணைந்துள்ள பெருமை கரைச்சிப் பிரதேசத்தையே சாரும்.

கரைச்சிப் பிரதேசம் இலங்கையின் பல் சமயத் தலங்கள் அமைந்துள்ள இடமாகும். இம்மண்ணில் கலைகளும், கலாசாரமும் பாதுகாக்கப்படுவதற்காக உழைத்து வரும் கலைஞர் சமூகத்தை மதிப்பளித்து மாண்புடன் கௌரவிப்பதில் கரைச்சிப் பிரதேச கலாசாரப் பேரவை வருடந்தோறும் ஆற்றி வருகின்ற அர்ப்பணிப்பான சேவையினைப் பாராட்டுவதுடன், பிரதேச படைப்பாளிகளின் ஆக்க இலக்கியங்களைத் தாங்கிவரும் "கரை எழில்" சிறப்புற வெளிவரவும் எனது நல் வாழ்த்துகளையும், ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சு.முரளிதரன்**
*மாவட்டச் செயலாளர் /அரசாங்க அதிபர்*
*கிளிநொச்சி மாவட்டம்.*

# வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச செயலகம், பிரதேச படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு ஊக்கமளித்து தமிழர்களின் கலாசார பண்பாடுகளைக் கட்டிக்காக்கும் பெரும்பணிக்கு கலாசாரப் பேரவையில் தன் கைகொடுத்து நிற்பது வருடந்தோறும் வெளிவரும் "கரை எழில்" மலர் மூலம் வெளிக்காட்டி நிற்கின்றது.

கடந்த காலங்களிலே எம்மினத்தின் கலாசாரம் தனிமனித நடையுடை பாவனைகளிலும், உணவுப் பழக்க வழக்கங்களிலும், சமய பண்டிகை நிகழ்வுகளிலும் நிறைவாகவே வெளிப்படுத்தப்பட்டும், கட்டிப் பாதுகாக்கப்பட்டும் வந்தன. ஆனால் காலப்போக்கில் "புதியன புகுதல்" என்ற பெயரால் அத்தனையிலும் மாற்றங்களைக் கண்ட எம் சமூகத்தில் இழையோடிப்போயிருந்த இம்மரபுகள் மறைந்தும் மழுங்கடிக்கப்பட்டும் வருவது வருத்தம் தருவதாய் அமைகின்றது.

நவீன யுகத்திலே " உலகத்தோடு ஒட்டி ஒழுகல்" என்ற கூற்றிற்கிணங்க வாழப்பழகுவதில் தவறில்லை. ஆனால் அது நமது கலைப்பண்பாடுகளைக் காவுகொள்ளாது காத்துக்கொள்வது நம் ஒவ்வொருவருடைய கைகளிலும் தங்கியிருக்கின்றது. இப்பெருஞ் சவாலை எதிர்கொள்ளும் எமக்கெல்லாம் வருடந்தோறும் "கரை எழிலாய்" கையில் தவழ்ந்து கலங்கரையாய் விளங்கும் கரைச்சிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் பிரதேசப் படைப்பாளிகளின் படைப்புகள் பாராட்டி வாழ்த்த வேண்டியதே.

இனிவருங்காலங்களிலும் இம்மலர் வெளிவந்து கரைச்சியில் மாத்திரமல்லாது கலாசாரப் பிறழ்வுகளால் கறைபடிந்த சமூகம் கண்மூடும் போதெல்லாம் காலைக் கதிரவனாய் தேசமெங்கும் ஒளிவீச "கரை எழிலையும்", அதன் படைப்புகளையும், கரைச்சிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையையும் எல்லாம் வல்ல இறையருள் துணைவேண்டி மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ம.பற்றிக் டிறஞ்சன்,**
*செயலாளர்,*
*கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை*
*மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,*
*வடக்கு மாகாணம்.*

# வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி மாவட்டமானது இலங்கையின் இருபத்தைந்தாவது மாவட்டமாய் அமர்ந்து பச்சிலைப்பள்ளி, கண்டாவளை, கரைச்சி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளை தன்னகத்தே உள்ளடக்கியதான நிர்வாக மையமாகக் காணப்படு கின்றது. விவசாயத்துறையில் தன்னிறைவின் தனித்துவ அடையாளமாய்த் திகழும் கிளிநொச்சியின் கரைச்சியின் எழில் வனப்பைக் கருத்தாய்க் கொண்டு வெளிவரும் 'கரைஎழில்' மலருக்கு வாழ்த்துச்செய்தி எழுதுவதனையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

வரலாறும், பண்பாடும் இல்லாத எந்தவொரு மக்கட்கூட்டமும் உலகில் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை. அதுபோல கிளிநொச்சியின் கரைச்சிப் பிரதேசமானது தனக்கென்றொரு வரலாற்றையும் பண்பாட்டையும் கொண்டுள்ளது. இங்கே வாழுகின்ற மக்கள் விவசாயத்தில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து உணவு உற்பத்தியில் தன்னிறைவுப் பொருளாதார ஏற்றத்தில் பங்கெடுப்பவர்கள். தமது ஓய்வு நேரம் மற்றும் விவசாயத்தில் ஈடுபடும் வேளைகளில் தமது மூதாதையர் விட்டுச்சென்ற கலைகளை வெளிப்படுத்தியுள்ளனர். 'ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது' என்ற மூத்தோர் வாக்கிற்கிணங்க கலை முயற்சிகள் தொடர்ந்துள்ளமை கவனிக்கத்தக்கது. கலையும் மரபும் பண்பாட்டின் இரண்டு கண்கள். இவற்றினை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லும் முயற்சியானது நம் எல்லோரதும் வாழும் காலத்துக் கடமையாகும். அந்தவகையில் கரைச்சிப் பிரதேச செயலகமும் பண்பாட்டுப் பேரவையும் எடுத்திருக்கின்ற இம்மலராக்க முயற்சியானது பாராட்டப்படவேண்டிய தொன்றாகும்.

பண்பாட்டலுவல்கள் அலகானது, மாணவர்கள் மற்றும் சமூகத்தின் வாசிப்புப் பழக்கத்தினூடாக பல அறிவு சார்ந்த புலமையாளர்களை உருவாக்கும் நோக்கில் நூல் வெளியீடுகளை செயற்படுத்தி வருவதும், பிரதேச செயலகங்களுடன் இணைந்து ஒவ்வொரு பிரதேசங்கள் சார்ந்தும் மலர் வெளியீடுகளை ஊக்குவிப்பதும் இவற்றினூடாக பிரதேச ஆவணங்கள், வரலாறு, பண்பாடு, தொல்லியல், வாழ்வியல், இலக்கியங்கள், அறிவியல் என இன்னோரன்ன பிறவிடயங்களையும் ஆவணப்படுத்தும் நல்லதொரு பணி தொடரப்படுவதனையிட்டும் நான் பெருமையும் திருப்தியும் கொள்கின்றேன்.

எழில் மிகு கரைச்சியின் 'கரைஎழில்' மலர் வெளியீட்டின் ஆலோசகராயும் வழிகாட்டியுமாகத் திகழும் பிரதேச செயலாளர், அவரது தடத்தில் பயணிக்கும் கலாசார உத்தியோகத்தர், மலராக்கற் செயற்குழு ஆகியோரது அயராத பணியினை நெஞ்சிருத்தி அவர்களைப் பாராட்டி 'கரைஎழில்' மலர் வரலாற்று தடம் பதிக்க இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திருமதி.ந.இன்பராஜ்**
*மேலதிக அரசாங்க அதிபர்*
*கிளிநொச்சி மாவட்டம்.*

# நல்லெழில் பெற்றே "கரைஎழில் வாழ்க!

ஒரு சமூகத்தின் அல்லது பிரதேசத்தின் வாழ்வியல் முறைகளைப் படம் பிடித்துக் காட்டுவனவே அச்சமூகத்தின் அல்லது பிரதேசத்தின் பண்பாடுகளாகும். அப்பண்பாட்டு விழுமியங்களே அச்சமூகத்தின் தனித்துவத்தினை உலகிடை அடையாளப்படுத்தி நிற்கின்றன என்பது வரலாற்று உண்மையாகும். இத்தகைய விலைமதிப்பற்ற கலைகள் படைப்புக்களாக வெளிவரும் பொழுதே அக்கலை முழுமையடைகின்றது. இந்த வகையில் கரைச்சிப் பிரதேச கலாசார பேரவையால் வருடாந்தம் ஆக்க இலக்கியங்களைத் தாங்கி பொக்கிஷமாக வெளிவரும் "கரை எழில்" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் பாரம்பரிய பண்பாட்டுப் பெருமைகளையும், கலைகளையும் அழிவடையாமல் பாதுகாக்கும் நோக்கிலும் வரலாற்று வெள்ளத்தில் வழிந்தோடிவிடாது அணையிட்டுப்பாதுகாத்து நூல் வடிவாக்கி மரபு பிறழாது எதிர்கால சந்ததியினருக்கு உரிய முறையில் கையளிப்பதற்கும் இவ்வாறான மலர்கள் வெளிவருவது பெருந்துணை புரியும் என்பது யாரும் மறுக்கமுடியாததொன்றாகும்.

காலத்தின் தேவையறிந்து சமூகத்தின் கலாசாரப் பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தும் ஆக்கங்களைத் தன்னகத்தே சேமித்து "கரைஎழில்" மலர் வெளிவருவது பாராட்டத்தக்க விடயமாகும் என்பதுடன் தொடர்ந்துவரும் காலங்களிலும் இம்மலர் நறுமணங்கமழ இனிதே மலரவேண்டும் என இறையாசியினையும் வேண்டிக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லா.நிருபராஷ்
பிரதிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் அலகு ,
வடக்குமாகாணம்.

# வாழ்த்துச்செய்தி

கரைச்சிப் பிரதேசத்தின் எழிலாய் ஓங்கி நிற்கும் "கரைஎழிலே" நீ வாழி! கிளிநொச்சி மாவட்டத்தின் முத்தாய்ப்பான பிரதேசமாக விளங்குவது கரைச்சி ஆகும். வடக்கே பச்சிலைப்பள்ளியினையும் மேற்கே பூநகரியினையும், கிழக்கே கண்டாவளையினையும் எல்லைகளாகக் கொண்டமைந்து கிளிநொச்சி மாவட்டத்தின் மையப்பகுதியின் நிர்வாக மையமாக விளங்குகிறது. கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவு மிகவும் அழகியதும் வளமான நீர்நிலைகளையும் பயிர்செய் நிலங்களையும், நீண்டு நிலைத்துப் பயன் தருகின்ற தாவர இனங்களையும் வரலாற்று முக்கியத்துவமுடைய ஆலயங்களையும், அக்கராயன், ஊற்றுப்புலம் போன்ற தொல்லியல் மையங்களையும் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது. இத்தகு சிறப்புடைய கரைச்சி பிரதேசத்திலிருந்து வருடந்தோறும் வெளிவருகின்ற "கரைஎழில்" என்னும் மலருக்கு வாழ்த்து எழுதுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்வடைகின்றேன்.

கரைச்சியின் வனப்பும் ஆளுமையும் கிளிநொச்சி மாவட்டத்திற்குரிய தனித்துவமாகும். இரணைமடுக்குளம் கிளிநொச்சியின் எல்லையில் அமைந்து கிளிநொச்சிக்கே பெரும் பங்களிப்பினை நல்கும் வளமாகும். இராமநாதபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி நகரம், அக்கராயன், திருநகர், திருவையாறு, உருத்திரபுரம், கனகபுரம் என்னும் பெயர் கொண்டமைந்த கிராமங்கள் கரைச்சியின் எழில் கொஞ்சும் பிரதேசங்களாகும். இங்கு வாழும் மக்கள் மிகவும் பயனுறுதி மிக்க உழைப்பாளர்கள் ஆவர். சற்றேனும் தமது நேரத்தை வீணடிக்காத பயனுள்ள முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்தி வாழ்வின் உயர்ச்சிக்கு முன்னுதாரணமாய் அமர்ந்தவர்கள். இத்தகைய சிறப்பும் வனப்புமுடைய கரைச்சியின் வரலாற்று மலர் கரைஎழிலின் வரவு காலத்தின் ஞாலச்சிறந்த பணியாகும்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகானது பிரதேச செயலகங்களுடன் இணைந்து ஆக்கபூர்வமான மலர் வெளியீடுகளில் கவனம் செலுத்தி தரமான படைப்புகளை வெளிக்கொண்டு வருவதுடன் அப்பிரதேசத்தினுடைய கலைகளினது மேம்பாட்டிற்கான செயற்திட்டங்களையும் உபாயங்களையும் வகுத்து செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் பிரதேச பண்பாட்டின் அடையாளமாய் அவற்றின் வெளிப்பாட்டினை ஏனையவர்களும் அறிந்து கொள்ளும் வகையிலான ஏற்பாடாக செயற்படுத்தப்பட்டு வருகின்றதே பிரதேச மலர் வெளியீடாகும். அதனடிப்படையில் கரைச்சி பிரதேச செயலக கலாசாரப் பேரவையினர் வெளியிடவுள்ள கரைஎழில் மலர் இப்பிரதேசத்தின் வளங்களையும், தொல்லியல் எச்சங்களையும், ஆன்மீகம், வரலாறு, பொருளாதாரவளம் மற்றும் சமூகவியல் நடவடிக்கைகளை உள்ளடக்கியதான ஆக்கங்களைத்தாங்கி சிறந்த வெளியீடாக அமைக்கப்பட்டுள்ளமை பாராட்டிற்குரியது.

இம்மலர் சிறப்புற வெளிவருவதற்கு மனதார வாழ்த்துவதுடன் நூல் வெளியீட்டிற்கு ஒத்துழைப்பு நல்கிய பிரதேச செயலாளரையும், கலாசார உத்தியோகத்தர், மலர்க்குழுவினர், மலருக்கான ஆக்கங்களை வழங்கியவர்கள் என அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் 'கரை எழில்' இதழ் சிறப்பாக வெளிவந்து கரைச்சிப் பிரதேசத்தின் அடையாளமாய்த் திகழ என் மனம் நிறைந்த வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**த. முகுந்தன்**
*பிரதேச செயலாளர்,*
*கரைச்சி.*

# கலைவிளை பூமி கரைச்சி

கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மைமிகு அடையாளங்களை தன்னகத்தே தாங்கி சிறப்புடன் பொலிகிறது கரைச்சி. பண்பாட்டுப் பெருமையும் கலாசாரச் செழுமையும் கொண்ட மக்கள் செறிந்து வாழும் எமது பிரதேசத்தின் பண்பாட்டு கூறுகளை எடுத்தியம்பும் விதத்தில் கரைஎழில் - 08 இன்று உங்கள் கைகளில் தவழ்கிறது.

நீண்ட நெடிய தமிழர் தம் போராட்ட வரலாற்றில் முத்திரை பதித்து நின்ற கிளிநொச்சி, காலத்துக்குக் காலம் தன் வனப்பையும் வளத்தையும் முற்றாகவே இழந்து சிதைந்து போனது. ஆனாலும் உள்ளத்தில் ஊக்கமும் உடலில் உரமும் மிக்கோர் வாழும் எம் தேசம் வீழ்ந்தபோதெல்லாம் வீறுடன் எழுந்து கொண்டதே வரலாறு. 2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் நிறைவடைந்த பின்னர் எம் தேசம் பல்துறைகளிலும் துரிதமான வளர்ச்சி கண்டது. அவ்வகையில் பண்பாட்டு, கலாசார அம்சங்கள் செழுமை பெற்று வீறுடன் உயர்ந்து நிற்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில், நிலப்பரப்பில் ஏறத்தாழ ஐம்பது வீதத்தையும், சனத்தொகையில் ஏறத்தாழ அறுபது வீதத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் கரைச்சிப் பிரதேசம் கிளிநொச்சி மாவட்டத்தின் அடையாளங்களில் ஒன்றாகிப்போனது. இம்மக்களின் வாழ்வியலும் கலை, கலாசார, பண்பாட்டு விழுமிய அம்சங்களும் எங்கள் மாவட்டத்தின் அடையாளங்களென்றே நோக்கப்படுகின்றன.

எங்கள் மொழியையும் எங்கள் வாழ்வையும், எங்கள் வளத்தையும் பறைசாற்றும் வகையில் எம் பிரதேசத்தின் ஆக்ககர்த்தாக்களால் புனையப்பட்ட படைப்புகள் கரைஎழிலாக உங்கள் கரங்களில் தவழ்கிறது. ஆதரவு தந்து ஊக்கமளித்த உங்கள் அனைவருக்கும் நன்றி.

**"தமிழே உயிரே வணக்கம்**
**தாய் பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்"**

- கவிஞர் காசி ஆனந்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

நீர்வளமும் நிலவளமும் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசமானது வயல் வெளிகளையும், இரணைமடுக் குளத்தின் மிக அழகிய நீர் வளத்தையும் கொண்ட கலைகள் ஓங்கி விளங்கும் பிரதேசமாகவும் விளங்குகின்றது. இவ்வாறான சிறப்பியல்புகள் கொண்ட எமது பிரதேசத்தில் வாழ்கின்ற கலைஞர்கள் எழுத்தாளர்கள் கலை இலக்கிய ஆர்வலர்களை மேம்படுத்தும் நோக்கில் கரை எழில் இதழானது இதுவரை 07 நூல்கள் வெளிவந்தமை மகிழ்ச்சியானது.

எமது கலாசாரப் பேரவையானது இம்மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கலைஞர்களினதும் இப்பிரதேசத்தில் சேவையாற்றி வருபவர்களினதும் படைப்புக்களாலே அமைய வேண்டும் என்ற திண்ணிய எண்ணம் எமக்குண்டு. அவ் எண்ணம் இந்நூலுக்கும் நிதர்சனமாகின்றது. கரை எழில் 08 இதழாக வெளிவரும் இந்நூல் பிரதேசம் சார் கலை இலக்கியம், ஆன்மிகம், மரபுரிமைகள், பண்பாட்டு வாழ்வியல் அம்சங்கள் மற்றும் வரலாறு சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய ஆவணப்படைப்பாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பிரதேச கலாசார விழா மற்றும் "கரை எழில்" இதழ் 08 வெளியீட்டுக்கும் காத்திரமான அனுசரணை வழங்கிய அனைத்து புரவலர்களுக்கும் எமது இவ் முயற்சிக்கு ஆதரவையும் ஊக்கப்படுத்லையும் வழங்குகின்ற பொதுமக்கள், ஆர்வலர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்புக்கள் ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளை இம்மலர் வெளியீட்டுக்காக ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள், ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும் நூலினை நேர்த்தியாகப் பதிப்பித்த வேழன் பதிப்பகத்தினருக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதில் நிறைவடைகின்றோம்.

– மலர்க்குழு –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HURU HARDWARE

# குரு ஹாட்வெயார்

## AUTHORIZED DISTRIBUTOR

LAUGFS LUBRICANTS

No:175, Karadipokku Junction ,A-9 Road, Kilinochchi   TP: 077 869 1045




கலாசார விழா சிறப்புற வாழ்த்துகிறோம்..

# Thavam GUEST HOUSE

No: 175, 1st Floor,
Karadipokku Junction, Kilinochchi

Email: sivakumarannada@gmail.com

021 228 5444
077 869 1045/ 076 757 5348

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சியில் கலைகள் செழித்து ஓங்கட்டும்..

SFC
SUN FURNIY CITY

# Sun Furniy City

*We'll make your dreams come true*

**All Kinds of Home & Office Furniture, Office Equipments, Computers, Home & Kitchen Appliances, Stationeries, Toys, Sports & Musical instruments Available.**



**Kilinochchi Showroom:**
Infront of Old Hospital #315, A9 Road, Kilinochchi.
T.P : 0773 526 810 / 021 492 7630

**Puthukudiyiruppu Showroom:**
Puthukudiyiruppu Junction, Mullaitivu.
T.P : 076 768 3742 / 021 492 7634

**Vavuniya Showroom:**
Infront of New Bus stand, A9 Road, Vavuniya.
T.P : 021 492 7633/ 076 776 6810

**Mullaitivu Showroom:**
Infront of District Hospital, Mulliyawalai,
T.P : 077 507 0130 / 021 492 7632



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின்
# சைவசமய வரலாற்றில் தொன்மைமிகு
# உருத்திரபுரீசுவரர் சிவாலயம்

## ஒரு வரலாற்று நோக்கு..

### வரலாற்றுப் பின்னணி

ஈழத்தைச் சிவபூமி என்று குறிப்பிட்டதிலிருந்து ஈழத்தில் சைவசமயத்தின் தொன்மையை அறியமுடிகின்றது. இலங்கையின் பூர்வீகக் குடிகளான இயக்கரும், நாகரும் சிவனை வழிபட்டனர். அவ்வாறே இலங்கையில் இந்துசமய வரலாற்றை இதிகாச காலம், ஆதிக்குடிகள் காலம், விஜயன் முதல் தேவநம்பியதீசன் வரையுள்ள இந்து அரசர்கள் காலம், பௌத்தமத வருகையின் பின்னர் ஏற்பட்ட சிங்கள பௌத்த அரசர்கள் காலம், சோழ பாண்டிய அரசர்கள் காலம், யாழ்ப்பாண அரசர்கள் காலம், போர்த்துக்கேயர் காலம் ஒல்லாந்தர் காலம், பிரித்தானியர் காலம், சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலம் என்று பல்வேறாகப் பிரித்து நோக்கலாம். எவ்வாறாயினும் மக்கள் இந்த நாட்டில் வாழத் தொடங்கிய காலந்தொட்டு பௌத்தம் இந்த நாட்டுக்கு வந்த நாள்வரை இந்த நாடு முழுவதும் வணங்கி வந்தது இந்துமதமே எனக் கொள்ளல் தகும்.

இந்நாட்டின் ஆதிக்குடியினராகிய இயக்கர் பூத வழிபாட்டினையும், நாகர் நாக வழிபாட்டினையும் பேணினர். இத்தகைய நாக வழிபாட்டின் தொடர்ச்சியை திருக்கேதீச்சரம், நயினை நாகபூசணி அம்மன் கோயில் மற்றும் நாகதம்பிரான் ஆலயங்கள் வாயிலாக இனங்காணலாம். இதன் நீட்சியாகவே கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரீசுவரர் சிவாலயமும் நாகர்களால் வழிபடப்பட்டு சோழ மன்னர்களால் பராமரிக்கப்பட்டுவந்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சிவத்தலமாகப் போற்றப்படுகிறது.

திருமூலரால் சிவபூமி எனச் சிறப்பிக்கப்பட்ட ஈழவளத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள வடக்கு மாகாணத்தின் நெற்களஞ்சியமாகத் திகழும் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேசத்தில் உருத்திரபுரம் என்னும் திருப்பதியில் உருத்திரபுரீஸ்வரர் சிவாலயம் அமையப்பெற்றுள்ளது. இச் சிவாலயமானது சோழர் காலத்திற்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்ட சதுர வடிவமான ஆவுடையாரைக் கொண்டதும், சிவபூமியான இலங்கையில் உள்ள சப்த ஈச்சரங்களுள் ஒன்றாகத் திகழ்வதுமான வரலாற்றுச் சிறப்பைத் தன்னகத்தே கொண்டதுமான புண்ணியத் தலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர் காலத்திற்கு முன்பே இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட பளிங்குக் கற்களாலும், கருங்கற் சிற்பங்களாலும் கட்டப்பட்டு பின்னர் இயற்கை அழிவுகளாலும், அந்நியமத ஆக்கிரமிப்புக்களாலும், அந்நிய படையெடுப்புக்களாலும் இச் சிவாலயம் அழிவுற்றது என்பதை எஞ்சிய சிதைவுகள் நிரூபிக்கின்றன.

இந்து மதத்தின் அங்கமொன்றான சைவசமயமானது சீரோடும் சிறப்போடும் திளைத்திருந்த பல இடங்களுள் ஈழத்தின் வரலாற்றுப் பெருமைவாய்ந்த சப்த ஈச்சரங்களுள் ஒன்றான உருத்திரபுரீச்சரம் அமையப்பெற்றுள்ள உருத்திரபுரப் பிரதேசமும் இந்துப் பண்பாடு செழிப்புற்றிருந்த, சிறந்த நாகரீகம் நிலவியிருந்த இடமொன்றாகக் கொள்வதில் தவறில்லை.

இச் சிவாலயத்தின் வரலாற்றுத் தொன்மையையும், சிறப்பினையும் கருத்திற் கொண்டே கல்வி அமைச்சினால் 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலைக் கலைத்திட்டத்தில் தரம் 11 மாணவர்களுக்கான சைவநெறிப் பாடத்தில் 'வன்னிச் சிற்றரசர் கால ஆலயங்களின் வரலாறு தொடர்பான அலகில் உருத்திரபுரீசுவரர் சிவாலயத்தினையும் உள்ளடக்கியதன் மூலம் அதன் தொன்மத்தையும், சிறப்பையும் இளைய தலைமுறையினரும் அறிந்துகொள்ள அடிகோலியது.

## இலங்கையில் சைவசமயம் – வளர்ச்சியும் செழிப்பும்

வரலாற்றைத் திரும்பிப் பார்க்கின் பௌத்தம் இலங்கைக்கு வந்தபின்னரும் பௌத்த மதத்தைத் தழுவிக்கொண்ட சிங்கள அரசர்களுள் மகாசேனன் தவிர ஏனையோர் யாவரும் இந்து மதத்திற்கும் பலவித ஆதரவுகளை நல்கியுள்ளனர் என்பதுடன் சிவாலயங்கள் பலவற்றைக் கட்டியுமுள்ளனர். குறிப்பாக 2ஆம் விக்கிரமபாகு, 2ஆம் கஜபாகு, 1ஆம் பராக்கிரமபாகு, 1ஆம் இராஜசிங்கன், புவனேகபாகு போன்ற அரசர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். முதலாம் பராக்கிரமபாகு 13 இந்து ஆலயங்களைக் கட்டுவித்தான் என்றும், 79 ஆலயங்களை திருத்திப் புனரமைத்தான் என்றும் வரலாறு கூறுகின்றது. 1ஆம் இராஜசிங்கனே கதிர்காம முருகன் ஆலயத்தைக் கட்டுவித்தான் எனவும், அவன் தன் ஆட்சிக் காலத்திலே 48 பத்தினிக் கோயில்களை அதாவது கண்ணகி அம்மன் கோவில்களைக் கட்டுவித்தான் எனவும் கூறப்படுகின்றது. அவ்வாறே 1450 இல் நல்லூரில் முருகனுக்கு கோயிலொன்றைக் கட்டுவித்தவன் புவனேகபாகு எனவும் கூறப்படுகின்றது.

ஈழத்துச் சைவமரபு பற்றி ஆராயும் போது விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரும், பின்னரும் இந்நாட்டில் சைவம் செழிப்புற்றிருந்ததென சங்கைக்குரிய வல்பொல இராகுல தேரர் எழுதிய 'இலங்கையில் பௌத்த வரலாறு' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. டபிள்யூ ரெனற் என்பவர் எழுதிய 'இலங்கைச் சரித்திரம்' என்ற நூலில் இலங்கையில் ஆதியில் குடியேறியவர்கள் சைவர்களே எனக் கூறுகின்றார். உருகுணைத் தேசிய பூங்காவில் கண்டெடுக்கப்பட்ட கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திற்குரியதென அடையாளப்படுத்தப்பட்ட கல்வெட்டொன்றில் 'சிவநகர்' என்ற இடப்பெயர் குறிப்பிடப்பட்டிருந்தமை இவற்றிற்குச் சான்றளிக்கின்றன. யாழ்ப்பாண வைபவமாலையில் விஜயன் இலங்கையின் அரசாட்சியை ஏற்றபின் பழைய சிவாலயங்களைப் புனரமைத்தான் என்றும், பாதுகாப்பிற்காக நாட்டின் நாற்புறமும் ஐந்து புதிய சிவாலயங்களை அமைத்தானென்றும் கூறப்படுவதிலிருந்து அவையே பண்டைய ஈச்சரங்களான கிழக்கில் திருக்கோணேச்சரமும், மேற்கில் திருக்கேதீச்சரம் மற்றும் முன்னேச்சரமும், வடக்கில் திருத்தம்பலேச்சரமும் (நகுலேச்சரம்) தெற்கில் சந்திரசேகரீச்சரமும் அமைக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. இக்கூற்றுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக சேர்.போல் பீரிஸ் எனும் சிங்கள வரலாற்றாசிரியரின் கருத்தும் அமைகின்றது. அந்த வகையில் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சைவசமயம் நிலைபெற்றிருந்ததை நிறுவும் சாட்சியங்களாக இவை அமைகின்றன.

அனுராதபுர இராசதானி காலத்தில் (கி.மு.4 தொடக்கம் கி.பி.10 ஆம் நூற்றாண்டு) சைவசமயம் செல்வாக்குப் பெற்றிருந்தது. விஜயனுக்குப் பின்னர் அநுராதபுரத்தை ஆட்சி செய்த பண்டுவாசுதேவன், அபயன், பண்டுகாபயன் முதலிய அரசர்களும் சைவர்களாகவே இருந்திருக்கின்றனர். கி.மு. 145 தொடக்கம் 101 வரையான காலத்தில் அநுராதபுரத்தை ஆட்சி செய்த எல்லாளன் என்னும் தமிழ் மன்னனது காலத்தில் சைவம் சிறப்புப்பெற்று விளங்கியதை அறியமுடிகின்றது.

தேவநம்பியதீசனுக்கு முன்னர் இலங்கையை ஆண்ட மன்னர்களது பெயர்களில் 'சிவ' எனும் பிற்சேர்க்கை அமைந்திருந்ததை அவதானிக்க முடியும். உதாரணமாக கிரிகண்டசிவன், மகாசிவன், மூத்தசிவன் என்போர் அவர்களுள் குறிப்பிடத்தக்கோராவர். இவர்கள் சிங்கள மன்னர்களாக இருந்தபோதிலும் சைவர்களாக விளங்கியுள்ளனர். மேலும் பிராமிக் கல்வெட்டுக்கள் வாயிலாகவும் அக்காலத்தில் சைவம் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. இருபத்தியிரண்டுக்கும் மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் பிராமணர்கள் பற்றிய செய்தியும், சுமார் அறுபதுக்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் 'சிவ' என்ற அடைமொழியும் காணப்படுகின்றன.

அக்கால சிங்கள அரசர்கள் சிலர் தமிழக இளவரசியரை மணம்புரிந்து கொண்டமை, மற்றும் பிராமணர்கள் பலர் சிங்கள அரசர்களின் ஆசிரியர்களாகவும், அரசவை புரோகிதர்களாகவும், ஆலோசகர்களாகவும் அமர்த்தப்பட்டமை மேலும் சமஸ்கிருத கல்விக்கு இடமளிக்கப்பட்டமை போன்ற பல்வேறு காரணங்களால் அக்கால அரசர்கள் இந்துசமயத்தில் ஈடுபாடு காட்டவும், அதனைப் பேணிப் பாதுகாக்க முன்வரவும், இந்து கலாசாரங்களைத் தாமும் அனுட்டிக்கவும் செய்தனர் எனலாம். சிங்கள அரசர்கள் இந்து மதத்திற்கு ஆதரவு நல்கியதைப் போலவே தமிழரசர்கள் ஆட்சி செய்த காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த மதத்திற்கு நீதி வழங்கி, வேண்டிய ஆதரவுகளை நல்கியுள்ளனர் என்பதனையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

அவ்வாறே பொலநறுவைக் காலப்பகுதியில் (கி.பி.11 தொடக்கம் 13 ஆம் நூற்றாண்டு முன்னரிலும் பார்க்க ஈழத்தின் பல பாகங்களிலும் சோழ மன்னர்களால் சிவாலயங்கள் கட்டப்பட்டன. பொலநறுவையில் மட்டும் பத்துச் சிவாலயங்கள், ஐந்து விஷ்ணு ஆலயங்கள், ஒரு காளி கோவில் என்பன கட்டப்பட்டிருந்ததை புதைபொருள் ஆய்வுகள் மூலம் அறியமுடிகின்றது. இவற்றுள் இரண்டாம் சிவாலயம் இராஜராஜனின் மனைவியின் பெயரால் 'வானவன்மாதேவி ஈச்சரம்' என அழைக்கப்பட்டது. இங்கு தினமும் ஆகம விதிமுறைப்படி பூசைகள் நடைபெற்று வந்துள்ளமையை கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறு சிங்கள அரசர்கள் ஆண்ட காலமாயினும் சரி, தமிழரசர்கள் ஆண்ட காலமாயினும் சரி பல நூற்றாண்டுகளாக இலங்கையில் சிறப்புற்று விளங்கி வந்த சைவசமயத்திற்கு கலிங்கமாகனது பெரும் படையெடுப்பு ஒன்றுடன் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்ட ரஜரட்டை இராச்சியம் சிதறுண்டு, சமய, பண்பாட்டு நிறுவனங்கள் கைவிடப்பட்டு மக்கள் வாழ முடியாத சூழல் தோற்றம் பெற்றமையை அடுத்து இந்து ஆலயங்கள் பல கைவிடப்பட்டு அடர்ந்த காடுகளால் மூடப்பட்டன. இந்நிலையானது 19ஆம் நூற்றாண்டு வரைக்கும் நீடித்திருந்தது.

## சைவசமய வளர்ச்சிக்குத் தடையான ஐரோப்பிய இனத்தவரின் ஆதிக்கம்

போர்த்துக்கேயரது வருகை மற்றும் அவருக்குப் பின்னர் வந்த ஒல்லாந்தராலும் பல்வேறு இன்னல்கள் விளைந்தன. இந்து மதத்தை இந்நாட்டிலிருந்து அழித்தொழிப்பதற்கு அவர்கள் காட்டிய வேகத்திற்கும் அதன் பொருட்டு அவர்கள் இழைத்த கொடுமைகளையும் நோக்கும் போது இந்து சமயம் இந்நாட்டில் மீண்டுமொருபோதும் தலையெடுக்க முடியாமல் அழிந்து போயிருக்குமென்றே சொல்ல வேண்டும்.

போர்த்துக்கேயர் இலங்கையின் வடகரையில் இறங்கியபோது இலங்கையில் இந்துசமயம் செல்வாக்குப்பெற்றுத் தளைத்தோங்கியிருந்தது. இந்துக்களின் வழிபாட்டிடமான ஆலயங்கள் பலவும் ஆன்மிக நிலைக்களன்களாக விரவியிருந்திருக்கின்றன. எமேர்சன் ரெனந்தின் கூற்றை இங்கு நோக்குமிடத்து 'யாழ்ப்பாணத்தை பலவந்தமாகக் கைப்பற்றி அங்கே ஆட்சி செய்த மலபார் அரச பரம்பரை அரசுரிமையை ஒழித்து நேரடியான ஆட்சியை 1617 வரையிலும் போர்த்துக்கேயர் ஏற்படுத்தவில்லை. தமது வணிகப் பெருக்கத்திற்குத் துணைபுரிந்த வளம்மிக்க தென் மாகாணங்களிலும் பார்க்கத் தங்கள் குடியேற்றத்திற்குப் பாதுகாப்பளிக்கத் தகுதியுடையதாகவிருந்த யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் நீண்டகாலமாகவே விரும்பி வந்ததுடன் தமது ஆட்சிக்குப் பணியாத அப்பிரதேசத்தில் தமது மதத்தைப் பரப்பவும் பாடுபட்டனர். இப் பகுதியைக் கைப்பற்ற 1544 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் முயன்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தலைவனை தம் கீழ் சிற்றரசனாக இருந்து கப்பங்கட்டுமாறு வற்புறுத்தினர். அதை விரும்பாதவிடத்து அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மோடு போரிடத் தயாராக வேண்டும் என்றும் கூறினர். அத்தலைவன் முன்னையதற்கு இணங்கி ஆண்டொன்றுக்கு 4,000 டுக்கட்ஸ்க் கப்பங் கட்ட இசைந்தான். அதே ஆண்டில் மன்னார்ப் பகுதி மக்கள் பலர் வண.பிரான்சிஸ் சேவியரின் ஆணையின் கீழ் உரோமன் கத்தோலிக்கராக மாறினர். யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன் மத மாற்றத்தை வேரறுக்க, மதம்மாறிய அறுநூறு பேர்களைக் கொன்று ஒழித்தான். ஏன் மதம் மாறிய தனது தனயனின் தலையையே கொய்துவிட்டான். இதனைக் கண்ணுற்ற இரண்டாவது மகன் தன் தந்தைக்குப் பயந்து கோவா சென்று அங்கே சரணடைந்தான்.'

இவ்வாறு வரம்பு மீறி கொடுமைகள் செய்த அரசனுக்கு உறுதியான, மெதுவான ஆனால் கடுமையான தண்டனை அளிக்கும்படி மூன்றாம் ஜோன் இந்திய வைஸ்ரோய்க்குக் கட்டளையிட்டான். இதனால் மன்னார்ப் பகுதியிலிருந்த கிறிஸ்தவர்கள் முன்போல தொல்லைக்கு உள்ளானார்கள் என்றும் கோவாவிற்கு ஓடிச்சென்றவனின் அண்ணனுடைய அரசுரிமை பறிக்கப்பட்டது என்றும் இரு காரணங்களைக் காட்டி 1560 ஆம் ஆண்டில் இந்திய வைஸ்ரோய் டொன் கொன்ஸ்டான்ரைன் டி பிரகன்ச யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது போர் தொடுத்தான். மேலும் யாழ்ப்பாண அரசன் சிங்களவர்களோடு சேர்ந்து போர்த்துக்கேயர்களுக்கு எதிராக உதவி மேலும் யாழ்ப்பாண அரசன் சிங்களவர்களோடு சேர்ந்து போர்த்துக்கேயர்களுக்கு எதிராக உதவி செய்தான் என்ற குற்றத்திற்காக 1591 ஆம் ஆண்டிலும் 1604 ஆம் ஆண்டிலும் கோவாவிலிருந்து படைகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. அப்போர்களில் வலி குன்றிய அரசன் ஒவ்வொருமுறையும் பணிந்து சென்றமையால் பயமுறுத்தலின் அபாயம் குறைந்தது. அதனால் யாழ்ப்பாணப் பகுதி தமக்கு உரித்தானது என்று போர்த்துக்கேயர் கொண்டிருந்த எண்ணம் போர்களின் நிலைமைக்கு ஏற்ப சிறிது சிறிதாகப் பிற்போடப்பட்டது. ஆனால் 1617 ஆம் ஆண்டில் கொன்ஸ்டன்டைன் டி சாய் நொரோனா இன் அரசியற் தூதரின் கீழ் படையொன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது. அப்படை அநாகரிகமான முறையில் போர் செய்து நகரைக் கைப்பற்றியது மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்து மன்னனை கோவாவிற்கு கைதியாகக் கொண்டு சென்று அங்கே அவனைச் சிரச்சேதம் செய்தது. இதனால் அவனது மருமகனான மலபார் அரச பரம்பரையைச் சேர்ந்த கடைசி இளவரசன் தன் அரசுரிமையை இழந்து பிரான்சிஸ்கன் மடத்தில் சேர்ந்தான். 'அவனது உடைமைகள் அனைத்தும் போர்த்துக்கேயருக்கே ஆயது' என்று எமர்சன் ரெனந்து எடுத்துக்கூறியுள்ளார்.

போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் இந்து ஆலயங்கள் கொள்ளையிடப்பட்டு இடித்தழிக்கப்பட்டன. போர்த்துக்கேய ஆசிரியரான குவைரோஸ் அடிகளார் தனது நூலில் யாழ்ப்பாணத்தில் இருந்த 500 இற்கு மேற்பட்ட இந்து ஆலயங்களை இடித்தழித்து அவற்றின் கற்களைக் கொண்டு கோட்டைகள், கிறிஸ்தவ ஆலயங்கள் கட்டியதாகக் கூறுகின்றார். அதை யாழ்ப்பாணக் கோட்டையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அகழ்வாராய்ச்சிகள் உறுதிசெய்கின்றன. மேலும் மன்னாரில் வாழ்ந்த மக்கள் போர்த்துக்கேயரால் மதமாற்றம் செய்யப்பட்டனர் மட்டுமல்லாது பாலாவியிலிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீச்சரம் போர்த்துக்கேயரால் கொள்ளையடிக்கப்பட்டது. அத்துடன் அது இடித்து அதன் கற்களை எடுத்துச் சென்று மன்னார்த் துறைமுகத்தை போர்த்துக்கேயர் கட்டினர். இவ்வாறு திருக்கேதீச்சரத்தில் போர்த்துக்கேயர் செய்த கொடுமைகளைக் கண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த அரசன் கடுஞ்சினங் கொண்டு போர்த்துக்கேயரை பழிக்குப்பழிவாங்க எண்ணினான். ஆனாலும் அவனது முயற்சி அடக்கியொடுக்கப்பட்டது. யாவும் படுகொலையில் முடிந்தது. அதனைத் தொடர்ந்து மேலும் நடந்த செயல்கள் அன்றைய சமய நிலையில் பெருஞ்சீரழிவை உண்டுபண்ணியது என்றே கூறலாம். போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசை வெற்றிகொண்டதைத் தொடர்ந்து 1621 இல் வடஇலங்கை போர்த்துக்கேயரின் முழுமையான மேலாதிக்கத்திற்கு உட்பட்டது. எவ்வாறாயினும் இக் காலத்திற்கு முன்னரே வடஇலங்கையின் சில பாகங்கள் போர்த்துக்கேயரின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தாலும் யாழ்ப்பாண அரசை வெற்றிகொண்டதன் பின்னர் அதுவரை சுதந்திரமாக வாழ்ந்த மக்கள் தமது ஆட்சியை இழந்து அடிமைகளாகினர்.

போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஒல்லாந்தரும் (1658-1797) பின் ஆங்கிலேயரும் (1797-1948) இங்கு ஆட்சி புரிந்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியில் வன்னிப் பிராந்தியம் முழுமையாக அவர்களின் கட்டுப்பாட்டுக்கு வராவிட்டாலும் வன்னியின் கரையோரப் பகுதிகள் அவர்களின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தது. ஒல்லாந்தரை அடுத்து வந்த ஆங்கிலேயரின் ஆதிக்கத்தால் சைவம் என்னும் ஒளிர் வானில் இருள்மேகங்கள் சூழ்ந்து சைவத்தின் மகிமை குன்றத் தொடங்கியது. இவ்வாறாக வட இலங்கையின் 350 ஆண்டுகால வரலாறு பொதுவாக குன்றத் தொடங்கியது. இவ்வாறாக வட இலங்கையின் 350 ஆண்டுகால வரலாறு பொதுவாக ஐரோப்பியர் ஆட்சிக்கு உட்பட்ட வரலாறாக மாறியது எனலாம். ஒட்டுமொத்தத்தில் வட இலங்கையில் ஐரோப்பியர் ஆட்சியால் புதிதாக கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதங்கள், போர்த்துக்கேய, டச்சு மொழிகள், கல்விமுறைகள், கலைகள், உணவு முறைகள், உடைகள், வாழ்க்கை முறைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் என்பனவும் சுதேசிகளிடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.

## அகழ்வாராய்ச்சிகளும் சைவசமய மறுமலர்ச்சியும்

இலங்கையில் காலத்துக்குக் காலம் பல்வேறு இடங்களிலும் இந்துமத புராதன சின்னங்களும், விக்கிரகங்களும் அகழ்வாராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்ற பின்னணியில் அவற்றுள் சில மிகப்பழங்காலத்தவை. அவற்றுள் பல போர்த்துக்கேயர்கள் இந்துக் கோயில்களை அழித்தபோது மண்ணுள்ளே புதைந்தவையும், புதைக்கப்பட்டவையுமாகும்.

அநுராதபுரக் காலத்தில் பல சைவ ஆலயங்கள் அமைக்கப்பட்டமை பற்றி எச்.சி.பி. பெல் என்ற தொல்பொருளாய்வாளரின் கருத்துக்கள் மூலம் அறியமுடிகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் அநுராதபுரம் ஜேதவனராமய, விஜயராமய விகாரைகளுக்கு அண்மையிலிருந்து பல சைவத்திருவுருவங்களான சிவலிங்கம், துர்க்கை, விஷ்ணு, சூரியன் ஆகிய சிற்பங்களும் சந்திரசேகரர், உமாதேவி சமேத நடேசர், பார்வதி, வீரபத்திரர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவளநாயகி, நாகதம்பிரான், உமாமகேஸ்வரர், யோகா தட்சிணாமூர்த்தி ஆகிய செப்பால் அமைக்கப்பட்ட வார்ப்பு விக்கிரகங்களும் புதைபொருளாய்வின் மூலம் பெறப்பட்டுள்ளன. அவ்வாறே 1908 ஆம் ஆண்டு பொலநறுவையில் கண்டெடுக்கப்பட்ட சோமஸ்கந்த மூர்த்தி, சிவகாமி, நடராஜர் ஆகிய சிற்பங்கள் அற்புதமானவை.

அவ்வாறே இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் சிற்பங்களுள் ஆண், பெண் உருவங்கள், சிலைகள், சிற்பங்கள், மிருக தாவர உருவங்கள் என்பன கிளிநொச்சியில் இரணைமடு, உருத்திரபுரம், பூநகரி முதலான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. ஆண் பெண் உருவங்களுடன் இலிங்க வடிவில் அமைந்த பல சுடுமண் உருவங்களில் எண்ணிக்கையில் அதிகமானவை உருத்திரபுரப் பிரதேசத்திலிருந்தே கலாநிதி சிரான் தெரணியகல என்ற தொல்லியல் ஆய்வாளரால் சேகரிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவற்றை ஆய்வு செய்த ஆய்வாளர் இலங்கையில் தாய்த்தெய்வ வழிபாட்டின் தொன்மைக்குச் சான்று பகர்வனவாய் அமைந்திருப்பதுடன் இங்கே கிடைத்த லிங்க உருவங்களும், சூலம் பொறித்த மட்பாண்டங்களும் இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னரே சிவவழிபாடு இருந்தமைக்கான சான்றாதாரமாகும்.

ஐரோப்பியர் காலத்தில் தேவாலயமணி ஒன்றைச் செய்வதற்குத் தேவை எழுந்த போது இடையர் குலச்சிறுவனால் அடையாளம் காணப்பட்ட உருத்திரபுரீச்சர சிவாலய வளாகத்தில் புதையுண்டிருந்த 20 விக்கிரகங்களை உருக்கி ஆலய மணியை செய்ததாக போர்த்துக்கேய வரலாற்றாசிரியரான குவைரோஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்துப் பண்பாடு நிலவியமைக்கான சான்றுகள் காணப்பட்டாலும் ஐரோப்பியர் ஆட்சிக்கு முந்திய கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை (கி.பி.16 இற்க முந்திய) ஆலயங்கள் பற்றிய சான்றுகள் அதிகம் காணப்படவில்லை. இதற்கு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் இந்துமதத்திற்கு எதிராகக் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கைகளே மூலகாரணமாகும்.

## வன்னிச் சிற்றரசர் கால உருத்திரபுரீச்சரர் சிவாலயத்தின் தனிச்சிறப்பு

இவ்வாலயத்திலுள்ள மூலவர் சிவலிங்கமாகும். மகாலிங்கம் என்று கூறத்தகும் பெரிய இலிங்கத் திருவுருவம் நாற்சதுர வடிவமான ஆவுடையாருடன் காணப்படுவது இவ்வாலயத்திற்கேயுரிய தனிச்சிறப்பு என்பதுடன் இது இச்சிவாலயத்தின் புராதனத்தையும், தனித்துவத்தையும் நிலைநிறுத்துவதாகவுள்ளது.

ஆவுடையை சதுரவடிவில் அமைக்கும் மரபு இந்து மதத்தில் மிகவும் தொன்மையானது. வட்ட வடிவில் ஆவுடை அமைக்கும் மரபு பெரும்பாலும் கி.பி.12 ஆம் நூற்றாண்டிலிருந்து பாண்டியர் ஆட்சியுடன் தோற்றம் பெறுகின்றது. இதனால் இச் சிவாலயத்தில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கமானது சோழர் காலம் அல்லது அதற்கு முற்பட்ட காலமாக இருக்கலாம் என்பதே உருத்திரபுரம் சிவாலயத்தின் தொன்மைக்கான தக்க சான்றாகும்.

19 நூற்றாண்டில் அதாவது 1879 களில் கனகராயன் ஆற்றினை மறித்து இரணைமடுக் குளத்தை நிர்மாணிப்பது தொடர்பான ஆய்வறிக்கையை பிரித்தானிய அரசிற்கு சமர்ப்பிக்கும் வகையில் உருத்திரபுரம் பேராற்றுப் பகுதியில் அணைக் கட்டொன்றை கட்டுவதன் மூலம் வீணாகும் நீரைத்தேக்கமுடியும் என்ற நோக்கோடு அப்போதைய யாழ் மாவட்ட அரச அதிபர் சேர் வில்லியம் துவைனம் அவர்கள் ஆய்வுகளை மேற்கொண்ட போதுதான் உருத்திரபுரம் குளத்தை அண்மித்திருந்த அழிவுற்ற நிலையில் இவ்வாலயம் கண்டுபிடிக்கப்பட்டது. எவ்வாறாயினும் 1950 ஆம் ஆண்டளவில் உருத்திரபுரத்தில் குடியேற்றம் செய்யப்படும் வரையில் இவ்வாலயம் தொடர்பிலும் வழிபாடுகள் பற்றியும் சிரத்தை கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆரம்ப காலத்தில் குடியேறிய மக்கள், அங்கு அடர்ந்த காடுகள் சூழ்ந்த பகுதியாக இருந்தமையாலும், வன விலங்குகள், கொடிய விசஜந்துகளின் அச்சுறுத்தல் காரணமாகவும் நிரந்தரமாக இப்பகுதியில் வதியாது வந்து செல்பவர்களாகவே இருந்துள்ளமையை அறியமுடிகின்றது.

1955 ஆம் ஆண்டில் உருத்திரபுரம் குளத்துக்கு வடக்கே இருந்த அடர்காட்டில் சிதைவடைந்த கட்டடங்களும், கருங்கல் தூண்களும் இருப்பதாக தன் ஞானநிட்டையால் உணர்ந்து கொண்ட தவத்திரு வேலாயுதர் சுவாமிகள் அதுதொடர்பில் தவத்திரு வடிவேல் சுவாமிகளிடம் எடுத்துக் கூற அக்காட்டினைத் துப்புரவு செய்ய இந்தியாவின் தில்லைச்சிதம்பரத்தில் உள்ள ஆயிரம் கால் மண்டபத்தினை ஒத்த கற்றூண்களும் கருங்கற்பாறைகளும் இடிபாடுகளுடன் இருக்கக்கண்டு யோகர் சுவாமிகளின் ஆதரவுடன் இப்போதுள்ள ஆலயத்தை நிறுவினார் என வாய்வழிச் செய்திகள் நிலவுகின்றன.

## வரலாற்றுப் பழமைமிகு உருத்திரபுரீச்சரத்தின் தல வரலாறு

இலங்கைத் திருநாட்டின் இருபத்தைந்தாவது மாவட்டமாக 1984 இல் கிளிநொச்சி மாவட்டம் உருவாக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தின் A9 (கண்டி யாழ் நெடுஞ்சாலை) வீதியின் மேற்குப் பக்கமாக கரடிப்போக்குச் சந்தியிலிருந்து ஏறக்குறைய பத்து கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள உருத்திரபுரம் என்னும் கிராமத்தில் உள்ள சிவாலயம் இலங்கையிலுள்ள வரலாற்றுப் பழமை வாய்ந்ததும், மாவட்டத்தின் முதலாவது சிவாலயமாகவும் திகழ்வது உருத்திரபுரீஸ்வரர் சிவாலயமாகும். தற்போதுள்ள ஆலயம் 1958 ஆம் ஆண்டு ஆகம முறைப்படி கட்டப்பட்டதாகும். இலங்கையில் திராவிடக் கலைமரபில் சிறப்பாகக் கட்டப்பட்ட ஆலயங்களில் இதுவும் ஒன்று என்பது வரலாற்றாசிரியர்களின் பொதுவான கருத்தாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் வழிபாடுகள் 1882 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த சேர் வில்லியம் துவைனம் அவர்களால் வெளிக்கொணரப்பட்டதாகும். இங்கு கிடைக்கப்பெற்ற சிவலிங்கம் பெரியதாகவும் அதன் ஆவுடையார் நாற்சதுர வடிவம் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இவ்வமைப்பினை ஆராயுமிடத்து ஆய்வாளர்கள் இது சோழர் காலத்திற்கும் முந்திய சிவலிங்கத்தின் அமைப்பைக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். மேலும் இங்கு பெறப்பட்ட கட்டட இடிபாடுகளைக் கொண்டு உருத்திரபுரீச்சரம் என்ற சிவத்தலம் இருந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனினும் இக்கூற்றினை வலியுறுத்த போதியளவான சான்றாதாரங்கள் கிடைக்கப்பெறவில்லை. சிவாலய இடிபாடுகள் அடையாளப்படுத்தப்பட்டு நீண்ட பூரணமான வெளிப்படுத்தல்கள் இடம்பெறவில்லை. இதற்கு அப்போதைய காலத்தில் குடித்தொகைப் பரம்பல் இன்மையும் காரணமாக அமைந்திருந்தது.

உருத்திரபுரம் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து ஆலயச்சூழலில் படிப்படியான மாற்றங்கள் நிகழ்ந்ததை அறியமுடிகின்றது.

இங்குள்ள திருக்கிணறு பால் நிறத் தீர்த்தமாக விளங்கும் பெருஞ்சிறப்பு வேறு எங்கும் காணப்படாத ஒன்றாகும். மேலும் ஆலயத்தின் தீர்த்தக்கேணியாக சிவகங்கை விளங்குவதுடன் தலவிருட்சமாக வில்வம் மரம் காணப்படுகின்றது. இங்கு உறையும் இறைவி உருத்திரபுரநாயகி என்றும் இறைவன் உருத்திரபுரீஸ்வரர் என்றும் திருநாமம் கொண்டு அழைக்கப்படுகின்றனர். பொதுவாகச் சிவாலயமானது சிவலிங்கத் திருவுருவைப் பிரதான மூர்த்தியாகக் கொண்டு பரந்து விரிந்திருக்கும். அவ்வாறே சிவாலயங்களின் அமைப்பு முறையானது சிவாகம மரபு சார்ந்தது. அதுமாத்திரமன்றி சிவாகமங்கள் கூறுகின்ற கிரியை மரபுகளுக்குரிய முக்கிய ஸ்தானமாக விளங்குவது சிவாலயத்தில் இடம்பெறுகின்ற திருவுருவங்களும், சிவாலய கட்டட அமைப்பு முறைகளுமாகும். அத்தகைய சிவாலய கட்டட அமைப்பு முறைகள் கர்ப்பக்கிரகத்தை மையமாகக் கொண்டு மண்டபங்கள், பிரகாரங்கள், விமானம், கோபுரங்கள், பரிவாராலயங்கள் என்று விரிந்து செல்லும் சிறப்புடையன.

அவ்வாறே சிவாலயங்கள் யாவும் வேத சிவாகமங்களில் விதித்த முறைப்படி அமைக்கப்படுபவை. அவற்றின் தத்துவங்களை உணர்ந்து பேணிப்பாதுகாப்பதன் மூலமே நாடு நன்மைபெறும் என்பது நம்பிக்கை. அதற்கமைய சிவாகம மரபுகள் சிறப்பாகப் பின்பற்றப்படும் உருத்திரபுரநாயகி சமேத உருத்திரபுரீஸ்வரர் எழுந்தருளியுள்ள இவ்வாலயத்தில் முறையே 1958, 1996, 2011 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவ்வாலயத்தின் தலமகிமையையும், புனிதத்துவத்தையும் மேம்படுத்தும் வகையில் தவத்திரு. வேலாயுத சுவாமிகள் தவத்திரு. வடிவேல் சுவாமிகள், தவத்திரு. மகாதேவா சுவாமிகள், தவத்திரு. யோகர் சுவாமிகள், மாதாஜி பரமானந்தவல்லி அம்மையார் மற்றும் தவத்திரு. கணேசானந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் போன்ற மகான்கள் வாழ்ந்து முத்தியடைந்த திருத்தலமாக இச்சிவாலயம் விளங்குகின்றது.

## நிறைவுரை

காலவோட்டத்தில் அந்நியர்களின் பண்பாடு, கலை அழிவுக் கொள்கைகள், இயற்கை அனர்த்தங்கள், பிற மதத் தாக்கங்கள், மன்னர்களின் படையெடுப்புக்கள், உள்நாட்டுப் போர்ச் சூழ்நிலைகள் உள்ளிட்ட காரணங்களால் உருத்திரபுரீச்சர சிவாலயமும் பல்வேறு பாதிப்புக்களுக்கும், அழிவுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலையில் இருந்ததோடு கிளிநொச்சி மாவட்ட வரலாற்றுத் தொன்மைகளில் முதன்மையான உருத்திரபுரீஸ்வரர் ஆலய வரலாற்று ஆதாரங்களை மறைப்புச் செய்தல் மற்றும் திரிவுபடுத்தும் நிலைமைகளும் அண்மைக்காலம் வரை தொடர்ந்துவருவது கண்கூடு. எடுத்துக்காட்டாக சுமார் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டதும் இவ்வாலயத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட அழகிய நடராஜர் சிலையும், மட்பாண்ட சிதைவுகள் கி.மு.2ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்னும் அடிக்குறிப்புடன் கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டிருந்த மேற்படி தொல்பொருட்களை தற்போது அங்கு காணமுடிவதில்லை என்கிற செய்தி எதனையோ எமக்கு உணர்த்த தவறவில்லை. எது எவ்வாறாயினும், இப்பிரதேசத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் விரிவான தொல்லியல் ஆய்வுகளைப் பொறுத்தே உருத்திரபுரீசுவரர் ஆலயமும் அதன் சமய - சமூக, பண்பாட்டு, தொல்லியல் பெறுமானங்கள் தொடர்பான உறங்குநிலை உண்மைகள் வெளியுலகிற்குப் புலப்படும் என்பது திண்ணம்.

**மரியநாயகம் கேசவன்**
*உருத்திரபுரம் கிழக்கு.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : திரு.செ.ராஜ்குமார் (கலாசார உத்தியோகத்தர்) திரு.கு.சுரேஸ்குமார் (கணக்காளர்), திருமதி.ச.மாதுகி (உதவிப் பிரதேச செயலாளர்), திரு.த.முகுந்தன் (பிரதேச செயலாளர்) திரு.பூ.ராஜ்வினோத் (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), திரு.ப.பரமோதயன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.தி.பிரபாகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார விழா சிறப்புற வாழ்த்துகிறோம்..

# கூட்டுறவு

**எமது சேவைகள்...**

- நுகர்ச்சி சேவை
- எரிபொருள் சேவை
- கிராமியவங்கி சேவை
- மெகா கோப்சிற்றி சேவை
- உணவு உற்பத்தி சேவை
- அரிசி ஆலை உற்பத்தி சேவை
- சேதனப்பசளை உற்பத்தி சேவை
- போக்குவரத்து சேவை
- கட்டட ஒப்பந்த சேவை
- நிவாரண விநியோக சேவை




**கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் [வ.து] கிளிநொச்சி**

**කරච්චි දකුණ විවිධ සේවා සමුපකාර සමිතිය (ලිමිටඩ්) කිලිනොච්චි**

**Karachchi South Multi Purpose Cooperative Society (Ltd) Kilinochchi**

Registerd - PA/46, 08.02.1971 T.P - 021 228 5752 E-Mail - ksmpcs@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாடு



உயர் பண்பாடு என்றாலே
தமிழர் தான் என்பது தரணியின் விதி
பயிர் பண்பாய் உழுது உலகப் பசியாற்றவும்
பொங்கல் படைத்துப் பகலவனுக்கு
நன்றியுரைத்தும்
பட்டிப் பொங்கலிட்டு தன்னுடன்
உழைக்கும் காளைக்கும் நன்றி நவில்ந்தும்

விருந்தோம்பல் என்றுயர் பண்பு கொண்டு
வந்தோரை வரவேற்றுத் தலை வாழையிலை போட்டு
கேட்டுக் கேட்டு சலிக்கும் வரையில்
கொஞ்சச் சோறு வைக்கவோ?
கொஞ்சக் கறிவைக்கவோ?
மனமாச் சாப்பிடுங்கோ.....என்று
அன்பைப் பகிர்ந்தும்



சடங்குகள் கொண்டு மெய்ஞ் ஞானத்தால்
விஞ்ஞானமும் அறிவியலின் ஆணி வேராய்
அமைந்திடும் விந்தைகள்
குழந்தை பிறந்திடத் தாலாட்டாய் அறிவுரைகள்,
முதல் மாதம் தாய்மாமன் மடியமர்த்தி காது குத்தி,
பருவமங்கையாக சடங்கும் செய்து,
திருமண வயதடைய கல்யாண வைபோகமும்,
வாழ்வு முடிய ஒப்பாரி முதற் கொண்டு
சாந்திக் கிரியைகளும்
பண்பாட்டைப் பறைசாற்றும்.



பட்டுப் புடைவையும் மாறு கரை வேட்டியும்
கட்டினால் போதும் ஊர்க் கண்ணே வியந்து நிற்கும்.
பழைய கஞ்சியும் பக்குவமாய் அரைத்த கறியும்
அழியாத சுவையாய் நாவில் நிலைத்திட
உறவுகள் கூடி இன்பமாய் வாழ்ந்தால்
உலகே இன்ப மயமாயாகும்.

**டக்ஸனா கிருஷ்ணானந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேச மக்களின் வாழ்வியல் கோலங்கள்

இயற்கை எழில் சூழ்ந்த இலங்கைத் தீவில் கிளிநொச்சி மாவட்டத்தின் பசுமை நிறைந்த பிரதேசங்களில் கரைச்சிப் பிரதேசமும் ஒன்றாகும். கரைச்சிப் பிரதேசத்தினுடைய தொன்மை வரலாறானது சோழர் காலத்திலிருந்து ஆரம்பமாகியதாக வரலாற்றுப் பேராசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். "கரைச்சி" என்ற சொல்லானது நீர் நிலைகளை அண்டிய பகுதி என்று பொருள்படும். நதிக்கரையோரங்களில் தொடங்கப்பட்ட நாகரிகங்கள் போன்று இங்கும் ஒரு நாகரிகம் தோன்றியிருக்க வேண்டும்.

பச்சைப் பசேலென வயல் நிலங்களும், வீதிகளின் இரு மருங்கிலும் அணிவகுத்து நிற்கும் தென்னை மரங்களும், பூத்துக்குலுங்கும் பூக்களும் இயற்கை அழகால் நிறைந்த இப் பிரதேசத்தில் இரணைமடு குளம் அமைந்துள்ளமை இப்பிரதேச மக்களுக்கு கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமே ஆகும். விவசாயத்தினை தங்களது ஜீவனோபாய தொழிலாக நம்பியுள்ள இப்பிரதேச மக்களுக்கு இரணைமடுக் குளம் மூலமே விவசாயத்திற்கான நீர் கிடைக்கின்றது. நெற்பயிர்கள் வளர்ந்து வரும் காலங்களில் பச்சை பசேலென பார்ப்பதற்கு மிகவும் அழகான காட்சியாகவும் மனம் நிறைந்த காட்சியாகவும் காணப்படும். அது போலவே அறுவடைக் காலம் மிகவும் சந்தோசமான காலமாகும். நெல் அறுவடை செய்து வீட்டிற்கு எடுத்து வரும் பொழுது மக்களுக்கு கிடைக்கும் மகழ்ச்சியே சொல்லில் அடங்காது.

கரைச்சியின் எழிலாகவும் இங்கு வாழும் மக்களுக்கு பேரருளை அள்ளி வழங்கி வரும் ஐம்பெரும் ஈச்சரங்களில் ஒன்றான உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் உள்ளது. இவ் ஆலயத்தில் சிவராத்திரி, பிரதோச விரதம், மற்றும் வருடாந்த மகோற்சவத் திருவிழா என்பனவும் மிகச் சிறப்பாக நடைபெறும் பூஜைகளாகும். அருள் நிறைந்த இவ் ஆலயச் சூழல் முழுவதுமே தெய்வீகமாகவே காணப்படுகின்றது.

மேலும் பொறிக்கடவை அம்மன் ஆலயம், வட்டக்கச்சி சிவன் கோயில் போன்ற பிரசித்தி பெற்ற பல்வேறு ஆலயங்கள் காணப்படுகின்ற இப்பிரதேசத்தில் ஆலய வழிபாடுகளும் பாரம்பரிய கலை பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காக்கும் வகையில் கலை நிகழ்வுகளும், மக்களின் வாழ்வியல் கோலங்களும் அமைவது மிகவும் சிறப்பான விடயமாகும்.

மேலும் ஆன்மீக வழிகளில் மக்களை இட்டுச் செல்வதற்கேற்ப ஆன்மீக வழிபாட்டு ஸ்தலங்களும், மன்றங்களும் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் பொன்னகர்க் கிராம அலுவலர் பிரிவில் காணப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் தங்களது உயர் கல்வியை கற்றுக்கொள்வதற்காக பல்வேறு மாவட்டங்களிலிருந்து மாணவர்கள் வருகை தருகின்றனர் என்பதுடன் இப்பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களினதும் உயர்கல்விக்கு உறுதுணையாகக் காணப்படுவது மிகவும் உயர்வான விடயமாகும்.

இப்பிரதேசத்தினைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளது தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கேதுவாக

- தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
- தொழில் பயிற்சி அதிகாரசபை
- இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம்

போன்ற தொழிற்பயிற்சி நிலையங்கள் காணப்படுகின்றமை இப் பிரதேசத்திற்கு ஓர் சிறப்பாகும். முழுமையான பயிற்சிகளுடன் விளையாட்டு வீரர்களை உருவாக்கி தேசிய மட்ட போட்டிகளுக்கு அவ் வீரர்களை பங்குபெறச் செய்து வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளும் வீர, வீராங்கனைகளைஉருவாக்கும்கரைச்சிபிரதேசத்திலேயேவீரர்களுக்கானபயிற்சிகளையும் போட்டிகளையும் மேற்கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ள கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானம் இப்பிரதேசத்தின் சொத்தாகவே காணப்படுகிறது

கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட வைத்தியசாலையும் கரைச்சி பிரதேசத்திலேயே காணப்படுவதும் இவ் வைத்தியசாலையின் அளப்பரிய சேவையும், நவீன மயமான வைத்திய உபகரணங்களின் பாவனையும் இப் பிரதேச மக்களுக்கு கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமேயாகும். நெற்பயிர்ச்செய்கை, சுயதொழில், வீட்டுத்தோட்டம் ஆகியவற்றில் மக்களின் கடின உழைப்பினால் அதிக விளைச்சலும் பயனும் கிடைப்பதனால் இப்பிரதேச மக்களின் உணவு மற்றும் பொருளாதாரம் என்பன மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துகின்றன.

யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் மீட்சி கிடைக்காதா என்ற நிலையிலும் துரிதமாக வளர்ச்சி கண்டு இயற்கையழகிலும் குளிர்ந்த மண்ணும் அழகான மரங்களின் பெருக்கமும் அழகூட்டி இருக்கின்றன. சிதைக்கப்பட்ட ஆலயங்கள் புனர்நிர்மாணம் பெற்று தமிழர்களின் வழிபாட்டு முறைகள் மீள் உருவாக்கம் பெற்றிருக்கின்றன.பள்ளங்களும். கிரவல்களாலும் உருக்குலைந்து இருந்த வீதிகள் மேம்படுத்தப்பட்ட வீதிகளாகவும் பிரதான வீதிகளும் மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டு பார்ப்பதற்கும், பயணிப்பதற்கும் சந்தோசத்தினை ஏற்படுத்துகின்றது. அத்தியாவசிய தேவைகள் யாவும் இப்பிரதேசத்திலேயே பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் தற்போது கரைச்சிப் பிரதேசம் காணப்படுகின்றது. எமது பிரதேசத்தை மேம்படுத்துவதற்கு எல்லோரும் ஒன்றிணைவது காலத்தின் கட்டாயமாகும். தற்போது மனித மனங்களில் அழகினை ஏற்படுத்துவதற்கு அரசாங்கமும், தனியார் நிறுவனங்களும் ஒன்றிணைந்து வெற்றிகாணுமிடத்து கரைச்சிப் பிரதேசம் உச்ச அழகையும் வளர்ச்சியையும் காணும் என்பது மறுப்பதற்கில்லை.

**திருமதி. மு. அனுசா**
*நிதி உதவியாளர்,*
*மாவட்ட செயலகம், கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் இறைபணிபுரிந்த நிறுவனங்கள்

சமயம் என்பது மனிதனை ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட நெறிக்கூடாக சிறந்த வாழ்க்கை முறைக்கு வழிப்படுத்துதலைக் குறிப்பதாகும். சமய வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைவதற்கு அது கூறும் நல்ல விடயங்களை முறைப்படி பின்பற்றுதல் அவசியமாகின்றது. சைவ சமயத்தைப் பொறுத்தவரையில் இறைநம்பிக்கை என்பது ஆன்மீகத்தை வலுப்படுத்தவும் ஒழுகலாறுகளை நெறிப்படுத்தவும் பெரிதும் உதவுகின்றது. நாம் எமது அன்றாட கருமங்களை இறைசிந்தனையுடன் ஆற்றுவது மிகுந்த பலனைத் தருவதாகும். ஆன்றோர்களின் வாழ்க்கை முறைகளும் இறை செயலின் தார்மீகத்தை எடுத்துக் கூறுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்திலே இறைபணி செய்த நிறுவனங்களில் குருகுலம், திருநெறிக்கழகம், சைவமங்கையர் கழகம், அகில இலங்கை காந்திசேவா சங்கம், மகாதேவா ஆசிரமம் ஆகியவை ஆற்றிய பணிகள் பற்றிச் சிந்திப்போம்.

### 1.குருகுலம்

சைவ வித்தியா விருத்திச் சங்கம் கிளி மாவட்டத்திலே குருகுலம் எனும் பெரு விருட்சத்தினை 1950 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. அதன் இயக்குனராக கர்ம வீரர். அப்புஜீ, குரு. வே.கதிரவேலு அவர்களை இனங்கண்டு தெரிவு செய்தது. அப்புஜீ அவர்கள் தன்னலமற்றவர், இறைசிந்தனை மிகுந்தவர், "சேவை செய்வதே ஆனந்தம்" என வாழ்ந்து காட்டியவர். மிகவும் அன்பானவர், சத்தியவேந்தன், காந்தீய நெறிகளைப் பின்பற்றி வாழ்க்கையைக் கொண்டு நடாத்திய பண்பாளர். எளிமையைக் கைக்கொண்டு இறுதிவரை வாழ்ந்து காட்டியவர். உள்ளம் பரிசுத்தமானவர். இப்படியான தியாகி தனது குருகுலத்தில் சைவம் வளர்க்கும் நோக்குடன் சைவப்போதகர் பயிற்சியினை வழங்கி 25 க்கு மேற்பட்டவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் ஆலயங்களின் பூசகர்களாகப் பணியாற்றுவதற்கு களம் அமைத்தார். அத்துடன் தாய், தந்தையற்ற குடும்பங்களிலிருந்து 200 இற்கு மேற்பட்ட பிள்ளைகளைக் குருகுலத்தில் இணைத்து உறைவிடம், உண்டி, உடையளித்து கிளி/இந்துக் கல்லூரியில் இணைத்துக் கல்வி பெற வைத்து ஒழுக்கமுள்ள குழந்தைகளாக உருவாக்கினார். இஃது செயற்கரிய செயலாகும்.

அத்துடன் குருகுலத்தில் "சர்வசக்தி" பீடமெனும் சைவ ஆலயத்தை உருவாக்கி வழிபாடியற்ற வழிசமைத்தார். இங்கிருந்து வெளியேறிய மாணவர்கள் நல்ல சமூகப் பிரஜைகளாக, நாடாளுமன்ற உறுப்பினராக உதவிக்கல்விப் பணிப்பாளராக, வைத்தியக் கலாநிதியாக, பொறியியலாளராக, அதிபர்களாக, ஆசிரியர்களாக, அரச அதிகாரிகளாக இன்னும் பல பணிகளில் தம்மை அலங்கரித்துக்கொண்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.திருநெறிக்கழகம்

திருநெறிக்கழகம் சைவம் வளர்க்கும் கழகமாகும். இக்கழகம் கிளி வைத்தியசாலையின் மருந்துக் கலவையாளராகக் கடமையாற்றிய திரு.த.நல்லதம்பி அவர்களால் 1952 இல் கிளி கந்தசாமி தேவஸ்தானத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகம் ஆலயங்களில் இடம்பெறும் நித்திய, நைமித்திய பூஜைகளின் போது பஜனை, சைவ சமயப் பிரசங்கம், சமயப் பிரவேசம் செய்வித்தல், பாடசாலைகளில் சமய பாடப்பரீட்சையினை வைத்து முதன்மைநிலை அடைபவர்க்கு தங்கப்பதக்கம், சான்றிதழ், பரிசுப்பொருட்கள் வழங்கி சைவ சமயத்தில் ஈடுபாடுடைய சமுதாயத்தினை உருவாக்குதல் போன்ற பணிகளைச் சிறப்பாக ஆற்றியது.

## 3.சைவமங்கையர் கழகம்

கிளி மாவட்ட சைவமங்கையர் கழகம் அமரரும் முன்னாள் அரச அதிபருமான தி.இராசநாயகம் அவர்கள் முன்னிலையில் 2004 ஆம் ஆண்டு பரமேஸ்வரி சிவனொளிபாதம் (இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்) திருமதி.செல்வராணி சோமசேகரம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்), திருமதி.சீதாலட்சுமி ஆனந்தராசா (பணிப்பாளர், விவசாயத் திணைக்களம்) ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி அன்பர்கள் முறையே தலைவர், செயலாளர், பொருளாளராகக் கடமையாற்றிக் கழகத்தை முன்னேற்றப்பாதையில் இட்டுச் சென்றனர். இக்கழகம் பிறப்பினால் சைவப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகட்குச் சமயப் பிரவேசம் செய்யும் பணியினை அதாவது சமய தீட்சை கொடுக்கும் பணியினைச் சிறப்பாகச் செய்து வருகின்றது. அத்துடன் ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனை (பஜனை), பண்ணிசை போன்றவற்றை கிளி மாவட்டம் பாடசாலை மாணவர்களிடையே பயிற்றி வருகின்றது. அத்துடன் கிளி மாவட்ட ஆலயங்களில் இடம்பெறும் நைமித்திய விழாக்களின்போது தகுதிவாய்ந்த பேச்சாளப் பெருமக்களை 10 நாட்களுக்கும் ஒழுங்கு செய்து பிரசங்கஞ்செய்ய வழிசமைத்து வருகின்றது. பாடசாலைகளுக்கிடையே சைவசமயப்போட்டிப் பரீட்சைகளை வைத்து தங்கப்பதக்கம், சான்றிதழ், பரிசுகளை வழங்கி மாணவர்களிடையே சமய அறிவை வளர்த்து வருகின்றது.

## 4.அகில இலங்கை
## காந்திசேவா சங்கம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் உயர்குரு. பெரியண்ணா என எல்லோராலும் அழைக்கப்பட்ட சி.க.வேலாயுதபிள்ளை அவர்களால் எட்டாம் வாய்க்காலில் 1952 இல் ஆரம்பிக்கப்பட்டது. நூற்றுக்கு மேற்பட்ட ஆதரவற்ற பிள்ளைகளை அரவணைத்து உணவு, உடை, உறையுள், கல்வி ஆகியவற்றை வழங்கி காந்தீய நெறியில் வளர்த்து வருகின்றது. சமய ஆசாரங்களைக் கடைப்பிடித்து, ஒழுக்கநெறி பேணும் மாணவர்களை சமூகத்திற்கு ஆக்கி அளித்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5.மகாதேவா ஆசிரமம்**

ஜெயந்திநகரிலுள்ள மகாதேவா ஆசிரமத்தை வடிவேற்சுவாமிகளும், திரு.த.நல்லதம்பி அவர்களும் டாக்டர். அம்பலவாணரும் 1952 இல் ஆரம்பித்து வைத்தனர். இங்குள்ள சிவனின் ஆலயத்தில் நித்திய பூஜைகளும். நாயன்மார்களது குருபூசையும் கூட்டு வழிபாடுகள், சற்சங்கங்கள் சிறப்பாக யோகர் சுவாமிகளது ஆயிலியம் பூசை முதலியன இடம்பெறுகின்றன. யோகர்சுவாமி அவர்களே வடிவேற்சுவாமிகளை மகாதேவா ஆசிரமத்துக்கு அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது. இவரைத் தொடர்ந்து கணேசானந்த மகாதேவா சுவாமிகள் தன் குருவான வடிவேற்சுவாமிகளின் பணியினைத் தொடர்ந்தார். அமரர் ஆனார்.

நீங்கள் எங்கு சென்றாலும் கடவுளை உங்களோடு கொண்டு செல்லுங்கள். எத்துணைக்கு அவன் பக்கம் கவனம் வைக்கின்றீர்களோ அத்துணைக்கு அவனிடமிருந்து வலிமையை, அறிவை, அகத்தூய்மையைப் பெறுவீர்கள். அவனுடைய பரவசமும் அமைதியும் உங்கள் வாழ்வில் பரவும்.

**"அன்பு செய்தால் அல்லல் தீரும்**
**அல்லல் தீர்ந்தால் அமைதி பெருகும்**
**அமைதி பெருகினால் அதுவே பேரின்பம்"**

*கலாபூஷணம்*
**சோமசேகரம்பிள்ளை செல்வராணி J.P**
*இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : திருமதி.ம.விஜயகௌரி (CMSO), திரு.ச.சந்திரன் (GN Admin), திரு.அ.றெஜிஅலோசியஸ் (AO), திருமதி.ச.மாதுகி (ADS), திரு.த.முகுந்தன் (DS), திரு.பூ.ராஜ்வினோத் (DDP), திரு.கு.சுரேஸ்குமார் (Accountant), திரு.ச.பார்த்தீபன் (ADR), திருமதி.சு.புவனலோஜினி (CMSO),

முதலாவது வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம்: திரு.K.A.S.M பண்டார (OES), திருமதி.பி.விஜயகலா (FA), திருமதி.த.லோஜினி (DO), செல்வி.கோ.சசிகலா (DO), திருமதி.கா.துர்க்காம்பிகை (DO), செல்வி.மு.பிருந்தா (DO), திருமதி.வ.சுபாஜினி (DO), திருமதி.கி.சிஜித்திரா (DO), திருமதி.தி.பாமினி (MSO), செல்வி.ஜ.விஜயந்தினி (DO), திருமதி.வி.இலாவண்யா (MSO), திருமதி.ம.பிரிந்தினி (DO), செல்வி.சி.சகிதா (MSO), செல்வி.க.கன்சியா (DO), திரு.லோகாந்தன்(DO), திரு.ச.ரவிசங்கர் (DO), திரு.செ.கோகுலன் (DO),

இரண்டாவது வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம் : திரு.து.விஜயராசா (MSO), திரு.ச.கஜேந்திரன் (DO), திருமதி.நி.லூசியா (DO), திருமதி.ச.யுகந்தினி (MSO), செல்வி. உ. தக்சாயினி (MSO), திருமதி.சி.அர்ச்ஜனா (DO), செல்வி.தெ.பிரதா (DO), திருமதி.ச.நிதர்சனா(MSO), செல்வி.இ.மைக்கல்அனோஜ் (DO), செல்வி.க.இந்துஷி (DO), திருமதி. ஜ.விமலினி (DO), திருமதி.ஜீ.பத்மமாலினி (DO), செல்வி.மா.மிதிலா (DO), திருமதி.லோ.ஜெனற்டிலானி (MSO), திரு.சி.நீலமேகர் (OES), திரு.செ.நகுலேஸ்வரன் (Driver)

சமுகமளிக்காதோர் : திருமதி.மோ.மேகலா (MSO), திருமதி.ம.நிரஞ்ஜனி (DO), திருமதி.சா.பிரியதர்சிகா (MSO), செல்வி.பி.பகீரதி (DO), திரு.க.சிறிதரன் (OES), திரு.சி.புஸ்பாகரன் (OES), திரு.இ.புவனேந்திரன் (Driver)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சியில் கலைகள் செழித்து ஓங்கட்டும்..

# வேலன் பதிப்பகம்

## Velan Printers

கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

- Graphic Design
- Calendar
- Complete Binding
- Promo Printing
- Manual Printing
- Wedding Cards
- Letterhead
- Envelopes
- Business Cards
- Brochures Digital
- Color Print
- Black Digital Copies

Large Format Printing



velanpathippagam@gmail.com

TP: 021 228 5579/ 076 2444 791

கலாசார விழா சிறப்புற வாழ்த்துகிறோம்..

# Raja Construction

## ராஜா கென்ஸ்ரக்ஸன்

இல.372, சில்வா வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

NO:372, Silva Road,
Vaddakachchi,
Kilinochchi.
Reg No: 15724

TP: 077 369 7654

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழ்ப் பௌத்தம்

புத்த பெருமானின் வாழ்க்கை வரலாற்றையும், அவர் ஞானத்தால் அறிந்தவைகளான போதனைகளையும் கொண்டதே பௌத்த மதமாகும். இப் பௌத்த மதமானது சிங்களவருக்குரிய மதம் மட்டுமன்றி தமிழ்ப்பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும்.

ஆரம்ப காலங்களில் இந்தியாவிலும், இலங்கையிலும் பௌத்த மதத்தினைப் பரப்புவதில் பங்காற்றியவர்கள் தமிழர்களேயாவர். அந்தக்காலத்தில் பௌத்த மதத்தைப் பின்பற்றுவதில் வரையறைகள் இருக்கவில்லை. சாதாரண குடிமக்களைப் போன்று குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு, பௌத்த கோட்பாடுகளையும் தர்மங்களையும் பின்பற்றி விகாரைகளுக்குச் சென்று வழிபட்டு வந்தனர். இதற்குச் சான்றாக தமிழ் நாட்டின் மதுரை, சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் அநேக இடங்களிலும் தமிழ் பௌத்த தேரர்களைக் காண முடிகின்றது. இலங்கை வரலாற்றிலும் , தமிழ் மன்னர்களும், மக்களும் பௌத்த மதத்தினைப் பின்பற்றியதற்கு பாளி, தமிழ், இலக்கியங்கள், பிராமிக் கல்வெட்டுகள், சிற்பங்கள் எனப் பல்வேறு ஆதாரங்களிலும் காணப்படுகின்றது. இதனாலேயே வட இலங்கையில் நிலைபெற்றிருந்த பௌத்த மதத்தினை இந்திரபாலா போன்ற வரலாற்று ஆசிரியர்கள் "தமிழ்ப் பௌத்தம்" எனக்குறிப்பிடுகின்றனர்.

ஆனால் இலங்கையைப் பொறுத்த வரை "தமிழ்ப்பௌத்தம்" தற்போது இல்லை. மக்கள் பின்பற்றிய போதும் காலத்தின் போக்கில் மறைந்து விட்டது என்பதை பண்டிதர்களும், கல்விமான்களும், ஆய்வாளர்களினாலும் உணரக்கூடிய உண்மையாகும். இச்செய்தியை சாதாரண குடிமக்களையும் சென்றடையும்படி செய்வோமேயானால் இனங்களிடையான நல்லிணக்கத்தை உணர முடியும். இவ்வகையில் 10ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் வாழ்ந்த பெரும்பான்மையான தமிழர்கள் பௌத்த மதத்தினைப் பின்பற்றியதற்கான சான்றாதாரங்களான விகாரைகள். வணக்கஸ்தலங்கள் அனைத்தும் ஒரு விழுமியமாகவே கருதப்பட்டன. அதன் பின்னர் கட்டப்பட்ட பௌத்த விகாரைகள், புத்தர் சிலைகள், மற்றும் மதம் சார் கட்டுமானங்கள் யாவும் சிங்கள பௌத்த மக்களால் கட்டப்பட்டவையாகும்.

இலங்கையில் பௌத்த மதம் அறிமுகமாவதற்கு பெருங்கற்கால பண்பாட்டு அம்சங்கள் குறிப்பாக பெருங்கற்கால பெருளாதார கட்டமைப்பும், சமூகப்பிரிவுகளும் , பௌத்த மதம் குறுகிய காலத்தில் பரவுவதற்கும், வளர்வதற்கும் வழிசமைத்தது. இம்மதத்தினை பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்த மக்களில் பெரும்பான்மையானோர் பின்பற்றியிருக்கலாம் என்பதனை அப்பண்பாட்டு மையங்களை அண்டிக் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவைப் போன்றே இலங்கையிலும் தொன்மையான வழிபாட்டு நெறியாக யக்ஷ, நாக வழிபாட்டை மேற்கொண்டவர்கள் இடைக்கற்கால மக்களே என்பதனை அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைக்கப் பெற்ற கற்கால கருவிகளும், சவ அடக்க முறைகளும் உறுதிப்படுத்துகின்றன. எழுத்தின் பயன்பாடு அறிமுகமாகியதும் நாகர் ஈமக்கல்லறைகளிலும், சொற்களையும் இரண்டு வசனங்களையும் கிரியாப்பூர்வமாகப் பொறித்தனர். அவை தமிழ்ப்பிராமி வடிவத்தில் எழுதப்பட்டவை. நாகரீக வளர்ச்சிக்கு ஏதுவான உற்பத்தி முறையினையும், தமிழ்மொழியினையும் அறிமுகம் செய்து வைத்தவர்கள் நாகர் இனத்தவர்களே. இவர்கள் மூலமாகவே நாகவழிபாடும், சிவலிங்க வழிபாடும் பரவின. கி.மு மூன்றாம் நூற்றாண்டில் பௌத்த சமயம் பரவிய போது அதில் ஈடுபாடு கொண்டனர். இலங்கையில் காணப்படும் தொண்ணூறுக்கும் அதிகமான தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் நாகர் பற்றியவை. பௌத்த துறவிகளுக்கு உறைவிடங்களாக குகைகளை தானமாக வழங்கியுள்ளனர். அவற்றில் சில அரசர். கமம்செய்வோர், உலோகத்தொழில் செய்வோர், நாகநாகர், நாகர்குலம் பற்றிய குறிப்புக்களும் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

நாகவழிபாட்டில் சைவர், பௌத்தர் என்ற வேறுபாடின்றி ஐந்துதலை நாகவடிவத்தின் சின்னத்தை வழிபட்டனர். "மணிணாகன்" என்றே இரண்டு சமயத்தவரும் அழைத்தனர். அத்தோடு புத்தர் படிமம், புத்தரின் பாதம், சேதியம் என்பவற்றுடன் பொறித்தனர். இதற்குச் சான்றாக மட்டக்களப்பு மாவட்டத்தில் குசலான் மலை அடிவாரத்தில் ஐந்துதலை நாகம், புத்தர் பாதம் என்பவற்றுடன் கூடிய உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. "மணிணாகன்" என்ற பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கோயில்குளம் என்னுமிடத்தில் லிங்க வடிவம், புத்தர் வடிவம், ஐந்துதலை நாக வடிவம் ஆகியன கிடைத்துள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் என்னுமிடத்தில் "உருத்திரபுரீஸ்வரர்" என்றழைக்கப்படும் சிவாலயத்தில் ஏறக்குறைய 18 நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சைவ வழிபாட்டுச் சின்னமாகிய ஐந்துதலை நாகவடிவம் என்பனவும் பௌத்த பள்ளி ஒன்றின் கட்டுமானத்தின் அடையாளங்களும் இன்றும் காணப்படுகின்றன. பௌத்த பள்ளி ஒன்றின் தூண்துண்டம் ஒன்றில் நாக பத்தவடிவம் காணப்படுகின்றது. தந்தாமலை பௌத்த பள்ளியிலும் வந்தாறுமூலை சிவன் கோயில், அம்மன் கோயில் என்பவற்றில் "மணிணாகன் பள்ளி" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. மகாவம்சம் என்ற பாளிநூல் யாழ்ப்பாணத்தையும் அதற்கு அண்மையிலுள்ள "நாகதீப" எனக்குறிப்பிடுகின்றது. மணிமேகலை 'நாகநாடு" என்றும் வல்லிபுரப் பொன்னேடு "ணாகதீவு" எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு இதன் பின்னணியில் தான் கிராமியத் தெய்வ வழிபாடு தோன்றியது. இன்றைய சிங்கள மொழியினைப் பேசுவோரின் மூதாதையினரும், சந்ததியினரும் பௌத்தத்திற்கு மதம் மாறினாலும் நாக வழிபாடு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமையைக் காணலாம். இப்பழமையான வழிபாட்டு முறைகள் நீண்ட பாரம்பரியத்தையும், தனித்துவத்தையும் கொண்டவையாகும்.

தமிழர்களும், அவர்களது மதமான இந்து மதமும் சிறப்புப் பெற்று விளங்கும் வடகிழக்கு இலங்கையில் பௌத்த மதம் நிலைபெற்ற செய்தியினை மகாவம்ச, சூளவம்ச குறிப்புக்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். கௌதம புத்தர் தமது மதத்தினைப் பரப்ப மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்தார். வெள்ளரசு மரக்கிளையுடன் யாழ்ப்பாணத்திலுள்ள ஜம்புகோளப்பட்டினத்தில் வந்திறங்கி பின் அனுராதபுரம் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது. சூளவம்சத்தில் வெள்கரிதிஸ்ஸ மன்னன் யாழ்ப்பாணத்திலுள்ள திஸ்ஸ விகாரையைச் சுற்றி மதில் அமைத்த செய்தியினைக் கூறுகின்றது. 4 ஆம் அக்போதி மன்னன் காலத்தில் பொத்தசாத்தன், மகாசாத்தன் என இருவர் மன்னனின் அமைச்சர்களாக இருந்தார்கள் என்று கூறுகின்றது.

கி.மு 6 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் இருந்த இரு நாக மன்னர்களின் சிம்மாசனப் போராட்டத்தை தீர்த்து வைத்ததாக கூறப்படுகின்றது. தேவநம்பிய தீஸன் புத்தரின் காலடிபட்ட இடங்களில் எல்லாம் திஸ்ஸமாரகம விகாரை, பஞ்சினரமா விகாரை போன்ற விகாரைகளைக் கட்டியதாக கூறுகின்றது. 1ஆம் உதயனின் மனைவி "ஜனசேனபத" என்னும் விகாரையைக் கட்டி தமிழ்ப்பிக்குமாருக்கு தானமாக வழங்கினாள். தமிழ்ப் பௌத்த காப்பியமான மணிமேகலையில் அறவணடிகள் நாகநாடு, மணிபல்லவம், இரத்தினதீபம் போன்ற இடங்களுக்குச் சென்று பௌத்த பீடிகையை தரிசித்ததாக கூறப்படுகின்றது. நாகநாடு, மணிபல்லவம் யாழ்ப்பாணத்தையும் இரத்தின தீபம் சிவனொளிபாதமலையையும் குறிப்பதாகும். (திருநாவுக்கரரசு)

அனுராதபுர காலத்தில் கி.மு 2 ஆம் நூற்றாண்டில் 44 ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி செய்த எல்லாளன் என்னும் தமிழ் மன்னனும், சேனன், குத்திகன் ஆகிய இரண்டு தமிழ் மன்னர்களும் பௌத்த மதத்திற்கு ஆதரவாக ஆட்சி செய்தனர் எனவும் நீலியன், வடுகன் போன்ற தமிழ் மன்னர்கள் அனுலா என்ற பௌத்த இளவரசியைப் பட்டத்துராணியாகக் கொண்டு ஆட்சி செய்தனர் என மகாவம்சம் கூறுகின்றது.

இவ்வகையான இலக்கிய ஆதாரங்கள் யாவும் இலங்கையில் தமிழ்ப் பௌத்த செல்வாக்கினையே எடுத்தியம்புகின்றன.

பௌத்த தொல்லியல் மையங்களில் 1500 இற்கும் அதிகமான பிராமிக்கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.அக்கல்வெட்டுக்களில் தமிழ்மொழிக்கே சிறப்பான எழுத்து வடிவங்களும், தனிமனித பெயர்களும் காணப்படுகின்றன. அதுமட்டுமன்றி எமது தமிழ் உறவு முறைகளும், தமிழ் இடப்பெயர்களும் காணப்படுகின்றன. அந்தக் கல்வெட்டுக்கள், பௌத்த குருமாருக்கு, பௌத்த சங்கத்திற்கு தானம் வழங்கியது பற்றிக் கூறுவதிலிருந்து தமிழர்கள் பௌத்த மதத்தினை ஆதரித்தார்கள் என்பதற்கு கல்வெட்டுக்களே சான்றாகக் காணப்படுகின்றது.

குறிப்பாக தென்னிலங்கை வரை ஆட்சி செய்த, பரிந்த, குட்டபரிந்த போன்ற தமிழ் மன்னர்கள் பௌத்தத்திற்கு தொண்டாற்றியதை அறகமம், கதிர்காமம், அனுராதபுரக் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. தொண்டாற்றியமைக்காக புத்தகாச, புத்ததேவ போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டதாக கல்வெட்டுக்களில் கூறப்படுகின்றது. அபயகிரி விகாரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஏழாம் நூற்றாண்டுக்குரிய சாசனம் அபயகிரிவிகாரையுடன் தமிழருக்கு இருந்த தொடர்பைக் காட்டுகின்றது. 2ஆம் பராக்கிரமபாகு காலத்தில் சீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டிருந்த பௌத்த சங்கத்தை திருத்தி அமைப்பதற்காக சோழநாட்டுப் பௌத்த துறவிகள் வந்ததாகச் சூளவம்சம் கூறுகின்றது.

"நம்பொத்த' என்ற சிங்கள இலக்கியத்தில் தெல்லிப்பளை, மல்லாகம், நாகர் கோவில், வீமன்காமம், ஊர்காவற்றுறை, நயினாதீவு. காரைதீவு, புங்குடுதீவு போன்ற இடங்களில் தொல்லியல் எச்சங்கள் காணப்படுவதாக கூறப்படுகின்றது. அத்தோடு திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, கந்தரோடை, சுன்னாகம், மகியப்பிட்டி, நவற்கிரி, வல்லிபுரம், நெடுந்தீவு போன்ற இடங்களிலும் தொல்லியல் சின்னங்கள் காணப்படுகின்றன.

கந்தரோடையில் தமிழ்ப் பௌத்த வரலாற்றையும், பரவிய பின்னணியையும் விளங்கிக் கொள்ள உதவும் தொல்லியல் எச்சங்கள் காணப்படுகின்றன. அண்டவடிவமாகக் காணப்படும் கட்டிடங்கள் ஆந்திராவின் அமராவதி, நாகர்சுன கொண்டா போன்ற இடங்களில் காணப்படுபவற்றை ஒத்தவை. ஈமச்சின்னங்களை முருகைக் கற்களிலான பேழையில் வைத்து அடக்கம் செய்தமையை அவதானிக்கலாம். (சிற்றம்பலம்) அடுத்து வல்லிபுரம் பொற்தகட்டு சாசனம், புத்தரது சிற்பம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. தற்போது அலரிமாளிகையில் வைக்கப்பட்டுள்ள பொற்தகட்டுச் சாசனத்தில் நாகதீபத்தில் அமைக்கப்பட்ட விகாரை பற்றிக் கூறுகின்றது. நெடுந்தீவில் வெடியரசன் கோட்டையில் ஆதிவரலாற்று பௌத்த பள்ளியின் அடையாளங்கள் காணப்படுகின்றன.

ஆகவே இலங்கையில் சிங்கள மக்கள் மட்டுமன்றி தமிழர்களும் ஒரு காலத்தில் பௌத்தர்களாக இருந்தார்கள்.இன்று சிங்கள மக்களில் பெரும்பான்மையானவர்கள் பௌத்தர்களாகவும் தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்துக்களாகவும் இருப்பதைக் கொண்டும் பண்டைய காலத்திலும் அவ்வாறே இருந்தது எனக் கூறமுடியாது. ஏனெனில் பண்டைய காலத்தில் தமிழர்கள் பௌத்தர்களாக இருந்ததற்கும் சிங்கள மன்னர், மக்கள் இந்துக்களாக இருந்ததற்கும் ஆதாரங்கள் காணப்படுகின்றது. பொலநறுவை இராசதானிகால வரலாற்றில் 50 வீதமான கால ஆட்சியில் இருந்த மன்னர்கள் இந்துக்களாகவே இருந்திருக்கின்றார்கள். குறிப்பாக கஜபாகு இந்து மன்னனாகவே இருந்து இறந்தான் எனக் கோணேசர் கல்வெட்டும் அவன் வெளியிட்ட தமிழ்க் கல்வெட்டுக்களும் கூறுகின்றன. இவ்வாறாக ஒரு இனத்தின் தொல்லியல் எச்சங்களை ஒரு இனத்தின் அடையாளமாகப் பார்க்காமல் ஒரு மதத்தின் பண்பாட்டு அம்சங்களாக நோக்குவோமேயானால் இன முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்பே கிடையாது.

வடக்கிலிருந்து பௌத்த மதம் மறைந்தமைக்கான காரணத்தை நோக்கினால் தமிழகத்தில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் தோற்றம். செல்வாக்கு, என்பவற்றைத் தொடர்ந்து தமிழ், சிங்கள மக்கள் தமது தனித்துவத்தை அரசியலிலும், பொருளாதாரத்திலும், இராணுவத்திலும் காட்டுவதில் முனைப்புப் பெற்றனர் என பேராசிரியர் பத்மநாதன் கூறுகின்றார். பக்தி இயக்கத்தின் தோற்றத்தினால் பரந்துபட்ட தமிழ் இனம், மொழி, மதம், பண்பாடு என்பவற்றால் ஒன்றுபட்டு வடக்கு, கிழக்கு இலங்கையில் தமிழகத்திற்கு அண்மையில் வாழ்வது பாதுகாப்பாக அமையும் எனக்கருதியதாகவும் குறிப்பிடுகின்றனர். கி.பி 13 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் கலிங்க மாகன் ஆட்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது நடவடிக்கைகள் சிங்கள மக்களுக்கு எதிராகக் காணப்பட்டது. இவனது ஆட்சியை விரும்பாத பொலநறுவை இராசதானியும் சிங்கள மக்களும் தெற்கு நோக்கி நகர்ந்தனர். தம்பதெனியா, யாப்பகூவ, குருணாகல், கம்பளை, கோட்டை என நகர்ந்தனர். இவனுக்குப் பின்னர் சாவகன் ஆட்சி நிலவியது. குறிப்பாக கலிங்க மாகன், சாவகன் ஆட்சியில் குருந்தலூர் (குருந்தூர் மலை) முக்கிய மையமாகும். இங்கு ஆதி இரும்புக் காலத்து பெருங்கற்கால பண்பாடு இருந்துள்ளது. பின்னர் பௌத்த மதம் பரவிய போது அங்கிருந்த மக்களும் பின்பற்றியிருந்தார்கள் என்பதற்குச் சான்றாக பௌத்த மத எச்சங்களுடன் கூடிய இந்து ஆலய எச்சங்களையும் தமிழ்க் கல்வெட்டினையும் குறிப்பிடுகின்றனர்.

இலங்கையின் பௌத்த சமய வரலாற்றை ஆராய்ந்த பலரும் அனுராதபுரம் போன்ற இடங்களில் காணப்படும் எச்சங்களை பாளி இலக்கியத்தில் கூறப்படும் ஆதாரங்களைக் கொண்டு ஆராய்ந்துள்ளார்களே தவிர யாழ்ப்பாணத்தில் காணப்படும் எச்சங்களை ஆராய்வதில் அக்கறை காட்டவில்லை.

இவ்வாறாக வரலாற்று ஆதாரங்களை விளங்கிக் கொள்ளாமல், தமிழர், சிங்களவருக்கிடையேயான இன முரண்பட்ட நோக்கில் வரலாற்றைப் பிழையாக விளங்கிக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர் பகுதிகளில் பௌத்த மதத்திற்குரிய எச்சங்கள் இன்னும் காணப்படுவதால் ஆய்வினை மேற்கொள்வோர் கவனமெடுத்து தமிழரின் வரலாற்றை வெளிச்சத்துக்குக் கொண்டு வர வேண்டும்.

**ச. கம்சானந்தி**
*கனகபுரம் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் மழை

அன்றோர் அதிகாலை
ஆங்காங்கே முகில் கூட்டம்
இளவேனில் காலத்தில்
இயற்கையில் ஓர் மாற்றம்

"தாழமுக்கம் என்னையே
தாக்குமென்றான் - ஓராள்
காற்றின் வேகமதில் - கனதி
மாற்றமென்றான் - மற்றோராள்

கூட மழையடிக்கும்
குடிமூழ்கிப் போகுமென்றான்
வாடைப் புயலடிக்கும்
வாழ வழி இல்லையென்றான்

மனையே மூழ்கி விடும்
மனதைத் தேற்றிக் கொள்
என்றோராள்
"இயல்பு நிலை அழிந்து விடும்
இதயத்தைத் தேற்றிக் கொள்"
என்று மற்றோராள்.

ஏதும் தோணவில்லை
இயல்பு நிலை ஏதுமில்லை
முதல் மழை என்பதனால்
மனதோரம் ஓர் ஏக்கம்.

வீடு, மனையுடனே
விளை நிலங்கள் அத்தனையும்
மனைவி மாக்களுடன்
மந்தைகளும் போய்விடுமோ...?
அந்தோ ............ பரிதாபம்

"ஓ"..... வெனவே அலறி விட்டேன்
உயிர்பிரிய முடிவெடுத்தேன்
காலமென்னை விடவுமில்லை.

வாழ்க்கையில் மாற்றங்கள்
வழமையென்றான் - ஓராள்
எதிர்கொள்ள துணிவு கொள்
இதமாக அனுபவியென்றான் -
மற்றோராள்

எத்தனை மின்னல்கள் ?
இத்தனை சூறாவளிகள்
இடிகளின் வெடியோசை
இன்னுமென் நெஞ்சமதில்

இயற்கையை ரசித்தேன்
இதமாக எதிர்கொண்டேன்
எத்தனை தூறல்கள் ?
இத்துணை சாரல்கள்

எல்லாமே புதியனவாய்
இயற்கையுடன் நானிணைந்தேன்
மகிழ்வுடனே அனுபவித்தேன் - முதல்
மழை தந்த முத்து முத்தான முத்தத்தை.

**யோ.கோபிநாத்**
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடல் கிளை உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : திரு.தி.திவாகரன் (DO), திரு.க.கவாஸ்கர் (DO), திருமதி.அ.குமரவேள் (CMSO), திருமதி.ச.மாதுகி (ADS), திரு.த.முகுந்தன் (DS), திரு.பூ.ராஜ்வினோத் (DDP) திரு.கு.சுரேஸ்குமார் (Accountant), திரு.தி.பிரபாகரன் (DO), திரு.ச.கருணாகரன் (DO)

நிற்பவர்கள் இடமிருந்து வலம் : திரு.து.தயாதர்சன் (DO), திரு.சு.மனோசுதன் (DO), திரு.இ.இராமலிங்கம் (OES), திருமதி.அ.சகாயராணி (DO) திருமதி.சி.தமயந்தி (DO), திருமதி.பா.சுதாஜினி (DO), திருமதி.பெ.றெணாவேர்ஜினேற்(DO), திருமதி.ச.அஜிகலா(DO), செல்வி.கு.யசோதா(DO), திருமதி.சு.அனுசுயா (DO). திருமதி.ம.மேரிசுஜீவினி(DO), திருமதி.ச.லோகப்பிரியா(DO), திரு.மு.டிலோசன் (DO), திரு.அ.அருளானந்தன் (TAO), திரு.ஜெ.குணாளன் (DO)

சமுகளிக்காதோர் : திரு.ப.பரமோதயன் (DO), திரு.சு.சுதர்சன் (DO), திரு.ம.லக்குணம்(DO), திருமதி.க.அமலினி(DO)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய பொருளாதார அபிவிருத்தியானது எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான பரிந்துரைகளும்

அபிவிருத்தி என்பது இன்று எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாடல் ஆகும். ஒரு நாட்டின் சமூக பொருளாதார அரசியல் துறைகளில் ஏற்படும் சிறந்த அதே போல் அளவு ரீதியான மாற்றங்கள் அல்லது முன்னேற்றத்தினை அபிவிருத்தி எனக் கருத முடியும். ஐ.நா.சபையானது "அபிவிருத்தி என்பது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துடன் சமூக முன்னேற்றம் உண்டாதல் வேண்டும்" எனக் கூறுகின்றது.

அபிவிருத்தி என்பதற்கு பல்வேறுபட்ட பொருளியலாளர்கள் மற்றும் அபிவிருத்தியியலாளர்கள் வெவ்வேறு நோக்குகளில் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

டட்லி சியர்ஸ் (**Datli Siyars -1972**) "ஒரு நாட்டின் வறுமை குறைவடைந்து சமூக ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் போய் வேலையில்லாத் திண்டாட்டம் குறைவடைந்து காணப்படுவது அபிவிருத்தி" என வரையறுக்கின்றார்.

கிண்டல் பேர்கர் என்பவர் "பொருளாதார அபிவிருத்தி என்பது உற்பத்தியின் அதிகரிப்பும் அதனூடாக தொழில்நுட்ப விருத்தி மற்றும் அமைப்புகளின் முன்னேற்றம் அபிவிருத்தி" என்று குறிப்பிடுகின்றார்.

## கிராமிய பொருளாதார அபிவிருத்தி

கிராமிய பொருளாதார அபிவிருத்தி என்பது கிடைக்கக்கூடிய வளங்களை உத்தமமாகப் பயன்படுத்தி கிராம மக்களின் கிராமிய உற்பத்தி அதிகரிப்பு வாழ்க்கைத் தர அதிகரிப்பு, வருமான மட்ட அதிகரிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியது.

## கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் பரிமாணம்

கிராமிய பொருளாதார அபிவிருத்தி

↓

பிராந்திய பொருளாதார அபிவிருத்தி

↓

தேசிய பொருளாதார அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் கூறுகள்

1. கிராமிய விவசாயத்துறை மேம்பாடு
2. கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி
3. குடிசைக் கைத்தொழில் மற்றும் மரபுசார் தொழில் விருத்தி
4. பொருளாதார உட்கட்டுமான அபிவிருத்தி
5. மனைப் பொருளாதார மேம்பாடு
6. கிராமிய நலச்சேவைகளின் விரிவாக்கம்
   (உ+ம் கல்வி, சுகாதாரம்,போக்குவரத்து, மின்சாரம்)
7. தனிநபர் அடிப்படை வசதிகள்

## கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் முக்கியத்துவம்

- ஒரு நாட்டின் மொத்த சனத்தொகையில் பெரும் பகுதியினர் (83.43 %) கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்றனர்.
- கிராமங்களில் வசிப்போர் குறைந்த வருமானம் மற்றும் வறுமையுடையவர்களாக உள்ளனர்.
- சமூக, பொருளாதார, பொது வசதிகள் கிராமப் பகுதிகளில் அபிவிருத்தி அடையாத நிலை காணப்படல்.
- பெரும்பாலானவர்கள் தங்கி வாழ்கின்ற நிலைமையே காணப்படல்.
- நாட்டில் வழங்கப்படும் அரசாங்க வேலை வாய்ப்புக்களில் உள்ளீர்க்கப்படுவோர் கூடுதலாக கிராமிய அபிவிருத்தியை மையப்படுத்திக் காணப்படல்.
- தொழில் வாய்ப்பை உருவாக்கக்கூடிய உற்பத்திகளுக்கான மூலவளங்கள் கிராமப்பகுதிகளில் காணப்படல்.
- அரசாங்கங்கள் கிராமிய அபிவிருத்திக்கும் விவசாய அபிவிருத்திக்கும் என பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

## கிராமிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள்

அரசாங்கத்தினால் அன்று தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் கிராமிய அபிவிருத்தி திட்டங்கள் கீழ்வருமாறு அமையும்.

- முதலாவது ஆறு ஆண்டுத் திட்டம் (1947-1953)
- இரண்டாவது ஆறு ஆண்டு திட்டம் (1951-1957)
- முதலீட்டுக்கான ஆறு ஆண்டுத்திட்டம் (1954-1980)
- பத்தாண்டுத்திட்டம் (1959-1968)
- ஐந்தாண்டுத் திட்டம் (1972-1976)
- கிராமிய செயற்றிட்டம் கம்முதாவ (மாதிரிக் கிராமம்)
- ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுவர்ண பூமி திட்டம்
- ஜனசவிய திட்டம்
- சமுர்த்தி திட்டம்
- நவோதய பாடசாலைத் திட்டம்

## இவற்றுடன் பின்வரும் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன

1. கமநெகும வேலைத்திட்டம்
2. மகநெகும வேலைத்திட்டம்
3. கமட கர்மாந்த கிராமத்திற்கு கைத்தொழில் வேலைத்திட்டம்
4. தயட்ட கிருள வேலைத்திட்டம் (2007)
5. திவிநெகும வேலைத்திட்டம்
6. ஒரு கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டம்
7. கெமித்திரிய வேலைத்திட்டம்
8. அபி வவமு ரட நகமு - நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்.
9. சகஸ் ரதக் சல வேலைத்திட்டம்
10. வடக்கின் வசந்தம் - வடக்கு
11. கிழக்கின் உதயம்- கிழக்கு
12. வயம்பபுபுதுவ -வடமேல் மாகாணம்
13. புபுதமுவெல்லஸ்ஸ -ஊவா மாகாணம்
14. கிராம சக்தி வேலைத்திட்டம்
15. கம்பரெலியா துரித கிராமிய அபிவிருத்தித்திட்டம்
16. சப்பிரகமுவ வேலைத்திட்டம்
17. 100 நாள் வேலைத்திட்டம்
18. சௌபாக்கிய வேலைத்திட்டம்
19. கிராமிய பாலங்களை அபிவிருத்தி செய்தல்.
20. ஒரு இலட்சம் கிலோமீற்றர் கிராமிய வீதி புனரமைப்பு
21. வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம்

போன்ற பல்வேறுபட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை காலத்துக்குக் காலம் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இருந்த போதும் கிராமிய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு பல்வேறு சவால்களும் நெருக்கடிகளும் உருவாகின்றமை.

## கிராமிய பொருளாதாரம் எதிர்நோக்கும் சவால்கள்

1. வறுமை
2. சனத்தொகை அதிகரிப்பு
3. உற்பத்தி திறனின் குறைநிலை
4. பருவ கால வேலையின்மை
5. கடன் நச்சு வட்டம்
6. சூழல் மாசடைதல்
7. காலநிலை மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.சந்தை வாய்ப்பின்மை

9.ஊழியர் படை வெளியேற்றம்

10.கிராமிய வேலைத்திட்டமிடலின் குறைபாடுகள்

11.அரசியல் தலையீடு / ஸ்திரமின்மை

போன்ற பல சவால்களையும், நெருக்கடிகளையும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி எதிர்நோக்குகின்றது.

## கிராமிய பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான பரிந்துரைகள்

1. கிராமிய வளங்களைப் பயன்படுத்தி கைத்தொழில் அபிவிருத்தியினை ஊக்குவித்தல்.
2. முயற்சியாண்மையையும் முயற்சியாளர்களையும் சரியாக இனம் கண்டு ஊக்குவித்து அபிவிருத்திசெய்தல்.
3. கிராமியப் பெண்களுக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் தொழில் முயற்சிகளை மேம்படுத்தும் வகையில் ஊக்குவிப்பு வழங்கலும் ஊக்குவித்தலும்
4. உள்ளூர் உற்பத்திக்கான சந்தை வாய்ப்புகளை உருவாக்கி உற்பத்தி முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
5. கிராம மட்ட அமைப்புகளை (**RDS ,WRDS, FO......**) பலப்படுத்தி அதனூடாக வறுமை ஒழிப்பு சமூக நலச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
6. கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
7. கிராமிய தொழில்நுட்ப அறிவு திறனை மேம்படுத்தல்.
8. பொது சுகாதார வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான மூலோபாயத்திட்டங்களை வடிவமைப்பு செயற்படுத்துதல்.
9. நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தி விவசாயத்துறையை ஊக்குவித்தல்.
10. பயிரிடப்படாத விவசாய நிலங்களை பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துதல்.
11. கிராமங்களில் பால் உற்பத்தியை ஊக்குவித்து பெறுமதி சேர் பால் கைத்தொழில் திட்டங்களை ஊக்குவித்தல்.
12. நன்னீர் மீன்பிடி அபிவிருத்தி
13. வினைத்திறன் மிக்க நுண்கடன் பொறிமுறையை உருவாக்கி உள்ளூர் தொழில்முயற்சியாளர்களை முன்னேற்றுதல்
14. துறைசார் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பையும், மேற்பார்வையையும் வினைத்திறன் மிக்கதாக மாற்றியமைத்தல்.

போன்ற விடயங்களை மேற்கொள்வதனூடாக கிராமிய பொருளாதார அபிவிருத்தியை எட்ட முடியும்.

**தி.பிரபாகரன்**
*அபிவிருத்தி உத்தியோகத்தர்,*
*பிரதேச செயலகம், கரைச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் (வங்கி, தலைமையகம், மகாசங்கம்)



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : திருமதி.க.நிதிலேகா , திருமதி.பா.புவனேஸ்வரி, திருமதி.அ.சுஜதாஷினி, திருமதி.ச.மாதுகி (ADS) திரு.த.முகுந்தன் (DS), திரு.பூ.ராஜ்வினோத் (DDP) திரு.கு.சுரேஸ்குமார் (Accountant) திருமதி.க.புஸ்பா, திருமதி.பி.கோகுலவாணி,

நிற்பவர்கள் இடமிருந்து வலம்: திரு.செ.துளசிதாசன், திரு.ஆ.சக்திவேல், திரு.யோ.சிவகுமார், திரு.செ.கவிந்தன், திரு.சி.ஜெயானந்த், செல்வி.சி.சஞ்சயா, திருமதி.ரா.சுகிர்தா, திருமதி.றொ.தர்சினி, திருமதி.க.சுதர்சினி, திருமதி.ர.நவவதனி, திருமதி.ம.தமையந்தி, திருமதி.த.லக்சியா, திருமதி.சி.தர்சனா, திருமதி.பா.நிருஜா, திரு.ந.செஞ்சோழன், திரு.யோ.கோபிநாத்,

சமுகமளிக்காதோர்: திருமதி.பி.ரேணுகா, திருமதி.ஜ.வினோபா, திரு.சி.டிலக்சன், திருமதி.வி.நந்தபாலினி, திருமதி.சி.மாலினி, திருமதி.ர.றொசானி, திருமதி.ச.பிறேமினி, திருமதி.வ.சிவகாஞ்சனா, திரு.டே.ஜெனிறொபின்சன், திருமதி.அ.மரியதயாளினி, திரு.இ.ஜெனாத் அபிஷேக், திருமதி.சு.கிரிஜா,திருமதி.கே.தயாநிதி, திருமதி.த.நவசக்தி, செல்வி.கி.சோபிகா, திருமதி.சு.சஜீபனா, திருமதி.க.கோகிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்து

வாய் கிழிந்து
பல் பறந்து
கை முறிந்து
கால் உடைந்து
மூஞ்சி முகறை சிதைந்து
போகும் போது தான்
உயிர் உணர்கிறது
வேகத்தின் வெகுமானத்தை.

மதுவிலே மயங்கி
சாலைகளில் சறுக்கி
குட்டிக்கரணம் போட்டு
சாக்கடைக்குள் முட்டி மோதி
சல்லிகள் கண்ணை
சிதைத்தும்
மீண்டு வராத
உன் வேகம்
அப்பாவிகளையும்
ஒருநாள் பதம் பார்த்து விடுகிறது.

போட்டிக்கு ஓடுவதற்கு
மெய் வல்லுனர் போட்டியல்ல
கரணம் தப்பினால்
மரணம்! என்பதை
உணராத மனிதா!

மண் லாறியிலோ
கல் வண்டியிலோ
மின் கம்பத்திலோ
மண்டை பிளந்து
மரணிக்கும் போது..
உன் அன்புக்காக
ஏங்கும் மனைவி
அநாதையாகிறாள்!
உன் தாய்க்கு
கருவறை
நினைவுகளை
சின்னாபின்னப் படுத்துகிறாய்!

உன்
வருகைக்காக
காத்திருக்கும்
நண்பர்களின் எதிர்பார்ப்பை
துண்டித்து விடுகிறாய்

இறுதியில் அவனோ! அவளோ!
வலி சுமந்து
மரணிக்கும் வரை
குழந்தைகளின் பாதுகாப்பு
களவு போய் விடுகிறது.
வாழ்க்கை
விதவைக் கோலமாகிறது.

மனிதா!
வாகனத்தின் மீது
ஏறும் போதெல்லாம் நினைத்துக்கொள்
உன் முன்னால்
வருபவர்கள்
மற்றவர்களின் கனவுகளை
நிறைவேற்ற வருகின்ற
கடவுள்கள்.....

**ஜே. எஸ். ராஜ்**
கலாசார உத்தியோகத்தர்,
கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் ஆலயங்களும் நிலைத்திருக்கும் தன்மையும்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பர். அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் பல கோயில்களும் அக்கோயில்களினை அடிப்படையாகக் கொண்ட குடியிருப்புகளும் காணப்படுகின்றன. மக்கள் தமது பண்பாட்டினையும் பக்தியினையும் எப்போதும் வெளிப்படுத்தத் தவறுவதில்லை. இதில் குறிப்பாக இலங்கையிலிருந்து வெளிநாடு சென்றவர்கள் கோயில்கள் மீது கொண்ட பக்தி காரணமாக இலட்சக் கணக்கான பணத்தினை அள்ளி இறைக்கின்றனர்.

இக்கட்டுரையின் நோக்கம் ஆலயங்களையும், ஆலய வழிபாட்டினையும் இந்து மதத்தினையும் சார்ந்தது அல்ல. இங்கு குறிப்பிட எண்ணுவது ஆலய கட்டடங்களே. அதிநவீன தொழில்நுட்பங்கள், இயந்திரம் மற்றும் அவற்றின் செயற்றிறன் காரணமாக ஆலயங்கள் சில மாதங்களிலேயே கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் தெய்வத்தினை விடக் கட்டடமே ஈர்க்கும் தன்மையைக் கொண்டதாகவும் அமைக்கப்படுகின்றன. ஆலயங்களை சீமெந்தைக் கொண்டு கட்டி முடிக்கின்றனர். ஆனால் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு வர்ணப் பூச்சுக்களாலும், மின்னும் ஒளி விளக்குகளினாலும் வெறுமனே பார்வைக்கு ஆடம்பரமாகக் கட்டி முடிக்கப்படுகின்றன. இங்குதான் ஒரு கேள்வி எழுகின்றது. ஆலயங்கள் என்பவை ஆன்மா லயப்படும் இடமாகும். ஒரு ஆன்மாலயப்பட மின்னொளியா அல்லது வர்ணப் பூச்சுக்களா தேவை? அல்லது மனதை ஒருநிலைப்படுத்தும் தொன்மையும் பழமையும் மிக்க ஆலயங்களாக நிலைத்து நிற்பவை தானே தேவை. எனவே ஒருபோதும் ஆன்மாக்களை லயப்படுத்த ஆலயங்கள் பெரியதாகவும், புதியதாகவும் மற்றும் மின்னொளியிலும் காணப்பட வேண்டுமென்பதல்ல. மாறாக ஆலயங்கள் சிறியதாகவோ பழைமை பேணுவதாகவோ நீடித்து நிற்பதாகவோ ஏன் விளக்கொளியிலும் கூடக் காணப்படலாம். "மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது" எனச் சிலர் கூறுவர். "இக்கோயில் பார்ப்பதற்கு சின்னதாக இருந்தாலும் இவர் சக்தி பெரிதப்பா" என்பர்.

இக்கட்டுரையின் பிரதான நோக்கம் சீமெந்து கட்டடங்களின் நிலைத்தன்மையினை விவரிப்பது ஆகும். சரி இப்பொழுது ஆலயக் கட்டடங்கள் எவ்வாறு? எந்த நோக்கத்தினை வைத்து கட்டப்படுகிறது எனநோக்கின் ஆலயங்கள் வெறும் வேடிக்கை விடயங்களினையும், ஆலயத்தினுள் காணப்படும் அரசியல் கட்சியின் தாக்கத்தினையும், ஆலயக் குழுக்களின் கட்டுப்பாட்டிலும் என இவை உள்ளடங்கலாக ஏராளமானவை உள்ளன. இவை மாத்திரமன்றி ஆலய முன்னேற்றத்தில் அரும்பணி ஆற்றி தம்முடைய ஆலயத்தினைப் பெரிதாகக் கட்ட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியவர்களும் ஏராளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இங்கு சில ஆலயங்கள் வீதிகளின் அருகாமையில் உள்ளமையினால் கோபுரங்கள் கட்ட வேண்டும் என்ற எண்ணம் தோற்றம் பெறுவதுடன் எண்ணங்கள் செயல்வண்ணங்களாகவும் மாறுகின்றன. இவை நல்லதே. இதே போன்று தான் பாடசாலையின் வாயிற் தோரணங்கள் கட்டப்படுகின்றன. இவை இரண்டிலும் ஒரே விடயம் தான் புலப்படுகிறது. இவர்கள் ஒருபோதும் நிலைத்தன்மையைக் கருத்திற் கொள்வதில்லை. ஆலயங்களின் எதிர்காலமும் மாணவர்களின் எதிர்காலமும் சிறந்த அத்திவாரம் இல்லாமல் உருவாக்கப்படுவதையே காணக் கூடியதாகவுள்ளது. அதாவது பாடசாலையின் அடிப்படைத்தேவை பூர்த்தியில்லாமல் பிரமாண்டமான தூண்களின் ஆடம்பரமே கல்வித்தரம் என நம்பும் பாடசாலை சமூகங்களும் குறுகிய காலத்தில் சிதைவடைந்துவிடும் கோவில்களின் கோபுரங்களும் வெறும் பகட்டுக்காக உருவாக்கப்படுகின்றன.

ஏன் நாம் சீமெந்து கற்களை அத்திவாரத்திற்கு பயன்படுத்துவதில்லை? என்பதனை முதலில் உணர வேண்டும்.

ஆலயங்கள் என்பது வெறுமனே கட்டடங்கள் அல்ல. அது ஒரு ஊரின் பண்பாடு, கலை, மரபு, பாரம்பரியம், தொன்மை, வழிபாட்டு முறை மற்றும் ஆகமம் சாரா வழிபாட்டின் சின்னமாகவும் காணப்படும். எனவே தொன்மையான ஆலயங்கள் எனவும் இவ்வாலயம் பல நூற்றாண்டுகள் தாண்டியும் கிளிநொச்சி மண்ணில் இருக்கிறது என எதிர்காலத்தில் கூறக்கூடிய ஆலயங்கள் கிளிநொச்சியில் உள்ளனவா என்பதே எனது கேள்வி. எனவே, சீமெந்து மீது செலவிடப்பட்டு பின்பு அதன் காலம் முடிவடையும் போது கட்டங்களை இடிப்பதும் பின்பு கட்டுவதுமாக இருக்கக்கூடாது. சீமெந்தை ஆதாரமாகக் கொண்டு பல ஆலயங்கள் இன்றும் கிளிநொச்சி மண்ணில் உள்ளன. ஆலயங்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. பெயர் குறிப்பிடுவது அவ்வாலயங்களின் மீது பக்தி கொண்ட அடியார்களையும் அவ்வாலயங்களின் தொண்டாற்றும் குழுக்களினையும் வஞ்சிப்பதாக அமையும் என்னுடைய நோக்கம் அதுவல்ல. ஆலயங்கள் நிலைத்த தன்மையினை கொண்டிருக்க வேண்டும் என்பதே என் நோக்கு.

இன்றும் கூட இந்தியாவாக இருக்கட்டும் இலங்கையாக இருக்கட்டும் திராவிட கட்டடக் கலைகளும் அதன் பாணிகளும் ஆலயங்கள் மீது செல்வாக்கு செலுத்துகின்றன. குறிப்பாக தஞ்சைப் பெருவுடையார் ஆலயம் பல ஆண்டுகள் தாண்டியும் இப்பூமிப் பந்தின் மீது நிலைத்திருக்கக் காரணம் அவ்வாலயத்திற்கான நிர்மாண அம்சமே. அத்தோடு இலங்கையின் பொலனறுவை சிவன் கோயில் என கூறும் போது எம்மவர்கள் "சிங்களப் பிரதேசத்தில் எம்முடைய சமயம் பரம்பியுள்ளது" எனப் பெருமையாகக் கூறிக் கொள்கின்றனர். அப்பெருமைக்கு காரணம் சோழர்கள் ஆட்சியும் அவர்கள் காலத்தில் கருங்கற்பாறைகள் கொண்டு ஆலயங்களினைக் கட்டியமையுமே ஆகும். அவர்கள் அன்று வெறுமனே உக்கக் கூடிய பொருட்களால் (நல்ல காலம் அப்பொழுது சீமெந்து இல்லை இவற்றைக் கட்டியிருந்தால் ஆலயங்கள் இருந்தமைக்கான தடயங்கள் கூட இன்று இருந்திருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலும் இந்தியாவிலும் காணப்படுகின்ற மிகப் பழைமையான ஆலயங்களாகக் கருதக்கூடியவை கருங்கல்பாறைகளை கொண்டு அமைக்கப்பட்டவை ஆகும். தமிழர்கள் உக்காத பொருட்களினைக் கொண்டு வரலாற்றினை எதிர்காலத்திற்கு எடுத்துரைக்க தவறியதில்லை. குறிப்பாக சங்க காலத்தில் நடுகல் வழிபாட்டின் மூலமும் அதற்கு பின்னரான காலப்பகுதியில் விசித்திர சித்தனினால் உக்கப்படாத பொருட்களைக் கொண்டு ஆலயங்கள் அமைக்கப்பட்டதனை மண்டகப்பட்டு சாசனத்தில் "செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம்" இல்லாது பிரம்மா, விஸ்ணு ஆகிய கடவுளர்களுக்கு ஆலயங்கள் கட்டியமையும் காணமுடிவதுடன் அதன் தொடர்ச்சியாக குடைதளிகள், மலைதளிகள், கட்டுத்தளிகள் எனக்கோயில்களும் தோற்றம் பெற்றன. இவற்றின் தொடர்ச்சியாக இன்றும் நம்மால் காணக்கூடிய பல ஆலயங்கள் உள்ளன.

இன்றும் கூடசீமெந்தினைநம்பிஇந்துஆலயங்களும் அவைசார்பானகட்டடங்களும் கட்டிக் கொண்டிருப்பது தமிழர் பிரதேசத்தில் மாத்திரமே. இங்கு வேறு மதங்கள் வந்தாலும் அவை காலத்தினைத் தாண்டியதாகவே எதிர்காலத்தில் கருதப்படும். ஏனெனில் அவை நன்கு சுடப்பட்ட செங்கற்கள் கொண்டு கட்டப்படுகின்றன. எமக்கு நிலையான பேண்தகு தன்மையுள்ள ஒரு ஆலயமும் இல்லை. ஆலயம் சார் கல்வெட்டுக்களும் இல்லை. எனவே மொழியும் மரபும் மற்றும் சமயமும் நிலைத்திருக்கவும் சிறந்த தொன்மையும் எதிர்கால நிலைத்திருப்பதினைக் கருதியும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆலயங்கள் கருங்கற் பாறைகளைக் கொண்டே எதிர்காலத்தில் கட்டப்படல் வேண்டும்.

நவீன வாழ்க்கை முறைகளும் இன்றைய இளைஞர்களின் போதைப்பொருள் பாவனை, ஆடம்பர வாழ்க்கைப்பாணிகள் முதலானவை எதிர்காலத்தில் ஆலயங்கள் மீதான ஈடுபாட்டினைக் குறைப்பதாகவே அமையும். இக்கால சந்ததியினர் எதிர்காலத்தினையும் கருத்தில் கொண்டு ஆலயங்களைச் சிறந்த முறையில் அதீத ஆயுட்காலத்தைக் கொண்டவையாகவும் அமைக்கப்பட வேண்டும். இது தமிழினத்தின் நிலைத்திருப்பிப்பினைத் தீர்மானிக்கும் காரணியாகவும் அமைவதுடன் ஆலயங்கள் பல ஆயிரம் ஆண்டுகளையும் தாண்டி கிளிநொச்சி மண் மீது நிலைத்திருக்க வேண்டும் என்பதே எனது அவா!

**" மனிதர்கள் அழியலாம்**
**மனிதர்களால் மனிதம் காக்க உருவாக்கப்பட்ட மதங்கள் அழியாது"**

**மு.டிலோசன்**
*அபிவிருத்தி உத்தியோகத்தர்,*
*பிரதேச செயலகம் - கரைச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (வெளிக்களம்)



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : திருமதி.க.நிதிலேகா, திருமதி.பா.புவனேஸ்வரி, திருமதி.அ.சுஜதாஷினி, திரு.ச.மாதுகி (ADS) திரு.த.முகுந்தன் (DS), திரு.பூ.ராஜ்வினோத் (DDP), திரு.கு.சுரேஸ்குமார் (Accountant) திருமதி.க.புஸ்பா, திருமதி.பி.கோகுலவாணி,

நிற்பவர்கள் முதலாவது வரிசை இடமிருந்து வலம்: திருமதி.ர.மேரிசசிகலா, திருமதி.ஜெ.ஜெயதர்சினி, திருமதி.ஜெ.ஜெயகௌரி, செல்வி.ந.டெஷ்சியா, திருமதி.பு.பிரசல்யா, திருமதி.ச.தவமலர், திருமதி.வி.விஜயலக்சுமி, திருமதி.க.தபோதினி, திருமதி.ஜ.நேசமலர், திருமதி.அ.மலர்விழி, திருமதி.த.ஜசி, திருமதி.த.நிசாந்தி, திருமதி.அ.துளசிகா, திருமதி.பொ.குயின்சி, திருமதி.தி.அனுசா, செல்வி.வி.மாதவி, திருமதி.பி.சத்தியவாணி, திருமதி.ர.மனோரஞ்சினிதேவி, திருமதி.பா.நிருஜா, திருமதி.நி.துஸ்யந்தி,

நிற்பவர்கள் இரண்டாவது வரிசை இடமிருந்து வலம்: திருமதி.ம.நிரஞ்சலா, திருமதி.கி.சர்மிளா, திருமதி.ரு.யசோதா, திரு.கு.அருமைராசா, திரு.கு.புஸ்பாகரன், திரு.ஞ.கனிசியஸ், திரு.மா.அரிதாஸ், திரு.யோ.நிரோசன், திரு.க.தனுஷன், திரு.செ.ஜெயந்தரூபன், திரு.சௌ.கீர்த்தீபன், திரு.இ.ஜோன்சன், திரு.கு.சங்கீதா, திருமதி.சே.சமன்லதா,

சமுகமளிக்காதோர்: திருமதி.சி.ரோகினி, திரு.சி.ஜெயதீபன், திருமதி.சு.ரஞ்சிதமலர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமிளிர் கரைச்சி வாழ்கவே..!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய வாழ்வியல்

## சைவத்தின் சிறப்பு

நமது சிவநெறியாகிய சைவம் மக்களது இயற்கை அறிவு வளர்ச்சி வாயிலாகத் தானே தோன்றி மெய்யறிவு பெற்ற மேலோர் வழியாக நாட்டில் நிலவுவது. இதனால் இச்சான்றோரால் இன்ன காலத்தில் இன்ன இடத்தில் இன்ன சூழ்நிலையில் சிவநெறி தோற்றுவிக்கப்பட்டது என உரைக்கும் வரலாறே இதற்கு இல்லாததாயிற்று. ஏனைய சமயங்கள் ஒருவரால் படைக்கப்பட்டு நிலவுவன. அவர் கூறியனவே வேதம். அவற்றை ஏன்? எப்படி? என ஆராயாது கூறியபடியே ஏற்று நம்புவதே மக்கள் செயலாகும். நம் சைவசமயமோ எனின் அறிவாராய்ச்சியை அடிப்படையதாகக் கொண்டது. அறிந்தவற்றைக் கொண்டு அறியப்படாத இறைவன் இயல்பை எண்ணி அறிந்து மக்களை ஒழுகச் செய்வது எவ்வாறு எனில் உலகப்பொருள்களால் வளரும் அறிவில்லாத உடலும், அறிவுடைய உயிரும் ஒருக்காலும் தாமே கூட மாட்டா. உடல் அறிவில்லாத பொருளாதலால் தனக்குரிய உயிரைத் தானே தேடிக்கொள்ளாது. உயிர் அறிவுடையதாகையால் அழகில்லாத நோய் மலிந்த உடம்பை ஒருகாலும் சென்றடையாது. ஆகவே இரண்டையும் கூட்டி, உருவாக்கி வாழச் செய்யும். மூன்றாவது பொருள் ஒன்று வேண்டும் அப்பொருளே சிவம்.

உலகு என்பது நிலவணு, நீரணு முதலிய அணுக்களால் ஆனது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர்,

"நிலம், நீர், தீ, வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்" (மரபு 89) என்றார். அணுக்கள் யாவும் பலவகைச் சக்திகளால் ஆனவை என்பது இன்றைய விஞ்ஞானத்தின் முடிவு. (Eddington say matter is composed of electrons and protons that is positive (+) Negative charges of electricity.) எனவே நாம் வாழும் உலகிற்கு முதல் காரணம் சக்தி என்பது விளங்கும். இச்சக்தியை தான் சைவம் மாயை என்கிறது. மாயையாகிய சக்தியை ஒளிமயமாய் இருப்பது என்பதை அணு விஞ்ஞானம் கண்கூடாக ஒளித்திரையில் (spectrum) காட்டிவிட்டது.

சாதாரண மக்கள் நலம் கருதி தாய்க்கடவுளையும் பிறகடவுளையும் வழிபட்டுக் கொண்டிருந்த போது, சிந்தனையாளர்கள், (ஞானிகள்) பரம்பொருளில் சிந்தனையைச் செலுத்தி தத்துவம் வடித்தனர். சிவனை அவர்கள் பேரண்டத்தின் ஆத்மாவாகவும் (Cosmic soul) எங்கும் நிறைந்து எல்லாம் வல்லதாய் விளங்கும் வான்வெளியின் மறைபொருள் தாய்த்தெய்வத்தை, (சக்தியை - Enargy) பேரண்டத்தின் ஆற்றலாகவும் கண்டனர். சக்தியையும் சிவனையும் உருவகப்படுத்திக் காட்டியபோது சிவனை வலது பாதியாகவும் சக்தியை இடது பாதியாகவும் காட்டினர். இந்த மெய்ஞ்ஞானத்தில் விஞ்ஞானம் புதைந்திருக்கின்றது என்று கூறினால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் தமிழ்ச் சமுதாயத் தலைவர்

தொல்காப்பியர் நானிலக் கடவுளர்களை நிலத்துக்கென முறைப்படுத்திக் காட்டுகின்றார். பிற்காலத்தில் சிந்தனையாளர்கள் பரம்பொருளுக்கு ஒற்றை வடிவு அளித்தபோது நானிலக் கடவுள் வழிபாட்டில் ஒருமையைக் காட்டி நானில வடிவன் என்றவாறு நான்முகனாக்கினர். தொல்காப்பியர் தமது இலக்கணத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நாலு நிலத்துக்கென பெயர் சூட்டிய கடவுளர்களை, முறையே சேயோன், மாயோன், வேந்தன், வருணன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையிற் சொல்லவுறம் படுமோ'**

பண்டைத் தமிழர் காடுசார்ந்த முல்லை நிலத்தில் (மேடு) ஆடுமாடுகளை மேய்த்து வந்தனர். அவர்களுள் பெரும்பான்மையோர் ஆயர்கள் எனப்பட்டனர். புல் வெளிச் செழிப்பும் நீரும் கால்நடைத் தொழிலை வளம்படுத்த ஆதாரமாயின. அவர்கள் திருமாலை வழிபட்டனர். (மால் – மேகம்) திருமாலைத் தொல்காப்பியர் மாயோன் என்றார். கடற்கரையில் வாழ்ந்தவர்களின் வாழ்வு நீரில் நிலைத்திருந்தது. அவர்கள் நீர்க்கடவுளை வழிபட்டனர். அதுவே நாராயணன் (நாரா + அயனன் = நாராயணன் = நாராநீர்) கடலில் நீண்ட பரப்பைக் குறிக்க நெடியோன் என்றனர். வருணன் என்பதன் பொருளும் நெடியோன் என்பதாகும். வார் நெடுமையைக் குறிக்கும். (நீளமான தோற் பொருள் வார் எனப்படுகின்றது.

பண்டைத்திராவிடர்பண்பாட்டுமண்டலங்களில்கிடைத்ததொல்பொருள்சான்றுகளின்படி வருணன் திராவிடர்களின் வழிபாட்டிலும் நீர்த்தொடர்பானவருமாகும். (பின்னர் வைதிக சமயத்தில் திருமாலையும் நாராயணரையும் இணைத்துள்ளனர்.

பிற்காலத்திலே நாராயண வழிபாடு திருமால் வழிபாட்டின் துணை வழிபாடாக விளங்கியது. இருக்கு வேதத்தில் வருணன் (வருணன் – நெடியோன்) அசாதாரணமாக காட்டப்பட்டிருப்பதால் வருணன் (வாரணன்) திராவிடர்களின் கடல்தெய்வம் என்பது தெளிவு. மருத நிலத்தில் வேந்தன் (வேய்ந்தன்) வழிபாடு தெய்வம் என்றார் தொல்காப்பியர். சிவன் திராவிடர்களின் முழுமுதற் கடவுள். தமிழ்ச்சமுதாயத்தின் தலைவன், அவன் எந்த நிலத்திற்கும் கடவுளாக குறிக்கப்படவில்லை. காட்டு மிராண்டி வாழ்க்கையிலிருந்து மனிதன் நாகரிக வாழ்க்கைக்கு மாறியபோது சிவன் தமிழ்ச் சமுதாயத்தின் முழுமுதற் கடவுளாக மதிக்கப்பெற்றான். அவன் எருதைக் கண்டான். அதை தனக்கு வாகனமாக்கினான். ஏர் ஊர்ந்த செல்வன் நீ" என்பது திருமுறை. பாம்பைக் கண்டான், பாம்பின் விசத்தை அடக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையாகப் போட்டுக் கொண்டான். திராவிடர்களை அழிக்க வந்த அவுணர்களோடு போரிட்டு தமிழ்ச் சமுதாயத்தைக் காப்பாற்றினான். வெற்றியின் மகிழ்ச்சியில் ஆனந்தத்கூத்தாடினான். சங்க இலக்கியத்தில் சிவன் பிறபல பெயர்களால் அறியப்பட்டார். முக்கட் செல்வன், செஞ்சடைக் கடவுள், வேணியன், ஆலமர்ச் செல்வன், கறை மிடற்றண்ணல், காரியுண்டிக் கடவுள், பிறவா யாக்கைப் பெரியோன், ஏறூர்தியான் போன்ற பெயர்களில் சங்ககாலத் தமிழர்கள் சிவனை அறிந்தனர், வழிபட்டனர். அவனைத் தவத்தில் வலியவன், சடையுடையவன், நெற்றிக்கண் உடையவன், என்றறிந்தனர். பிறையும், உடுக்கையும், முக்கோலும், புலித்தோலும் அவனுடைய இலச்சினைகளென கொண்டனர். தவக்கோலத்திலும் ஆடும் நிலையிலும் தமிழர்கள் கண்ட சிவன் கடவுளாகும். தமிழர்களின் முக்கியமாக கடவுள் என்ற பொருளில் வழங்கினர். வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது நாதன் நாமம் நமச்சிவாயவே' என்பது திருமுறை. நமச்சிவாய என்பதன் பொருள் "சிவனுக்கு வணக்கம்."

## சமய வாழ்வு

தமிழினத்தின் வாழ்வு சமயப் பணியிலே வளர்ந்து வளம் பெற்றது. வாழ்க்கைக்கடலில் வீசும் துன்பத்தை இன்பமாக மாற்றிக் கொடுப்பது. சமயம், அன்பு பொருந்திய அறம் தழுவிய ஒழுக்கம் நிறைந்த நல்வாழ்வைக் கொடுக்கும் தகுதி சமயத்திற்கே உண்டு. சமய சார்பற்ற ஒழுக்கம் உலகில் நிலை பெற்றிருக்காது. தனி வாழ்வில் தேவைகள் நிறைந்து கொண்டிருக்கின்ற அளவுக்குத்தான் சமய சார்பற்ற ஒழுக்கம் நிலைபெற்றிருக்க முடியும். வாழ்க்கையின் தேவை பெருகி அவை கிடைக்காது போனால் ஒழுக்கம் சிதைந்து எவ்வகையிலும் தேவையை நிறைவு செய்யவே மக்கள் தலைப்படுவர். சமய வாழ்வு நீதியையும் நேர்மையும் ஒழுக்கத்தையும் காக்க முடியும். இதனை நன்குணர்ந்தே தமிழ்மக்கள் சமய வாழ்க்கையின் இன்றியமையாமையை ஏற்படுத்தினர்.

தமிழர் கண்ட சமய வாழ்வு அகம் புறம் இரண்டும் ஒத்த சமய வாழ்வு, இரண்டும் இயைந்து கலக்காத வாழ்வு வாழ்வல்ல. அதனாலேயே அகமும் புறமும் ஈடுபடுகின்ற வழிபாட்டு முறையை தமிழர்களது சமயம் வற்புறுத்துகின்றது.

நமது சமயம் வழிபாட்டுக் கலையிலும் வாழ்த்துகின்ற பண்பிலும் மிகச்சிறந்து நிற்கின்றது. இன்று வாழ்க்கையோடு ஒட்டிய சமயம் சடங்குச் சமயமாக மாறிவிட்டது. அகத்தைத் தூய்மைப்படுத்தி செய்யப்பெறும் சடங்குகள் உள்ளத்தூய்மையுடன் செய்யப் பெறாமையால் வழிபாடுகளும் சடங்குகளும் நெஞ்சத்தில் கலக்கவில்லை. இதயத்தில் ஒலிக்க வேண்டிய சமயம் வாயளவில் ஒலிக்கும் நிலைக்கு வந்து விட்டது. உண்மையில் சமயவாழ்வு அருகிக் கொண்டே வருகிறது. அதனால் பண்பாடும் சிதைந்து, சாதி முதலிய போலி மனப்பான்மையும் உருவெடுத்து விட்டன. இன்று தமிழர் மத்தியில் மூன்று வணிகங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அவை பக்தி வணிகம், தமிழ் வணிகம், அரசியல் வணிகம் இங்கு பக்தி வணிகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்தி வாணிபம்

பெருங்கோயில்கள் கொள்ளையர்கள் புகக் கூடிய அளவு பொன்னும் பொருளும், செல்வமும் செல்வாக்கும் பெற்றுத் திகழ்கின்றன. "அருமையில் எளிய அழகே போற்றி" என்று மாணிக்கவாசகர் சுட்டிய எளிமை, கூட்ட நெரிசலிலும் காணிக்கைச் செல்வக் குவிப்பிலும் காணாமற் போய்விட்டது. பத்தாயிரம் கொடுப்பவர்களுக்கும் ஆயிரம் கொடுப்பவர்களுக்கும் ஐந்து பத்துக் கொடுப்பவர்களுக்கும் அந்த அந்த அளவுக்கேற்ற மரியாதை கடவுள் "புல்லிலை எருக்கமாயினும்" போதுமென்கிறார். எந்தக் கடவுளும் எனக்கு வைரமுடி கொடு, தங்கத்தேர் செய்து வை, மாணிக்கப் பொன்மாலை தா" என்று கேட்கவில்லை. மனிதனை மனித நேயமற்ற அன்பை மறக்கடிக்க வைக்கும் மதமாக, நம் சமயத்தை மாற்றி விட்ட பெருமை கோயில் தரகர்களுக்கும் மட அதிகாரிகளுக்குமே உரியதாகும். தமிழை கருவறைக்குள் நுழைய விட மறுக்கும் தரகர்கள் இந்தப் பக்தி வணிகத்தைத் திறம்பட நடத்த மக்களே கருவியாகிப் போயினர். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பது மண்ணுக்குள் புதைக்கப்படுகிறது.

"இறைவழிபாடு என்பது சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்வது. இது தமிழர் வழிபாட்டு முறை. இன்றைய தெய்வ வழிபாட்டில் நாம் அறியாத மொழியில் முறம் போன்ற காதுகளை உடையவனே, குடம் போன்ற வயிற்றை உடையவனே, பெண் இன்பத்தை பெரிதும் விரும்புவனே என்று ஆண் தெய்வங்களையும், மலை போன்ற கொங்கைகளையுடையவளே, இடையறாத போகத்தை விரும்புவளே, என்று பெண் தெய்வங்களையும் வழிபாடு என்ற பெயரால் வசை பாடுகின்றனர். இன்றைய வழிபாட்டு அர்ச்சினைகளில் தெய்வ நிந்தனையும், வஞ்சனையும் பெருகியிருக்கிறதேயன்றிப் பூசையும் வணக்கமும் இல்லை என்றால் அது மிகையாகாது. வடமொழித் தொடர்களைக் கேட்கும் வடமொழி அறிஞர்கள் மனத்தே வெறுப்பும் முகத்தே சுழிப்பும் கொண்டு வருந்துகின்றனர். அரசியல் கல்வி, வாணிபம் முதலிய எல்லாத் துறைகளிலும் மக்கள் வழங்குகின்ற மொழியிலேயே இருக்க வேண்டும் என்ற வேட்கை மீதூர்ந்திருக்கும் இந்நாளில் தமிழருள் சிலர் மொழி வெறி கொண்டு நம் சமய வழிபாட்டில் செய்து வரும் பெரும் பிழையை திருத்திக் கொள்ளாமல் விடாப்பிடியாக இருப்பது சமய வளர்ச்சிக்கும் சமய வாழ்வுக்கும் ஆதரவு தருவதாகத் தோன்றவில்லை. வடமொழி அறிஞருக்கும் வெறுப்பைத் தந்து நாட்டு மக்களுக்கும் இருளை விளைவித்துச் சமய உணர்ச்சிவொழுக்கங்களுள் மக்கள் உள்ளத்தில் புறக்கணிப்பை நல்கும் இப்பிழையான வழிபாட்டு முறையை சமய நிலையங்களில் இனியும் நீடிக்க விடுவது அறமாகாது. மேலும் வடமொழி ஆகமங்களோ, தமிழ்ச்சமய இலக்கியங்களோ யாவும் எக்காலத்திலும் எவரிடத்திலும் வட மொழியில் தான் வழிபாடு நடைபெற வேண்டும் என்ற விதியை வகித்ததே கிடையாது. வாழ்க்கைத் துறையில் சமய வாழ்வில் போலிச் செயல் பெருகிச் சென்றால் வழிபாட்டில் போலியுரை வருமானால் தெய்வங்களின் அருள் தானாக வருமா என்று உள்ளம் அஞ்சுகிறது. தெய்வந்தான் துணை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெற்கோதும் தேவாரம் திருவாய் தன்
மொழியான தேனிருக்கச் செக்காகும்
இரைச்சல் என வேதபாராயணமேன்" என்றார்.
பாவேந்தர் பாரதிதாசன்,

**முடிவுரை**

எமது மதம் என்ன? எமது மொழி என்ன? எமது இனம் என்ன? என்பதை நாம் சிந்திப்பதில்லை. இந்து மதம் என்ற போர்வையில் எல்லாவற்றையும் நாம் உள்வாங்குகின்றோம். இராமாயணம். திராவிடனார், ஆரியம் வென்றதாகவும் சைவத்தை வைணவம் வென்றதாகவும் சுட்டிக் காட்டுகின்றது. இராமாயணம் பற்றியும், மகாபாரதம் பற்றியும் மேனாள் இந்தியப் பெருநாட்டின் தலைமை அமைச்சர் பண்டிதர் ஜவகர்லால் நேரு மகள் இந்திராகாந்திக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டதாவது இராமாயணம் ஆரியருக்கும் திராவிடருக்கும் நடந்த போரைக்குறிக்கும். அத்துடன் சைவத்தை வைணவம் வென்றதாகவும் சுட்டப்படுகின்றது. மகாபாரதம் திராவிடர்கள் திராவிடர்களோடு மோதி அழிந்தனர் என்பதாகும்.

வைணவன் வைணவனாகவும், பௌத்தன் பௌத்தனாகவும், கிறிஸ்தவன் கிறிஸ்தவனாகவும். இஸ்லாமியன் இஸ்லாமியனாகவும் வாழ்கின்றான். சைவன் மட்டும் எல்லாவற்றையும் உள்வாங்குகின்றான். சைவசமயம் உலகில் தோன்றிய முதற் சமயம். இயற்கையோடு இசைந்த சமயம். தமிழ் உலக மொழிக்கெல்லாம் தாய்மொழி. உலகின் முதல் மொழி. எனவே தமிழ் உயர் தனிச் செம்மொழி எனப் பெருமிதம் கொண்டு வாழ்வோம். அந்த மொழி எந்த மொழிக்கும் தாழாத வகையில் பாதுகாப்போம். சைவசமயம் உலகில் தோன்றிய முதல் சமயம். அந்த சமயம் எந்தச் சமயத்திற்கும் தாழாத வகையில் பாதுகாப்போம்.

**வே.இறைபிள்ளை**
*கிளிநொச்சி தமிழ்ச்சங்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவுணவுகளும் உடல் நலமும்

பிறவிகளுள் மனிதப் பிறவியை விஞ்சியது வேறு எதுவுமில்லை. மானிடராகப் பிறப்பதற்கு மாதவம் செய்திருக்க வேண்டும். மண்ணில் பிறந்த ஒவ்வொருவருக்கும் அன்பு கலந்த சிறந்த நோக்கங்கள் இருக்க வேண்டும். அதற்காக இவ்வுலகில் வாழ்வதற்கு அடிப்படையாக அமைவது உணவு, உடை, உறையுள் என்ற மூன்றுமேயாகும். இம் மூன்றினுள்ளும் முதன்மையானதும் முக்கியமானதும் உணவாகும். உணவானது அனைவருக்கும் வேண்டும். எப்போதும் வேண்டும், எப்படியாவது வேண்டும்.

உணவென்பது தூய்மையாகவும், சுவையாகவும், சத்துள்ளதாகவும் நோயெதிர்ப்பு சக்தி கொண்டதாகவும் இருக்க வேண்டும். உணவே மருந்தென்ற நிலை மாறி இன்று மருந்தே உணவென்ற நிலையானது விரைவுணவுகளின் தாக்கத்தினால் வந்து விட்டது. "சுகம்" என்ற சுவர் இடிந்து போய்க் கொண்டிருக்கின்றது. நாற்காலியின் நிலைப்புக்கு நான்கு கால்கள் போல மனித உடல் நல நிலைப்புக்கும் புரதம், கொழுப்பு, காபோவைதரேற்று, விற்றமின்கள் என்ற நான்கு பெரும் பகுதிகள் தேவை என அறிவியல் அடிப்படையில் அறியப்பட்டுள்ளது.

உலகம் அமைந்ததன் பின்னாலே விளைந்தன எல்லாம் இயற்கையிலே! இயற்கையின் வளமெனும் வாய்ப்புகளால் ஒப்பற்று வாய்த்தன உணவுகளே! ஆனால் நாம் இன்று நாகரிக மோகத்தில் விரைவுணவுக் கலாசாரத்திற்கு அடிமையாகி பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளோமல்லவா? தேசிய சத்துணவுக்கழகமானது புரதம், விற்றமின், கனியுப்புக்கள் மிகக் குறைந்தளவு அல்லது அறவே இல்லாத மிகுந்த உப்பும் கொழுப்பும் கொண்ட உணவுகளை விரைவுணவுகள் என்று வரையறுத்துள்ளது.

பன்னாட்டு துரித உணவுக் கம்பனிகள் துரித உணவு வகைகளை அறிமுகப்படுத்தி நம் மக்களை அதற்கு அடிமைகளாக மாற்றி வருகின்றன. இதனால் ஊட்டச்சத்துக்கள் மிகுந்த எமது பாரம்பரிய உணவு முறைகள் அழிக்கப்பட்டு உடல்நலத்திற்குக் கேடான இரசாயனப் பொருட்கள் கலந்த சுவையான உணவுகள் தோற்றம் பெற்றுள்ளன. இதனால் உடல் நலம் கெடுவதுடன் அடிக்கடி பசியைத்தூண்டுவதால் உடல் பருமனும் அதிகரிக்கிறது.

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற சான்றோர் வாக்குகளும் அதன் மகத்தான தத்துவங்களும் அருகி மனிதன் "நோயே வாழ்வு மருந்தே உணவு" என்ற நிலைக்கு மாறுகின்றனர். இவ் விரைவுணவுகளால் தொற்றா நோய்களான புற்றுநோய், இதய நோய், நீரிழிவு, இரத்த அழுத்தம், என்புருக்கி நோய் போன்றன ஏற்படுவதாக உலக சுகாதார நிறுவனமும், ரஷ்ய ஆராய்ச்சியாளர்களும் நிரூபித்தள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவுணவுகள் சுவை மிகுந்ததாகவும், பரிமாறுவதற்கு இலகுவாகவும், பார்வைக்கு அழகானவையாகவும் காணப்படுவதால் எல்லோராலும் அதிகளவில் தற்போது விரும்பப்படுகின்றது. ஆனால் மொத்தத்தில் இவை எம் உடலை உடனின்று கொல்லும் நச்சுப் பொருள் என்பதை நாம் மறந்து விடுகின்றோமல்லவா! ஆதலினால் "வேண்டியதைக் கொள்வோம், வேண்டாதவற்றைத் தவிர்ப்போம்" விரைவுணவுகளின் தாக்கம் பற்றி லேஜே. ஜார்ஜ். ஆர்வல் என்ற நாவலாசிரியர் கூறுகையில் எந்திரத் துப்பாக்கியால் சுட்டால் ஒரு நிமிடத்தில் ஒரு தடவையில் நம் உயிர் போய் விடும் ஆனால் பதனிடப்பட்ட பொதி செய்யப்பட்ட கலப்பட உணவுகள் எம்முயிரைத் தினம் தினம் பல வழிகளில் கொல்கிறது என்றார்.

வீடும் வயலும் வாழ்வும் இயற்கையாய் இருந்த வரை கிராமத்து இதயங்கள் இயல்பாய் துடித்த வரை எல்லாமே சிறப்பாய் இருந்தன. ஆனால் இன்று வீடுகள் தோறும் இரசாயனம் கலந்த கலப்பட உணவே வாழ்க்கையானதால் கைகலப்பும் கலவரமும் தோன்றிக் கைம் மருந்தும் உணவும் மறந்து சிறுதானிய உணவும் சிறுமையாகிக் குளிர்காரன் நாட்டுக்கு அடிமையாகி விட்டோம்.

பழையவை, நல்லவை பாதுகாக்கப்பட வேண்டியவை. பின்பற்றத் தக்கவை, புதியவை தேவைதான். புதிரானவை அல்ல. பழையவை தேவைதான் அவை எதிரானவை அல்ல .அனைத்துக்கும் ஒரு அளவு உள்ளது. தினையளவு குறைந்தாலும் ஆபத்து. பனையளவு கூடினாலும் ஆபத்து. பசுமையான காய்கறிகள் சத்துணவு மட்டுமல்ல நோய் தடுக்கும் நல்லுணவுமாகும் என்பதை நம்மவர்கள் மறந்து விட்டனர். இன்று பழங்கள், காய்கறிகள், தானியங்கள் அனைத்திலும் கலப்படம் செய்து கவர்ச்சியாக வாழ நினைக்கிறோம்.

இவ்வாறு சிறிதளவில் நன்மைகளையும் பெரிதளவில் தீமைகளையும் கொண்ட விரைவுணவுகளையும் அவைகளை உண்பதால் எமக்கு ஏற்படும் உடல் நலக்கேடுகள் தொடர்பான விழிப்புணர்வுகளையும் எம்மவர்களிடையே ஏற்படுத்தி இயற்கை மறுமலர்ச்சிக்காகவும், சமுதாய மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளதல்லவா?

**"சூழல் சிறந்தால் சுகாதாரம் நிலைக்கும்**
**சீருணவு கிடைத்தால் சுகமெங்கும் ஓங்கும்**
**எல்லாம் இயற்கை என்றால் இயற்கை உணவு கிடைக்கும்**
**வேண்டிய உணவு கிடைத்தால் வேண்டாத நோய்கள் வராது**
**மருந்துகள் தேவையில்லை மருத்துவ மனைகளும் தேவையில்லை**
**சீருணவும் சிறப்புச் சூழலும் என்றும் நிலைக்கட்டும்."**

**திருமதி. சு. யமுனா**
*அபிவிருத்தி உத்தியோகத்தர்,*
*நிறைவேற்று எந்திரி அலுவலகம்,*
*கட்டடங்கள் திணைக்களம்,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஆதிக்கச் சிறையில் அமிழ்ந்தது போதும் ஆற்றலின் வடிவாய் எழுந்திடம்மா !"

போக வேண்டும்,
அழிந்து போக வேண்டும்.
சீதனமும், பெண்ணடிமையும்
அழிந்து போக வேண்டும்.
சாதி மதம் சரிந்திட நான் கவி தீட்ட
மதி கேடர் என் நெஞ்சத்தணல் பொங்க எரியூட்ட
(போக வேண்டும்)

வேதனை மேல் வாழும் கன்னி
விடிவு காண வேண்டும்.
சோதி நிலவுகள் சிந்தை குளிர்ந்திட
சோதனை தீர வேண்டும்.
சாதி மதம் சரிந்திட நான் கவி தீட்ட
மதி கேடர் என் நெஞ்சத்தணல் பொங்க எரியூட்ட
(போக வேண்டும்)

பொன்னின் குடத்திற்கு பொட்டிட வேண்டுமோ?
பொன்பொருள் சீதனம் வேண்டுமோ?
ஆண்மையும் மானமும் வீரமும் உள்ளவன்
ஆசைப்படுவானா? காசுக்கு !
திண்ணிய நெஞ்சமும் நேர் கொண்ட பார்வையும்
தீண்டவே மாட்டானோ பொன்னுக்கு.
சாதி மதம் சரிந்திட நான் கவி தீட்ட
மதி கேடர் என் நெஞ்சத்தணல் பொங்க எரியூட்ட
(போக வேண்டும்)

சாதியம் சாத்திரம் என்றுரைப் போரை
சந்தி சிரிக்க வேண்டும்.
ஆதிக்க நெஞ்சினை கூற்றுவ நஞ்சினை
கொன்று ஒழிக்க வேண்டும்.
காரைக் கிழித்திடும் மின்னலைப் போல் மகள்
காசினி பிறக்க வேண்டும்.
ஊரை வளர்த்திடும் சீரை அழித்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியம் சாத்திரம் ஒழிக்க வேண்டும்.
சாதி மதம் சரிந்திட நான் கவி தீட்ட
மதி கேடர் என் நெஞ்சத்து அனல் பொங்க எரியூட்ட
(போக வேண்டும்)

திருமணம் பேச வந்தவரோ,
திருமகள் குணம் போற்ற வேண்டும்.
சாதியைப் பார்த்தவர் சரியென்ற பின்னர்
சாதகம் பார்த்தவர் சலித்தெழுந்தார்.
பேதையே ! உன் வாழ்வில் வாதம் கொடுத்தோனை
பின்னங்கால் பட கலைக்க வேண்டும்.
சாதி மதம் சரிந்திட நான் கவி தீட்ட
மதி கேடர் என் நெஞ்சத்தனல் பொங்க எரியூட்ட
(போக வேண்டும்)

கோதையே ! எழுந்திடு சோதரி வாழ்ந்திட
கொலை வாள் கருவியை எடுத்திடம்மா !
சாதியம், சாத்திரம், சீதனப் பேய்களும்
சந்தியில் வைத்து எரித்திடம்மா !
ஆதிக்கச் சிறையில் அமிழ்ந்தது போதும்
ஆற்றலின் வடிவாய் எழுந்திடம்மா !
சாதி மதம் சரிந்திட நான் கவி தீட்ட
மதி கேடர் என் நெஞ்சத்து அனல் பொங்க எரியூட்ட
(போக வேண்டும்)

**மங்களராசா மைக்கல் கனியூட்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித, இயற்கை இயங்கியல் வாழ்வியல் குலைப்பு

**"நிலம், தீ, நீர், வளி, விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை ஐம்பால் இயல்நெறி வழா அமைத்**
**திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்."**

தொல். பொரு. மர. நூ.பா.1589

மேற்குறித்த நூ.பா. சுட்டும் ஐம்பூதங்களான நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஆகியவற்றின் அணுக்கள் குறித்த விழுக்காட்டின் அளவில் ஒன்றிணைவதன் காரணமாய் தோன்றுவதே இவ்வுலகில் காணும் உயிரற்ற பொருட்களும், உயிருள்ள அறுவகை உயிரிகளும் ஆகும். ஆகையால் உயர்திணை, அஃறிணை ஆகியவற்றையும், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் போன்றவற்றையும் அறிந்து கொண்டும், அவற்றின் இயல் நெறிபோன்ற இயல்பான இயங்காற்றல் திறன்கள் வழுவின்றி அமைந்துள்ளதை அறிந்து, எவ்விதத் திரிபுக் கருத்துக்கும் இடந்தராதவாறு உரிய சொற்களால் அவற்றைக் குறிப்பிடும் நன்நெறியைத் தழுவி வாழுதல் வேண்டும் என்பதை இந்நூற்பா வலியுறுத்துவதாக உள்ளது. இங்கு ஆண்பால் என்பது ஆண் தன்மையைக் குறிப்பது போன்று, பால் என்பது ஒருபொருளின் அணுவியல் மெய்யியல் தன்மையைக் குறிக்கும் மரபாகும். ஆனால் இந்த மரபியல் வரையறைகள் பற்றி பள்ளிகள், கல்லூரிகளில் கற்பிக்கப்படுவதில்லை. எல்லாவற்றிலும் சிதைப்பும், திரிப்பும், அனைத்திலும் குலைப்பும் தான். ஆட்சியாளரின் பக்கச்சார்பான செயல்களாலும், தவறான வழிநடத்தலாலும், **"அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி"** என்ற சொல் வழக்கின் வழி மக்களும் செயற்படுகின்றனர். எல்லாவற்றிலும் கையூட்டு, ஊழல், மோசடி, போன்ற முறைகேடுகள், எப்படியும் பணம் புரட்டலாம் என்பதை கருப்பொருளாக்கிய செயற்பாடுகள்,

இதனால் இன்று இந்த உலகமானது உயிரியக்கம், மனித நேயமற்ற, மனிதத்தைக் குழிதோண்டிப் புதைத்து, விலங்காண்டிகள் வாழும் கொடுமை நிறைந்த உலகமாகவே காட்சிதருகின்றது. மாந்தர் அறியாமையினால் புறவாழ்வுக்கு முதன்மை கொடுத்து வல்லவன் பலவான் என்ற கோட்பாட்டை முன்னிறுத்தி, இவ்வுலகை அடக்கியாள முயற்சித்துக் கொண்டே இருக்கின்றான். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து கி.பி.20ஆம் நூற்றாண்டுவரை (2ஆம் உலகப் போர்வரை) காட்டு விலங்காண்டியாய் (உகாண்டா இடியமின் போன்ற மனித அரக்கர் தசையுண்டவர் வாழ்ந்த) வாழ்ந்தவன், இன்று தன்னைப் புதுப்பொலிவுடன் ஆக்கி ஒரு ஆ(பசு)த்தோல் போர்த்த புலியாய் காட்சி கொடுக்கின்றான். தன்மேலாண்மை வெறியைக் கட்டவிழ்த்து விட்டு மனித அடிப்படை உரிமைகளையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலில்போட்டு மிதிக்கின்றான். அறிவு, அறிவியல், பகுத்தறிவுச் சிந்தனைகள் மிக்க இந்த 21ஆம் நூற்றாண்டிலும் இனவெறி, மதவெறி, நிறவெறி, பொருள்வள சுரண்டல்வெறி போன்ற மேலாண்மை வெறிகொண்டு மக்கள் முரண் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதில் வல்லரசுகள், வளர்ச்சி கண்டநாடுகள், வளர்ச்சி காணாத நாடுகள், பிச்சைக்கார நாடுகளென வேறுபாடு இல்லாது கொடூரமாக தன்னாட்டு மக்களுக்கு எதிராகவே நாகம்போல் படமெடுத்து ஆடுகின்றனர்.

## உயிரும் உணவும்

**"மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே" (தொ.எழு.நூல்மரபு 18)**

இப்பனுவல், உடலின்(மெய்) வழியேதான் உயிர் இயங்கும் எனச் சாற்றுகின்றது. அதாவது ஒரு மெய் எழுத்தின் வழியாகவே ஒரு உயிரெழுத்து இயங்கி உயிர்மெய்(உயிரி) எழுத்தாக உருவெடுக்கும் என்னும் தமிழ் மொழியியலையும் விளக்கி, உயிரிகளின் இயங்கியலையும் தெளிவுபடுத்துகின்றது.

**ஓர் அறிவு உயிரிகள் நிலைத்திணைகள்**
**ஈர் அறிவு உயிரிகள், நீர்வாழ்வன**
**மூ அறிவு உயிரிகள், நில ஊர்வன**
**நான்கறிவு உயிரிகள் பறவைகள்**
**ஐந்தறிவு உயிரிகள் விலங்குகள்**
**ஆறறிவு உயிரிகள் மாந்தர்கள்**

என உடலோடு உயிரையும் பெற்றியங்கும் இவ்வுயிரிகள் தாம் உட்கொள்ளும் உணவை உயிர்ச் சாறாக (protoplasm)மாற்று வேதியல் வினையைச் செய்கின்றன. இவ்வேதியல் செயற்பாட்டின் விளைவே உயிராகும். இதன் இயல்பான பெயர்ச்சியும், இனப்பெருக்கத் திறனுமே இதன் அரிய பேராற்றலாகும். உடல் கணக்கற்ற உயிர்மங்களால்(கலங்கள்) உண்டானது. ஒவ்வொரு கலத்தினுள்ளும் காணப்படும் கருக்கள்(Nucleus)பல நிறமிகளை (Chromosomes)க் கொண்டுள்ளன. இந் நிறமிகள் பல தலைமுறைகளுக்கு மரபியல் பண்புகளை கடத்திச் செல்லும் திறன்கொண்ட ஒருபுரி (Ribo Nucleic Acid), இருபுரி (Deoxy Ribo Nucleic Acid) என இருவகை பண்புத் திரிகளைக் கொண்டுள்ளன. இந்த ஒருபுரியே உயிரின் தொடக்க நிலையாகும். உயிர்மங்களின் இடையறாத செயற்பாட்டு இயக்கத்தினால் பெரும்புரதங்கள் (Enzymes) விளைகின்றன. இதன் இயங்காற்றுத் திறனே உயிராகும். இவ்வாறு தோன்றித் தழைக்கும் உயிர் உணர்தல், அறிதல் ஆகிய செயல்களை உடலின் வழியாக ஆற்றுகின்றது. இவ்வுயிர் மரபியல் செயற்பாட்டை தெரிந்துகொண்டால் இந்த உயிர், உடல் செவ்வியக்கத்திற்கான காரணி உணவே என்பதை தெளிந்தறியலாம். இதை மூவாயிரம் தமிழ்தந்த திருமூலர் தமது திருமந்திரத்தில் பின்வருமாறு செப்புவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே!"**

இப்பனுவல் மூலமாக உணவின் முதன்மையை திருமூலர் வெளிப்படுத்துகின்றார். உயிர்ச் செயற்பாட்டினால் உணர்ச்சிகள் உணர்வுகளாக பதிவுறும் அகத்துறுப்பாக எண்ணுவதும், நினைப்பதும், கருத்தமைவுக் காரணியுமாக 'மனம்' ஆகிறது. மனமும் உயிரும் நீக்கமற ஒன்றிஅறவாழ்வை வாழத்தூண்டும் "உள்ளம்" ஆக அமைவுறுகின்றது. இந்த உள்ளத்தில் எழும் பேராற்றல் காட்சி அளவையாகி கருதல் அளவையாய் செயற்படுகின்றது. இதையும் திருமூலர்,

**"உடம்பினை முன்னர் இழுக்கென்று இருந்தேன்**
**உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டா ரென**
**உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே!" என்பார்.**

இங்கு உறுபொருள் என்பது உள்ளத்தையும், உத்தமன் என்பது அறவழிப் பேராற்றலையும் குறிக்கும். உடலின் அனைத்து அறச் செயற்பாட்டிற்கும் நடுவமாகச் செயற்படுவது உள்ளமும் அதன் பேராற்றலுமாகும். இப்பனுவலுக்கு உரை கண்ட கருத்து முதற் கோட்பாட்டாளர்கள், அதை மதமாக்கி, அதை வைத்தே பிழைப்பு நடத்துகின்றனர். இதை பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவனார்,

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்" (குறள் 183) என்பார்.

அதாவது இல்லாதன, பொல்லாதன கூறி, மக்களை மூடநம்பிக்கையில் ஆழ்த்தி பொய்யான பிழைப்பு வாழ்க்கை வாழ்வதிலும் அவர்கள் இறந்துபோதல் அறவழியில் ஆக்கம் தருவதாய் இருக்கும் என்பார்.

ஆம், நீங்கள் செய்யும் திருக்கூத்துக்களைச் செய்துகொண்டு மதம் கூறும் நம்பிக்கை(சட்டங்)களை ஏற்று, வழிபாடுகளை செய்தால் உங்கள் குற்றங்(பாவம்)கள் மன்னிக்கப்பட்டு மோட்சம்(பரலோகம்) போகலாம் எனப் பரப்புரை செய்து, கற்காத(அறவழிப் பேராற்றல் அற்றவர்கள் -- புத்தகப் பூச்சிகள்) மாந்தரையும் ஏய்த்து உழைக்காமல் பிழைக்கும்(பிச்சை எடுக்கும்) நெறிப்பிறழ்வை உருவாக்குகின்றனர். ஓரிரு மாதங்களின் முன் சுவிற்சலாந்தில் ஒரு கோயில் நிகழ்வில் அக்கோயில் பிராமணர்களால் சிவபெருமான் தனது இரு பிள்ளைகளான பிள்ளையார், முருகனுக்கு இடையில் வைத்த உலகத்தை சுற்றிவரும் போட்டியை நினைவூட்டி ஒரு மாம்பழத்தை ஏலம் விடுகிறார்கள், அதை **"1100 சுவிசு பிறாங்"** (500000 ரூபா) கொடுத்து ஒரு பெண்மணி வாங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் "**முகநூலில்**" மிகவும் பின்தங்கிய ஊரிலுள்ள ஒரு கோயிலுக்கு முகப்புக்கோபுரம் கட்டுவதற்கான வரைபடம் போடப்பட்டிருந்ததாம். அதற்குப் பலரும் பாராட்டுக்களும், கருத்துக்களும் பதிவிட்டிருந்தார்களாம். தானும் இக்கோபுரத்திற்கு பல கோடிகள் செலவிடப்படும் என்பதாலும், அதனுடன் அக்கோயிலின் பெயரில் 2கோடி ரூபாவை நிலையான வைப்பிலிட்டு, ஒரு அறக்கட்டளையைத் தொடக்கி, அவ்வூர் ஏழைப் பிள்ளைகளின் கல்விக்கு ஊக்கம் கொடுக்கலாமே எனப் பதிவிட்டாராம். இதற்கு ஒரு பக்தகோடி "**செருப்பு**" என முகநூலில் பதிவிட்டிருக்கிறார் என்கிறார். இந்த முகநூலானது தரங்கெட்ட, அறிவிலிகளான, இயற்கைப் பண்பு மரபணு சிதைக்கப்பட்ட, விலங்காண்டிகளின் கைகளில் சிக்குண்டதால், யானை பார்த்த குருடராய் பொய்ப் புனைவுகளால் ஊர், சாதி, சமய, இழிவுப் புன்மைகள் கூறிப் பதிவிடுகின்றனர். இவர்களைப் பொய்யா மொழிப் புலவர் திருவள்ளுவர்.

**"ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்**
**போஒம் அளவும்ஓர் நோய்"** (குறள் 848) என்பார்.

மேற்குறித்த மரபணுச் சிதைப்பிற்கு உள்ளானவர்கள், அடுத்தவரின் அறிவுரையைக் கேட்க மாட்டார்கள், தாங்களாகவும் தங்களைத் திருத்திக் கொள்ள மாட்டர்கள். இப்படியானவர்கள் இறக்கும் வரை உலகிற்கு ஒரு பெருநோய் போன்றவர்கள் என்கிறார் உலக அறவாழ்வியல் மெய்யியல் தந்த பெருநாவலர்.

இக்கோபுரம் புலம்பெயர் நாட்டில் வாழும் பிராமணர் ஒருவரால் 80கோடி ரூபா மதிப்பீட்டில் செய்யத் தொடங்கியுள்ளனராம் (ஆய்வுக்குரியது).

பிறப்பியம்,சோதிடம் பார்க்கும் பலர், பிறந்த குழந்தைக்கு பெயர் வைப்பதற்கு இவர்களிடம் போனால், அவர்கள் தமிழ்மொழிச் சிதைப்பை நோக்கமாகக் கொண்டு தமிழ்மொழியுடன் தொடர்பில்லாத கிரந்த எழுத்தை பெயரின் முதல், இடையெழுத்தாகக் கொள்ளவும் அல்லது தமிழ் இலக்கணத்தை சிதைக்கும் நோக்கோடு தமிழ் சொற்களுக்கு முதலில் வரக்கூடாத தமிழ் எழுத்துக்களை முதலெழுத்தாகக் கொண்டு பெயர் வைக்கும்படியாகத் தூண்டுகின்றனராம். தமிழனால் பிழைப்பு நடத்தும், தமிழின் மீதும், தமிழன் மீதும் காழ்ப்புணர்வு கொண்ட வடமொழி, சமஸ்கிருதத்தின் ஆர்வலர்கள். இப்படியான செயற்பாடுகளைச் செய்வதால், பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறுவதுபோல் மூடத்தை முதலாகக் கொண்ட பலர் பெருமைபடுகின்றனர்:

## வாழ்வறம்

"**அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை**" என திருவள்ளுவரும் "**இல்லறம் அல்லது நல்லறம் அன்று**" என ஔவையாரும் செப்புகின்ற இல்லற வாழ்வே இயற்கை இயங்கியலோடு இணைந்த இயல்பான வாழ்வாகும். இல்லத்தில் இல்லாளாக, இல்லத்தரசியாக மனைமாட்சி துலங்கவும், நன்மக்களைப் பெற்றெடுத்தும், தன்பெற்றோர், கொழுநன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுநன் பெற்றோர், ஏதிலியர், விருந்தினர், இரவலர் போன்றோரை காத்தோம்புதல் இல்லாளுக்குரியதே!. இல்லாள், மனையாள், இல்லக்கிழத்தி, தலைவி என்றும் மகளிரைப் போற்றினர் நம் தமிழர். இதை அகவாழ்வென்றனர். இல்லற, பொதுநல வாழ்விற்கான பொருளீட்டவும், நாட்டைப் பாதுகாப்பதிலும், அரச கடமைகளில் பங்கேற்கவும் இல்லத்தின் புறத்தே சென்று இல்லத் தலைவன் செயற்படுவதை புறவாழ்வென்றும் போற்றினர்.

இன்று தமிழரின் சீர்மிகு ஒழுக்கவியல் அறவாழ்வுக் குலைவும், குலைப்புமுற்று சீரழிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வேற்றினப் படையெடுப்பு, அவர்களின் ஒழுக்கவியல் பேணாப் பண்பாடு, பல்வகை மதங்களின் மூடநம்பிக்கைகளும், ஏய்ப்புரைகளும், தாராளமயம், உலகமயம், உலகம் ஒரே சந்தை போன்றவற்றின் விளைவாக நுகர்ச்சி வெறியும், பணம் குவிப்பதே வாழ்வின் குறிக்கோளாக தமிழர் உள்ளிட்ட உலக மக்களிடையே உயிர்கொல்லி நோயாக விரிந்து பரந்து பரவியுள்ளது. தலைவன் ஈட்டும் உழைப்புப் போதாதாம், இல்லாளும் வெளியாளாகி, ஏதோ ஒருவழியில் பணம் குவிக்க களத்தில் இறங்கிவிட்டாள். தேவையற்றதை தேவையானதாக்கி அடுத்தவருக்கு தம்மை மேலானவராக(புகட்டாக)க் காட்ட நினைப்பதால், போதாமை என்றநிலை ஏற்படுகின்றது. அதேநேரம் தான் ஈட்டும் பணத்தை வீண்விரையம் செய்பவர்களாகத் தன் பிள்ளைகளை, பெற்றோரை, விருந்தினரை, உறவினரை எண்ணுகின்றாள். இதனால் மன இறுக்கம், மனச்சோர்வு, மனப்பதற்றம் ஏற்படுவதால் மனநோய் உடல் நோயாக(குறிப்பாக – உயர் ரத்த அழுத்தம்) மாற்றம் அடைகிறது. இதனால் இவர்கள் பெருந்தொகைப் பணத்தை மருந்திற்கும், மருத்துவருக்கும் செலவிடவேண்டி உள்ளது.

அத்தோடு வீட்டிலிருக்கும் மழலையரை மழலையர் பள்ளியில் சேர்க்கவும், மூத்தோரை மூத்தோர் விடுதிகளில் சேர்க்கவும் பெருந்தொகைப் பணத்தை செலுத்தவேண்டியாகிறது. அதுமாத்திரமா! ஐந்து நாளைக்குமான உடுபிடவை, அழகுசாதனப் பொருட்கள், போக்குவரவுக்கான செலவு போன்றவற்றைக் கணக்கிட்டால், ஐயோ!!. இல்லத் தலைவனோ!, தலைவிக்கும், எனையோருக்கும் இடையில் சிக்கித் தவிக்கின்றானே, பொறியில் அகப்பட்ட எலிபோல! இதுவா இல்லறம்??. இன்று கூட்டுக் குடும்பமில்லை, திருமணத்தின் பின் தனிக் குடும்பங்கள் தான், சில குடும்பங்களில் தலைவியின் பெற்றோர் இணைந்திருந்து, தலைவன் தலைவியை மகிழ்ந்திருக்க விடுவதில்லை. தலைவனானவன் தன் பெற்றோர், உடன்பிறப்புக்கள், உறவுகளோடு சேரக்கூடாது, போகக்கூடாது. இதனால் பல இளங்குடும்பத் தலைவன் தலைவிக்கிடையில் முரண்பாடுகளால் பிள்ளைகளுக்கு மாதப்படி, மணவிலக்குக் கோரி நீதிமன்றங்களின் வாசலில். குடும்ப மதிப்பை பேண நினைக்கும் தலைவன் பெட்டிப் பாம்பாய் சுருண்டு கிடக்கின்றான். இதுதான் இன்றைய மனைமாட்சி.

ஒருவரோடு ஒருவர் மனம் விட்டுப்பேசி மகிழ்ந்து மன இறுக்கத்தைக் குறைத்துக்கொள்ள முடியாதநிலை. வீட்டிற்கு யாரும் வருவதை வெறுக்கும் மனோநிலை. வந்தாலும் மொழி, பண்பாடு, ஒழுக்கவியல் சிதைப்பையும், மூடநம்பிக்கைகளையும் விதைக்கும், பரப்புரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும், மக்களின் மூளைகளை அறவழி செல்லாது சலவை செய்யும் மூடப்பெட்டியான தொலைகாட்சி பூட்டிய கூடத்தில் தான் அமரவேண்டும். அதை வீட்டாருடன் சேர்ந்து **"அணிலை ஏறவிட்ட நாயை"**ப்போல் இருந்து விட்டு வெளிவர வேண்டியது தான். இவை மட்டுமா! ஒவ்வொருவர் கையிலும் கையடக்க தொலைபேசிகள், "ஐ" பேசிகள், காதுள் ஒலி வாங்கிகள், கண்ணைக் குருடாக்க, காதைச் செவிடாக்க, உள்ளத்தை, மூளையை சிதைக்க, உலகத்தையே குட்டிச் சுவராக்க நாகரிகம், உலகமயமாக்கல் என்ற போர்வையில் செயற்பாடுகள். முழுமூடத்தின், பகட்டுத்தனத்தின் மொத்த உருவமான தமிழனுக்கு இவைதான் தேவஉலகம்(சொர்க்கம்).

நுகர்வு வெறிக்கு ஆளாகாமல், தலைவன் மட்டும் ஈட்டிவரும் உழைப்பிற்கு இயைந்த செலவு செய்து இல்லத்துள் கடனாற்றும் தலைவியுமென உள்ள குடும்பந்தான் இல்லறமாட்சி குன்றாது காப்புற்றுள்ளதை காணமுடியும். கடந்த 15ஆண்டுகளில் பெருகியுள்ள மழலையர் பள்ளிகள், முதியோர் இல்லங்கள், மனநோயாளர் மருந்தகங்கள், அரசு அலுவலர்களின் வணிக மடுவங்கள், புதியபுதிய கோயில்கள், கோயில் திருவிழாக்கள், போலித் துறவிகள், குடும்ப உறவு முறிவுகள், குடும்பச் சிதைவுகள், போதைப் பொருள் பயன்பாடுகள், கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள் போன்ற அறக்கேடுகள் பெருகிவருவதும், **"இல்லறம் ஆகிய நல்லறம் அல்லறம் ஆகியதன் விளைவாகும்"**

## சமச்சீரற்ற கல்விச் செயற்பாடு (பிள்ளைகளின் கல்விக்கேடு)

இலங்கையைப் பொறுத்தவரையில் பாலர் வகுப்பில் இருந்து பல்கலைக் கழகக் கல்வி வரை தாய்மொழி வழிக் கல்வியாய் இருப்பதையிட்டு மகிழ்வடையலாம். ஆனால் சில மாவட்டங்களில் 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்புகளில் சில பள்ளிகளில் கணிதம், அறிவியல்(விஞ்ஞானம்) போன்ற பாடங்கள் ஆங்கில மொழிவழிக் கல்வியாகப் புகட்டப்படுகின்றன. வடமாகாணத்தைப் பொறுத்த வரையில் யாழ்.மாவட்டத்தில் சில கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகளில் க.பொ.த. சாதாரணதரத்தில் மேற்குறித்த பாடங்களை ஆங்கில மொழிவழியில் தேர்வெழுதிய மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தை ஆங்கில மொழிவழியில் கற்றுத், தேர்வெழுத முடியும். ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆங்கில மொழிவழியில் தேர்வெழுதும் மாணவர் க.பொ.த. உயர்தரத்தை ஆங்கிலமொழி வழியில் கற்கவோ, தேர்வெழுதவோ பள்ளிகளோ, ஆசிரியர்களோ கிளிநொச்சியில் இல்லையாம். மாவட்டங்களுக்கு இடையில் இப்படியான ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தாது, தாய்மொழிவழிக் கல்வியாகவே க.பொ.த. உயர்தரம் வரை கொண்டு செல்லலாம். இது மாணவரின் கல்விக்கான அடிப்படை உரிமை மீறலாகக் கொள்ளப்படலாமா?

## வெண்மைப் புரட்சி

**"தான் வாழுகின்ற தட்ப, வெப்பச் சுற்றுச்சூழலில் இயற்கையாக உற்பத்தி செய்யும் உணவு வகைகளை உண்பதே அவன் உடல் நலத்துடனும், உளநலத்துடனும் வாழ வழிவகுக்கும் என்பதை மானிடவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்த உண்மையாகும்".**

வேற்றுநாட்டு தட்ப வெப்ப சூழலுக்கேற்ப உருவான மாடுகளையும், கலப்பினமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்ட மாடுகளையும் இறக்குமதி செய்து அவற்றிற்கு ஏற்ற விதத்தில் தங்குமிட வணிகம் செய்கின்றனர். இதேபோன்று செயற்கைக் கலப்பின கோழிகளை முட்டைக்காகவும், இறைச்சிக்காகவும் அயல்நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து தகுந்த காற்று, ஒளி இல்லாத கொட்டில்களில் அடைத்து இரண்டு மாத காலத்தில் அவை முட்டை இடவும், இறைச்சிக் கோழிகள் இரண்டுமாதத்தில் இரண்டு கிலோ நிறைவிழ பல்வகை வேதிப் பொருள் தீனிகளோடு, நோய்த் தடுப்பு மருந்துகளும் ஊட்டப்படுகின்றன. இவற்றிற்கு நாட்பட்ட, பழுதுபட்ட தீனிகளும் கொடுக்கப்படுவதால், இவற்றை உண்பவர்கள் செரிமானத் தொல்லை, மூட்டுவாதம், மிகுகொழுப்பு போன்ற பிணிகளுக்கு ஆளாகின்றனர். ஆனால் வீட்டில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளால் எத்தீங்குமில்லை.

## பசுமைப் புரட்சி.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் உற்பத்தி செய்து, அந்நாட்டு நிலங்களில் விளைந்த. பயிர்களுக்குச் செலுத்திய வேதியப் பொருட்களால், மாந்தருக்கும், ஏனைய உயிரிகளுக்கும், மண், நீர், காற்று ஆகியவற்றிற்கும் தீங்கு விளைவித்ததால் அங்கு தடைசெய்துவிட்டு, அந்நஞ்சு வேதியற் பொருட்களை கப்பல் கப்பலாக ஏற்றி இங்கு கொண்டுவந்து, களைக்கொல்லி, பூச்சிக்கொல்லி, உரம் எனக்கூறி, பயிர்ச் செய்கையாளரைப் பயன்படுத்தி, பெரும் மோசடி செய்து, மக்களுக்குப் பெரும்கேடு செய்கின்றனர். அரசியலாளர்களும், வணிகர்களும். இவ்வேதியற் பொருட்களால் மண்ணும், காற்றும், மழைநீரும், நிலத்தடி நீரும் இயல்பினில் திரிந்து நஞ்சாகிவிடும். இதன் காரணமாய் விளையும் பயிரும் நஞ்சாவதோடு, அதை உண்ணும் மாந்தனும், பிறஉயிரிகளும் நோயுற்று துயருற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. சில ஆண்டுகளுக்கு முன் பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழர் தம் உணவில் ஒன்றித் திருந்த தேங்காய் எண்ணையில் மிதமிஞ்சிய கொழுப்பு இருப்பதாகவும் அதைத்தவிர்த்து மரக்கறி எண்ணெய்யைப் பயன்படுத்தும் படியாகவும் மருத்துவர்களும், செய்தித் தாள்களும் பரப்புரை செய்து தேங்காய் எண்ணெய்ப் பயன்பாட்டை முடக்கிப் போட்டன. ஆனால் ஆய்வுகள் தேங்காய் எண்ணையின் சிறப்பை, நோயெதிர்ப்பு தன்மையை வெளிப்படுத்தியபோது தான் அரசியல் வணிக கூட்டுக் களவாணிகளின் மோசடி அம்பலமானது.

தொல் தமிழன் எல்லாவிதத்திலும் தன்வழித் தோன்றல்கள் உடல், உள நலத்தோடு நீடித்த அகவையுடன் வாழவே உணவு, பண்பாடு, ஒழுக்கம் போன்றவற்றை வரையறை செய்து மரபுவழியாகத் தொடர்ந்து செயற்பட உறுதியான அடித்தளமிட்டு வாழ்வில் பிறழ்வு ஏற்படாதிருக்க தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியங்கள் போன்ற நூல்களையும் ஆக்கித் தந்து சென்றிருக்கின்றான். ஆனாலும் கடந்த 2000 ஆண்டுக்குள் பலமதப் பிரிவுகளும், அதற்குள் பலபிரிவுகளும், அவற்றின் மூடம் தழுவிய செயற்பாடுகளும்,சமூகப் பிரிப்புக்களும் மனித சமுதாயத்தை கூறுபடுத்தி நிற்கிறது. அதேநேரம் அதீத அறிவியல் வளர்ச்சியினால், உலகச் சுற்றுச்சூழல் கரிபுகைத் துகள்களாலும், அணுக்கசிவு, அணு உலைக்கழிவு, இன்னோரன்ன மாறுபட்ட கதிர் வலைப் பின்னல்கள், அவற்றினால் வெளியேற்றப்படும் அல்பா, பீற்றா, காமா,போன்ற கதிர்த் தாக்கங்கள், தொலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிப் பெட்டி, தொலைத் தொடர்புக் கருவிகள் போன்றவற்றில் இருந்து வெளியேறும் கதிர்கள், வேதியற் பொருட்கழிவுகளினால் என வான், காற்று, மண், நீர், தீ போன்ற ஐம்பூதங்களும் "நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக" மாசுபடுத்தப் படுகின்றன. இதன் விளைவு ஒட்டுமொத்த உலகமக்களின் அழிப்பே!. இதற்குக் "**காரணன் மேலாண்மைவெறி, நாடுபிடிக்கும் வெறி, மதவெறி, இனவெறி, மறைமுகமாக மக்கள் பெருக்க அழிப்புவெறி கொண்ட அறக்கேடனே, அதாவது மனிதநேயம், உயிரெக்கம், போன்றவற்றை விளங்கிப் புரிந்து கொள்ள முடியாத விலங்காண்டி (காட்டுமிராண்டி)" த்தனமே**

## மரபணு மாற்றக்கொடுமை

மரபு அணுப் பொறியியல்(Genetic Engineering) என்னும் துறைவழி, உயிரித் தொழில் நுட்பம்(Bio Technology) மிகவேகமாக ஆய்வுக்களத்தில் உள்ளது. இதன் ஒரு கூறே மரபு அணுக்களை மாற்றுதல் (Genetic Modification) ஆகும். பலதலைமுறைகளாக தொடர்ந்து வரும் மரபு அணுக்களின் இயல்பான பண்புகளை கரவாகக் கெடுத்து குறுக்குச்சால் போடும் அறக்கேட்டுச் செயற்பாடு இதுவாகும்.

நிலத்தின் மண்ணுருவாக்க நிகழ்வில் பேசிலசு துரிஞ்சென்சிசு என்ற நுண்ணுயிரி காணப்படுகிறது. இதன் மரபணுக் கூறுகளில் ஒன்று பயிர்களை அழிக்கும் பூச்சி, புழுக்களை அழிக்கும் நஞ்சான புரதத்தைத் தன்னுள் கொண்டுள்ளதாம். இதைக் கண்டறிந்த உயிரித் தொழில் நுட்பவியலாளர்கள் இந்நச்சுப் புரதத்தைப் பிரித்தெடுத்துப் பயிரின் வித்துக்களுள் செலுத்தியபின் பயிரிடப்படுகிறது. இவை தழைக்கும்போது இதன் குருத்து, இலைகளை உண்ணும் பூச்சி, புழுக்கள் மடிந்துவிடும். இதை உண்ணும் ஏனை உயிரிகளும் இறந்துவிடும், பயிரின் விளைச்சலை உண்ணும் மனிதனும் நஞ்சூட்டப்பட்டு, நலிவுற்று பலநோய்களுக்கு ஆளாவதோடு அவனது இயல்பு மரபணுவும் சிதைவுறுகிறது. காலப்போக்கில் படிப்படியாக மாந்தர் இயல்பே திரிவுபடுகிறது.

**சி. வை. மகேந்திரராசா**
(குமரிவேந்தன்)
*ஜெயந்திநகர், கிளிநொச்சி.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறிவரும் உலகில் இளைஞர் சமுதாயத்தின் இன்றைய நிலை

இன்றைய இளைஞர் சமுதாயமானது பாரிய முன்னேற்றத்தின் பாதையில் சென்று கொண்டிருப்பதுடன் மிகுந்த சவால்களையும் எதிர்கொண்டு பயணிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இளைஞர்களின் எதிர்காலம் ஒளிமயமாகத் திகழ வேண்டுமாயின் குடும்பம், அரசு, பாடசாலை, சமூகம் என பல தரப்பினருக்கும் பாரிய பொறுப்புண்டு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தற்கால மாற்றங்களுக்கேற்ப சகல துறைகளிலும் இளைஞர்களின் சாதனைகளையும் வெற்றிகளையும் நாம் அறிய முடிகிறது. இருந்த போதிலும் எத்தனையோ இளைஞர்களின் வாழ்வு கேள்விக் குறியாகவே உள்ளது. இந்நிலை மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். நவீன தொடர்பு சாதனங்களின் பயன்பாடு, புதிய கண்டுபிடிப்புக்கள் கல்வி மாற்றங்கள், விஞ்ஞானம், விளையாட்டு என அனைத்திலும். இளைஞர்களின் சாதனைகளும் திறமைகளும் வளர்ச்சியடைந்திருப்பதைக் காணலாம். ஆயினும் இன்று அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனை, சமூகவலைத்தளங்களின் தவறான பயன்பாடு, மதுபாவனை அதிகரிப்பு, பாலியல் வன்முறைகள் என்பவற்றின் ஆதிக்கம் காரணமாக இளைஞர்களின் எதிர்காலம் சீரழிந்து வருகிறது. ஒரு பிள்ளையின் எதிர்காலம் குடும்பம், பாடசாலை, சமூகம், அரசு என பல தரப்பினராலும் கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒன்றாகும்.

பிள்ளையின் வளர்ச்சியில் குடும்பமே முதல் அத்திவாரமாகும் " நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்பதற்கமைய தாய், தந்தை, பிள்ளைகள் ஆகியோரிடம் காணப்படும் உறவு பலமானதாக அமைய வேண்டும். பிள்ளை குடும்பத்திலிருந்தே சமூக விழுமியங்களைக் கற்றுக்கொள்கிறது.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே, அவன் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்று ஒரு கவிஞர் பாடுகிறார். குழந்தை வளர்ப்பில் தாயின் பொறுப்பு மிகப் பெரிய அளவில் தங்கியுள்ளது. ஆயினும் தந்தையின் அரவணைப்பும் கடமையுணர்வும் இன்றியமையாதது. தமது பிள்ளை வெற்றியடையும் சந்தர்ப்பங்களில் அவனைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதுடன் அவன் தோல்வியடையும் சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கையும் மீள நம்பிக்கையையும் ஊட்டுதல் வேண்டும். பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமன்றி உளவியல் தேவைகளையும் அறிந்து நிறைவேற்றுவதுடன் அவர்களின் உலகம் மகிழ்ச்சியான ஒன்றாக அமைய பெற்றோர் துணைபுரியவேண்டும். சிறுவயதில் பிள்ளைகள் செய்யும் தவறுகளை உரியவாறு கையாள்வதன் மூலம் அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். அதேபோல் சிறுவயதில் அவர்கள் மீது காட்டிய அதே அன்பை இளைஞர்களாகிய பின்பும் காட்டவேண்டும். சமகால மாற்றங்களுக்கேற்றவாறு பெற்றோரும் அவர்களின் தேவைகளை உணர்ந்து சரியானவாறு செயற்பட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப்

புழுதியில் எறிவதுண்டோ"?

என்கிறார் பாரதியார். எந்தக் குழந்தையும் நல்லதாகவே பிறக்கின்றது. வளர்ந்த பின் அவனை நாம் கைவிடுதல் அவன் வாழ்வை தவறான பாதைக்குச் செல்ல வழிவகுக்கின்றது. இன்று எத்தனை இளைஞர்கள் வீதிகளில் பொறுப்பற்ற நிலையில் பல்வேறு தீய செயல்களுக்கும் அடிமையாகித் திரிகின்றனர். அவர்களின் குடும்பமானது எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாது உரிய முறையில் அரவணைத்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது. இவ்வாறு கைவிடப்பட்டவர்கள் போதைப்பொருட்களுக்கும் பல்வேறு கொலை கொள்ளை சம்பவங்களுக்கும் காரணமாகி சமுதாயத்தில் ஒதுக்கப்படுகின்றனர்.

பிள்ளையின் வாழ்க்கையில் பாடசாலை பிரதான அங்கம் வகிக்கின்றது. நாட்டிற்கு தேவையான நற்பிரசைகளை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாகும். பாடசாலைக்கல்வியை தொடர்ச்சியாகப் பெறும் பிள்ளை கல்வியில் உயர்வடைகிறது. பெற்றோர் ஆசிரியர்களுடனும் பாடசாலையிலும் நெருக்கமான தொடர்பைப் பேணுதல் அவசியம் பிள்ளையின் கல்விநிலை தொடர்பாக அறிந்திருத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் பிள்ளையினிடத்தே நம்பிக்கை அதிகரிக்கின்றது. பாடசாலைகள் இன்று மாணவர்கள் தொடர்பாக பல சவால்களை எதிர்கொள்கின்றன. மாணவர் இடைவிலகல், தொடர்ச்சியான வரவின்மை, மாணவர்களின் ஒழுக்கம், கலை, கலாசார விழுமியங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள் பாடசாலையில் சட்டதிட்டங்களை மதிக்காமை போன்ற பிரச்சினைகளைக் குறிப்பிடலாம். அதுமட்டுமன்றி இன்றைய காலத்தில் தனியார் கல்வி நிலையங்களின் ஆதிக்கமும் பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்களில் உள்ளடங்குகிறது. பெற்றோர் தமது பொருளாதார நிலைமை காரணமாக தாய், தந்தை இருவரும் வேலைக்குச் செல்வதால் பிள்ளைகளின் கல்வியில் பாதிப்பு ஏற்படக் காரணமாகின்றது. பெற்றோர் பிள்ளைகளுடனான தொடர்பு ஆசிரியர்களுடனான தொடர்பு குறைதல் என்பனவும் பிள்ளைகளின் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

அரசின் கலைத்திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளும் மாணவர்களின் கல்வியை தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பாடத்தெரிவுகளை சரியாகத் தெரிவு செய்வதில் ஏற்படும் பாதிப்பு அதனால் பெறுபேறுகளில் ஏற்படும் வீழ்ச்சி காரணமாக இன்று எத்தனையோ மாணவர்கள் கல்வியைத் தொடரமுடியாமல் உள்ளனர். அதுமட்டுமன்றி பரீட்சை முறையில் காணப்படும் குறைபாடு செயன்முறை பரீட்சை அல்லாமல் எழுத்து மூலம் காணப்படுகின்றமையும் அதனால் பிற்காலத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதிலும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. தற்கால மாற்றங்களுக்கேற்ப கல்வி கற்பதற்கான நவீன கல்வி சாதனங்களின் பற்றாக்குறையும் காரணம் எனலாம். இவ்வாறு இடைவிலகும் மாணவர்கள் வீதியோரங்களில் குழுவாக நிற்பதும் சமூக சீர்கேடுகளில் ஈடுபடுவதுமாகக் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப் பொருள் பாவனையானது இன்று எமது நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி இளைஞர் சமுதாயத்தைச் சீரழிப்பதைக் காணலாம். இது பாடசாலை மாணவர்களிடையேயும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. போதைப் பொருளானது உடல் ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக நாட்பட்ட நோய்கள் தீராத நோய்களுக்கு உள்ளாக்குகின்றது. உளச்சோர்வு மன அழுத்தம், குடும்ப வன்முறைகள், நித்திரையின்மை பொருளாதார பின்னடைவுகள் வீதிவிபத்துக்கள் போன்றன போதைப்பொருட்களால் உண்டாகும் இன்னோரான சவால்களாகும். குடும்ப உறவுகள் அநாதரவாகும் நிலை, பணமின்மை போன்றன காரணமாக கொலை, கொள்ளை, களவு, கடன், வழிப்பறிப்பு போன்ற செயல்களும் கவலைக்கிடமானதொன்றாகும். குடும்பத்தினருடன் சண்டை, அயலவருடன் சண்டை, பாலியல் துஸ்பிரயோகங்கள் என்பன பாரிய குற்றங்களுக்குக் காரணமாகும். அரசானது போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடும் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்திய போதிலும் அவை பெரியளவில் வெற்றியளிக்கவில்லை என்பதே கண்கூடு. எனவே இதனைக்கட்டுப்படுத்த கடுமையாக சட்டத்திட்டங்களை அமுல்படுத்தி புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியம்.

சமூக வலைத்தளங்கள், தொடர்பு சாதனங்களின் பயன்பாடு, ஊடகங்கள் என்பன இன்று உலகை கிராமமாக மாற்றியமைத்துள்ளன. இவை பாரிய முன்னேற்றங்களைக் கண்டபோதிலும் அவற்றைசரியாகப் பயன்படுத்தாது தவறானமுறையில் பயன்படுத்துவதும் அதனால் தமக்கு தாமே அழிவைத் தேடிக் கொள்வதும் வேதனைக்குரியதாகும்.

குடும்பம் வறுமையில் வாடினாலும் தொலைபேசி இல்லாமல் ஒருவரும் இல்லை என்ற அளவுக்கு மனிதனோடு பின்னிப் பிணைந்துள்ளது. பல்வேறு தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்வதற்கும் அவசர, அவசிய தேவைகளுக்கும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆயினும் இளைஞர்கள் இதனை தவறாகப் பயன்படுத்துவதால் அதன் பின் விளைவுகள் பாரதூரமாகக் காணப்படுகிறது. தமது சொந்த தகவல்களை (பிறந்த திகதி, படங்கள், குடும்பவிபரம்)பதிவிடுவதால் அதனை மற்றவர் தவறாக பயன்படுத்துகின்றனர் இளவயதுத் திருமணம், மணமுறிவு, பாலியல் துஸ்பிரயோகங்கள் என்பனவும் இத்தொலைபேசிகள் (Smart phone) காரணமாகவே பெரும்பாலும் நடைபெறுவதைக் காணலாம். திரைப்படங்களும் தற்காலத்தில் எவ்வளவோ நல்ல கருத்துக்களை கொண்டுள்ள போதிலும் இன்றைய இளைஞர் சமுதாயமானது வில்லன் கதாபாத்திரம், குழுமோதல் போன்றவற்றை பின்பற்றி சமூகத்திலும் அவ்வாறான வன்முறைகளிலும் ஈடுபடுகின்றனர். தற்கால சூழ்நிலைகளுக்கேற்ப கல்வி கற்பதற்காக மாணவர்கள் (Zoom) செயலி ஊடாக கல்வியைத் தொடர்கின்றனர். ஆயினும் பெற்றோரின் கண்காணிப்பில் இவற்றை செயற்படுத்தினால் இதன் மூலம் ஏற்படும் பாதிப்புக்களையும் குறைத்துக் கொள்ளலாம். எனவே " இன்றைய இளைஞர்கள் நாளைய உலகின் தலைவர்கள்" என்பதற்கமைய அவர்களின் உலகை ஒளிமயமாக்கி வெற்றி நடை போடுவதற்கு அனைவரும் கைகொடுப்போமாக!

**சண்முகம் சந்திரன்**

*நிர்வாக கிராம அலுவலர், கரைச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர்கள்



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : திரு.த.குணசிங்கம், திரு.ச.சந்திரன் (GN Admin), திரு.றெஜிஅலோசியஸ் (AO), திருமதி.ச.மாதுகி (ADS), திரு.த.முகுந்தன் (DS), திரு.பூ.ராஜ்வினோத் (DDP), திரு.கு.சுரேஸ்குமார் (Accountant), திரு.த.மகாபரன் , திருமதி.த.றவீனா,

நிற்பவர்கள் முதலாவது வரிசை இடமிருந்து வலம் : திருமதி.வி.திரேஸ்கொன்சி, செல்வி.ந.தயாநிதி, திருமதி. ஜெ.விக்னேஸ்வரி, திருமதி.ந.வாசுகி, திருமதி.சி.நீலலோசனி, திருமதி.பா.மஞ்சுளா, திருமதி.ய.யசோதாதேவி, செல்வி.க.விஜிதா, திருமதி.சு.சாரதாம்பாள், திருமதி.இ.ரஜீபனா, செல்வி.நி.தனுஷா, செல்வி.நா.கார்த்திகா, திருமதி.சு.சர்மிலா, திருமதி.ஜெ.சுபாகினி, திருமதி.உ.அல்பிரட்நிலைக்சி, செல்வி.செ.ரஞ்சினி, செல்வி.ர.விதுசாயினி, திருமதி.ஶ்ரீ.சந்திரயவிதா,

நிற்பவர்கள் இரண்டாவது வரிசை இடமிருந்து வலம் : திரு.கு.துஸ்யந்தன், திரு.இ.சத்தியநாதன், திரு.சி.யதுகுலன், திரு.ஆ.பபிகரன், திரு.இ.அரவிந், திரு.இ.பார்த்திபன், திரு.வா.ஜயந்தன், திரு.க.காண்டீபன், திரு.நி.புவிதரன், திரு.அ.விமலேசன், திரு.ச.சுகந்தன், திரு.பெ.சதாசிவம், திரு.யோ.யனுஷன், றொ.ஜெயக்கொடி பினோல்ட்

சமுகமளிக்காதோர் : திருமதி.ப.சோபனஅம்பிகா, திருமதி.நி.கோபினா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளம்

வந்தாரை வாழவைக்கும்
வளம்நிறை பூமி
வயலும் வயல் சார்ந்த
வளங்கொழிக்கும் மருதம்
வாசமுடன் வந்தணைக்கும்
வசந்த காலத் தென்றல்
வண்ணவெழில் பூத்து நிற்கும்
வானுயர் மருதை

கனிவோடு கழனிகாக்கும்
இரணைமடுக்குளம்
கருணையோடு கவலைபோக்கும்
கனகாம்பிகை அம்மன்
வேலெடுத்து விளையாடும்
வெற்றிவேல் முருகன்
வானுயர வளர்ந்து நிற்கும் வீரம் நிறை காடு

கலைகள் நிறை பெருமைகொள்
கரைச்சிப் பிரதேசம்
கற்றவரை உருவாக்கும்
காந்தி இல்லம், குருகுலம்
ஆற்றங்கரை அழகு மிளிர்
இந்துக் கல்லூரி
ஆதிசிவன் ஆலயமாய் உருத்திரபுரீஸ்வரம்

நெல்வயல் நிறைந்திருக்கும்
நிறைவான வன்னேரி
தெங்குநிறை தோட்டமாய் தெருநீளும்
கோணாவில்
நித்தம் நீர் நிறைந்திருக்கும் புதுமுறிப்புக்குளம்
புதுவெள்ளம் பாய்ந்து வரும்
அக்கராயன் ஆறு

முக்கனிகள் சொரியும் மக்கள்
முயற்சிநிறை தோட்டம்
முல்லைக்கொடி மீதமர்ந்து
மிரட்டும் மந்திக் கூட்டம்
முலைநிறைந்த பால்சுமந்து பொழியும்
பசுக் கூட்டம்
முந்தியடித்து விளையாடி
மகிழும் சிறார் கூட்டம்

பல்கலையின் பகுதியாய் பொறியியல் பீடம்
பல் இளைஞர் தொழிற்பயிற்சிக்காய்
வானவில் விடியல்
அறிவியல் நகர் எனும் அரிய ஓர் நகரம்
அம்பாள்நகர் பாரதிபுரம் நீளும் பல ஊர்கள்

இத்தனையும் நிறைந்த எங்கள்
அழகுநிறை கரைச்சி
எத்திக்கும் பசுமையுடன்
இலங்கும் எழில் கரைச்சி
புத்தூக்கம் கொண்டு
பெற்றிடும் பல உயர்ச்சி
புதுமைமிகு வளங்கள் நிறை
ஊரே எங்கள் கிளிநொச்சி.

**பி. நகுலாதேவி**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தோர்கள் நலன் பேணுவோம்

மூத்தோர், முதியோர், வயதானோர் எனப் பல வகையிலும் அழைக்கப்படுகின்ற முன்னோர்கள் என்றும் அழியாத சொத்துக்கள். இவர்கள் வாழ்வின் பல ஏற்ற இறக்கங்கள், உயர்வுகள், தாழ்வுகளை அனுபவித்தவர்கள். இந்த அனுபவங்கள் எதிர்காலச் சந்ததிக்கு வழிகாட்டிகளாக அமையப் பெற்றுள்ளன. இதனடிப்படையில் மூத்தோர்களின் அனுபவம், ஆற்றல், திறமை, தியாகம் என்பனவற்றை முதன்மையாகக் கொண்டு எதிர்காலச் சிறார்களின் நலன் பேணும் நடவடிக்கைகளுக்கு நாம் உந்து சக்தியாக இருக்க வேண்டியது அவசியமானதாகும். தற்போதைய புள்ளி விபரத்தின்படி இலங்கையில் 27 இலட்சம் முதியோர் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. விஞ்ஞான ரீதியான வளர்ச்சி, வைத்தியத்துறையின் பங்களிப்பு மூலம் வாழ்வின் வயதெல்லை உயர்வடையக் காரணமாக உள்ளது. எதிர்காலத்தில் மென்மேலும் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அறிய வருகிறது. தாம் கஸ்டப்பட்டு பல தியாகங்களை மேற்கொண்டு ஆளாக்கிய தமது குழந்தைகள் தங்களது இயலாத காலத்தில் தங்களைக் கவனித்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எதிர்பார்ப்புடன் இருப்பவர்கள் முதியோர்கள்.

ஆனால் பிள்ளைகள் வளர்ந்து வந்து நல்ல நிலையடைந்த பின்னர் முதியோரான தமது பெற்றோரை உதாசீனம் செய்வது உகந்ததல்ல. பெரும்பதவி, வசதி என்பன வந்தவுடன் பெற்றோரை சமூகத்தில் அறிமுகம் செய்வதற்கு தயங்குவோரும் உளர். பற்பல விமான உள, உடல் ரீதியான துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் முதியவர்கள் பலர் உள்ளனர். வெளியில் சொல்ல முடியாது தமக்குள் குமுறிக் கொண்டு தங்கள் ஆசை கனவுகள் எதிர்பார்ப்புகளுக்காக ஏங்குகின்றனர். அன்பிற்காக அங்கலாய்க்கின்றனர். அதனால் ..

**"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"**
என்ற வள்ளுவன் வாய்மொழியை மனதிற் கொள்ள வேண்டும்.

**"அப்புவுக்கும் ஆச்சிக்கும் துணை வேண்டும்**
**அதுவே அவர்களுக்கு ஆறுதலாம்.**
**அதிகம் நடந்தால் அனலாய் உடல் கொதிக்கும்**
**அதி குருதி அமுக்கம் அல்லலை ஏற்படுத்தும்**
**முதியோராகி விட்டால் மூட்டு வலி இருக்கும்**
**குனிந்து நிமிர்ந்து எழ பெரிதாய் மூச்சிரைக்கும்**
**அன்பினைத் தேடி அவர் உள்ளம் அலைமோதும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் வார்த்தைகளே அவர் உள்ளம் மகிழ வைக்கும்."

எனவே பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், முதியோருக்கு அன்பு காட்ட வேண்டியதும் துணையாக இருக்க வேண்டியதும் அவசியமாகும். தலைமுறையினருக்கான இடைவெளி அதிகரித்துச் செல்கின்ற இக் காலத்தில், குறிப்பாக எமது நாட்டில் சமூகப் பிரச்சினைகளும் இளம் தலைமுறையினரிடையே காணப்படுகின்ற போதைப்பொருள் பாவனை, குற்றச் செயல்களைத் தடுக்கும் வகையில் சிறார்கள் இடத்திலும் மூத்தோரிடையிலும் பரஸ்பர நல்லுறவுகளையும் புரிந்துணர்வுகளையும் ஏற்படுத்தல் அவசியம் ஆகும். இவற்றிற்கு முன்னோடியாக 60 வயதில் முதியோர் என்ற அடிப்படையில் உள்ள அனைத்து முதியோர்களையும் தத்தமது கிராமங்களில் முதியோர் சங்கங்களை அமைத்து அதில் அங்கத்தவராக்குதல், சிறார்களுக்கான அறநெறி வகுப்புகள், தியான வகுப்புகள், உளவியற் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து செயற்பட வழிவகுத்தல் என்பன நற்பலனைத் தரக்கூடியதாக அமையும். மூத்தோரே எம் முத்துக்கள் அவர்களை கண் காப்பது போல காப்பது எமது கடன்.

**அப்புத்துரை இரகுபதி**
*ஓய்வூதியர், ஆயுர்வேத வைத்தியர்,*
*தலைவர்,*
*கிளி/ மாவட்ட முதியோர் பேரவை.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்பெரும் கலைஞர்கள்

"எல்லோரும் கூடி ஒரு தேர் இழுக்கிறதே வாருங்கள் தோழரே வடத்தைப் பிடிப்போம்" என்று வந்தாரை வாழவைக்கும் வளமார் திருவிடமாக கிளிநொச்சியின் வளர்ச்சியில் பங்கெடுத்து ....

காடு வெட்டி, கட்டை பிடுங்கி, முள்ளகற்றி புதர்கள் வெட்டி கல்லகற்றி பாதை அமைத்து நீர் நிலையைச் சுத்தம் செய்து ஆறு, குளம் செப்பனிட்டு காட்டைக் கழனியாக்கி, கவினுறு நகரமாக்கி....

கல்வியை, கலையை, விளையாட்டை விவசாயத்தை, இதர தொழில்களை உருவாக்கிய மனிதர்களை நினைவுகூர்ந்து ....

கிளிநொச்சி என்று பெருமை கொள்ளும் வகையில் கிளிநொச்சியின் கலை பண்பாடுகளில் அர்ப்பணித்து வாழ்ந்த மனிதர்களைப் போற்றுவோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கலைக்காகத் தம்மை அர்ப்பணித்து வந்தவர்களில் முதலில் நால்வரின் கதையை நூலுருவிற்காக முன்வைக்கின்றேன். அந்த வகையில்

நாடகக் கலைக்காக தன்னை அர்ப்பணித்தவரும் சமூக, நவீன, வரலாற்று நாடகராகத் திகழ்ந்த பாரம்பரியக் கலைஞர் வீரசிங்கம் என்பவரையும் புராண இதிகாச வரலாற்று இலக்கிய நாடகங்களின் சித்தர், ஆன்மீகம், ஓவியம், சிற்பக் கலைகளின் வல்லோன் பெஞ்சமின் திருச்செல்வம் (தில்லை நடராசன்) அவர்களையும் காத்தவராயன் கூத்து, சிந்து நடைக்கூத்தின் பிரபல அண்ணாவியும், ஒப்பனைக் கலைஞருமான கலைப்பிரமா அப்பச்சி வல்லிபுரம் என்பவரையும் அடுத்து இலக்கிய ஆளுமை, காதலையும் ஆன்மீகத்தையும் கலந்து இலக்கியம் படைக்கும் புதுமை எழுத்தாளர் இளையதம்பி நடராசா என்பவரையும் என் படைப்பிற்குள் கொண்டு வருகின்றேன்.

**பெயர் : க.சி.வீரசிங்கம்**
**பிறந்தது : 21.03.1928**
**முகவரி: திருநகர்**
**சம்பந்தப்பட்ட துறை: நாடகம்**

இவர் 1960 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் நாடகப் பட்டறையில் நாடகம் பயின்றவர். அவருடன் இணைந்து அவரின் நாடகக் குழுவில் ஒருவராகச் செயற்பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலும் நாடகங்களில் பங்காற்றி வந்துள்ளார். அவர் வாழ்ந்த இடங்களிலெல்லாம் நாடகமாடுவதே அவரது பொழுதுபோக்காக இருந்தது.

1970 ஆம் ஆண்டு திருநகர் கிளிநொச்சியை வாழ்விடமாகக் கொண்டு க.சி.வீரசிங்கம் அவர்கள் வாழ்ந்து வந்த நிலையிலும் கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் தொடர்பைக் கைவிடாது தொடர்ந்தும் அரங்காடி வந்ததோடு கிளிநொச்சியிலும் கலையரசு சொர்ணலிங்கம் ஐயாவின் நாடகங்களைப் பரப்பியும், பழக்கியும் நாடகக் கலைச்சேவை ஆற்றிவந்துள்ளார்.

கிளிநொச்சியில் கலைவளர்ச்சி நாடக மன்றத்தை உருவாக்கிய க.சி.வீரசிங்கம் அவர்கள் கிளிநொச்சியில் அனைத்து நாடக ஆர்வலரையும் இணைத்து குமணன், பாதுகை, குகன், இலங்கேஸ்வரன், முகத்தார் வாட்டில், திருவாத்தி, சிங்ககிரிக்காவலன் போன்ற நாடகங்களையும், கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் காசியப்பன், ராவணன் போன்ற நாடகங்களையும் கிளிநொச்சியில் மேடையேற்றியுள்ளார்.

அதே காலகட்டத்தில் திரு.சத்தியமூர்த்தி அவர்கள் திரு.திருச்செல்வம் அவர்கள், திரு.பரமசிவம் அவர்கள், திரு.மாசிலாமணி என்பவர்களுடன் இணைந்து வரலாற்று நாடகங்களையும், சமூக நாடகங்களையும் மேடையேற்றியுள்ளார்.

பின்னர் ஸ்ரார் நாடக மன்றத்துடன் இணைந்து கூத்துக்களையும் நடித்து மேடையேற்றியுள்ளார். திரு.க.சி.வீரசிங்கம் அவர்கள் ஏனைய கலையின் கூறுகளான யோகா, ஆன்மீகம், ஆயுர்வேத வைத்தியபுலமை, விசகடிவைத்தியம் போன்றவைகளையும் செயற்படுத்தி வந்துள்ளார். இத்தனை சிறப்புகளுக்கு மேலாக மாட்டுவண்டிச்சவாரி, சறுக்கு மரம் ஏறுதல், கேரளாவில் உள்ள வாள்வீச்சுக்கலைகள் மற்றும் போர்த்தேங்காய் அடித்தல் போன்ற மரபுக் கலைகளையும் வீரவிளையாட்டுக்களையும் அடுத்த சந்ததியினருக்கு ஊக்குவித்தும் வந்துள்ளார். சமூகத் தொண்டுகளிலும் ஆர்வம் கொண்ட வீரசிங்கம் அவர்கள் கிளிநொச்சியில் "மில்க் போட்" உருவாகுவதற்கு உறுதுணையாகவும் இருந்துள்ளார்.

இத்துணை சிறப்புகளையும் கொண்ட க.சி.வீரசிங்கம் அவர்கள், "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற கொள்கையுடையவராகவும் அரசியல், சமூக, சமய, பொது நோக்கு உடையவராக சமூகத்தால் பார்க்கப்படுகின்றார். இவரைக் கௌரவிக்கும் முகமாக கரைச்சி பிரதேச சபை "பாரம்பரியக் கலைஞர் "க.சி. வீரசிங்கம் ஞாபகார்த்த விருது" என்ற பெயரில் விருது ஒன்றை அறிவித்துள்ளது. இது வீரசிங்கம் அவர்களுக்குக் கிடைத்த வாழ்நாள் சாதனையாகும். இவர் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் காலமானார்.

**பெஞ்சமின் திருச்செல்வம் (தில்லை நடராசன்)**

**பிறந்த திகதி : 1931.12.23**

**சம்பந்தப்பட்ட துறை: நாடகம், ஓவியம்**

பல்கலை வேந்தன், கம்பீரக்குரலோன் திருச்செல்வம் அவர்கள். கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் 120, திருநகர் தெற்கு, கிளிநொச்சியில் 1931.12.23 ஆம் நாள் பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு வயது முதலே சிற்பம், சித்திரம், நாடகம், கவிதை, விளையாட்டு, கட்டுரை, ஒப்பனை, ஆன்மீகம், இயற்கை உணர்வு, இயற்கை வைத்தியம் போன்ற கலைகளில் சிறந்து விளங்கியுள்ளார்.

விவசாயத் திணைக்களத்தில் உயிர் ஓவியங்கள் வரையும் பணியில் இணைந்து 1500 படங்களுக்கு மேல் அதிகமாக வரைந்து உலக வங்கியின் பாராட்டினைப் பெற்று இலங்கையில் சாதனையாளராகத் திகழ்ந்திருக்கிறார்.

கலை இலக்கியம் என்றில்லாமல் விளையாட்டுத்துறையிலும், ஆணழகன் போட்டியிலும் பங்குபற்றி பலமுறை பாராட்டுப் பெற்றிருக்கின்றார். நாடகக் கலையில் சிறந்து விளங்கிய திருச்செல்வம் அவர்கள் அரச வேடப் பொருத்தத்திற்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் பெயர் பெற்றவர்.

வாய்மை, அறத்தின் சுவடு, பரதன், சேரன் செங்குட்டுவன், பண்டாரவன்னியன், குகன், ஆட்டநந்தி, கடமையின் காவலன், கும்பகர்ணன், சங்கிலியன் போன்ற நாடகங்களை நடித்து பலரது பாராட்டையும் பலமுறை சிறந்த நடிகர் விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

குறிப்பாக பண்டாரவன்னியன், கும்பகர்ணன், பரதன் போன்ற பாத்திரங்களில் இவர் மிகச் சிறப்பாக நடித்து பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

இவரால் எழுதப்பட்ட நாடகங்கள் யாவும் புராண, இதிகாச இலக்கியங்களுக்குப் பொருள்களைக் கொண்டவை என்பதுடன் இத்தகைய நாடகங்களுக்குத் தேவைப்படும் நடி பொருட்களான வாள், வேல், சூலாயுதம், கதை,(கதாயுதம்) உடைகள், நகைகள், கொம்பு, கேடயம், முடி, பாதணிகள் யாவும் இக்கலைஞரால் வடிவமைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறைவன், சமூகம், கலை, நீதி, காதல், பக்குவம், சட்டம், காமம், கற்பனை, ஊழ்வினை, அறியாமை, நான், அழகு, தற்கொலை, ஆசை, விஞ்ஞானம், உண்மை போன்ற உள்ளடக்கங்களைக் கொண்டமைந்த படைப்புக்களை உள்ளடக்கிய இக்கலைஞரது படைப்புக்கள் யாவும் இந்தியாவின் குருதேவ் என்று போற்றப்பட்டு வந்த கவி ரவீந்திரநாத் தாகூரின் படைப்பிலக்கிய வழிமுறையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட வடிவமாகும்.

இத்துணை சிறப்புகளுடைய பெருங்கலைஞருக்கு கரைச்சி பிரதேச செயலக கலாசாரப் பேரவை 2010 ஆம் ஆண்டு கரை எழில் விருதும், கிளிநொச்சி மாவட்ட செயலக பண்பாட்டுப் பேரவை 2010 ஆம் ஆண்டு கலைக்கிளி விருதும் வழங்கிக் கௌரவித்துள்ளது. இக்கலைஞர் 05.10.2019 ஆம் ஆண்டு இறைபதம் அடைந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அப்பச்சி வல்லிபுரம்**

**பிறந்த திகதி : 10.09.1941**

**முகவரி : திருநகர் வடக்கு**

**பிறந்த இடம் : பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.**

**சம்பந்தப்பட்டதுறை : கூத்து, ஒப்பனை**

கூத்துக் கலை தந்த வல்லிபுரம், திருநகரில் வாழ்ந்த வல்லிபுரம், காத்தவராயன் சிந்துநடைக்கூத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் ஆன்மீக வழிபாடாகக் கொண்டாடிய யுகத்தின் கலைஞன்.

கிராமங்கள், ஆலயங்கள், பாடசாலைகளிலெல்லாம் கூத்துக் கலையைப் பரப்பி அடுத்த சந்ததியை உருவாக்கிய படைப்பாளன் அப்பச்சி வல்லிபுரம் என்னும் மகா கலைஞன். கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இல.165, திருநகர் வடக்கு என்னும் கிராமத்தில் வாழ்ந்து வரும் இவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். 1956 ஆம் ஆண்டு முதல் கிளிநொச்சியில் வசித்து வருகின்றார். இவரது தகப்பனார் பாரம்பரியக்கூத்துக்களை மட்டுவில் அம்மன் கோயிலில் மேடை ஏற்றி வந்துள்ளார். அதில் சிறு சிறு பாத்திரங்களில் இவர் நடித்திருக்கின்றார். அதன் பின்னர் இவரது காணியில் இருக்கும் அம்மன் ஆலயத்தில் உடுக்கு அடித்து காத்தவராயன் பாடல்களைப் பாடி வந்திருக்கின்றார். தாயாரின் வேண்டுகோளுக்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் அவ் ஆலயத்தில் காத்தவராயன் கூத்தினை மேடை ஏற்றி வருகிறார்.

தமிழ் மக்களின் பாரம்பரியக் கூத்து வடிவங்கள் காலப்போக்கில் அழிந்து விடாமல் இருக்க அதை இளைய தலைமுறையினருக்குக் கற்றுக் கொடுத்து புத்துயிர் வழங்க வேண்டும் என்ற விருப்பில் இன்று வரை பல பாடசாலைகளில் கூத்தினை மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்து வருகிறார். ஆரம்ப காலத்தில் முத்துமாரி அம்மன் நாடக மன்றம் என்ற ஒரு மன்றத்தினை உருவாக்கி அதனூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று ஆண்டுகளில் 90 தடவைகளுக்கு மேல் மேடை ஏற்றியுள்ளார். இவர் இப்பணிகளுக்கான ஊதியம் எதுவும் வாங்குவதில்லை. கலைப்பாரம்பரியம் தொடர வேண்டும் என்ற நோக்கில் தனது பணியினைச் செய்து வருகிறார்.

இவருடைய பணியினை விதந்து கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கம் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்துள்ளது. 2007 ஆம் ஆண்டு இவருடைய கலைச் சேவைக்காக அரசாங்கம் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

தொடர்ந்து பல பாடசாலைகள், பொது அமைப்புகள் இவரை இன்று வரை கௌரவப்படுத்தி வருகின்றன. காத்தவராயன் கூத்தினை பாடசாலை மாணவர்களுக்குப் பயிற்றுவித்தும் வந்துள்ளனர்.

முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகப் பணிகளிலும் பங்காற்றி வந்த திரு. வல்லிபுரம் அவர்கள் ஆலய கட்டட வளர்ச்சியிலும் பங்காற்றியுள்ளார். முத்துமாரி அம்மன் நாடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தினூடாக 100 இற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளையும் நாடகக்கலை, கூத்துக்கலையில் அறிமுகம் செய்துள்ளார். அவர்களும் தற்போது அப்பணியை ஈடு செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்துணை சிறப்புகளும்மிக்க இக்கலைஞர் காத்தவராயன் சிந்துநடைக் கூத்தின் தலைசிறந்த அண்ணாவியராகப் போற்றப்படுகிறார். 2016 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி ஒருவர் கூத்துக்கலை தொடர்பான ஆய்வு முயற்சியினூடாக திரு.வல்லிபுரம் என்ற பெரும் கலைஞரின் கூத்தின் சிறப்பையும், வழி நடத்தலையும் வரலாற்றில் பதிவிட்டுள்ளார்.

இத்துணை சிறப்பு மிக்க பெருங்கலைஞருக்கு கரைச்சி பிரதேச செயலக கலாசாரப் பேரவை 2010 ஆம் ஆண்டு கரை எழில் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. கிளிநொச்சி மாவட்ட செயலக பண்பாட்டுப் பேரவை 2010ஆம் ஆண்டு கலைக்கிளி விருது வழங்கி கௌரவித்தது.

வடக்கு மாகாண பண்பாட்டுத்திணைக்களம் 2014 ஆம் ஆண்டு கௌரவ முதலமைச்சர் விருது வழங்கி கௌரவித்தமை சிறப்பிற்குரியது. மேற்படி கலைஞர் 01.07.2019 இல் இறைபதமடைந்துள்ளார்.

**இளையதம்பி நடராசா**

**பிறந்தது : 1939 .02. 11**

**முகவரி : இல. 761, திருநகர் வடக்கு, கிளிநொச்சி.**

**பிறந்த இடம் : பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி.**

**சம்பந்தப்பட்ட துறை : இலக்கியம்**

வாழ்வியல், மதம், ஆன்மீகம், மொழி,காதல், அர்ப்பணிப்பு, இலட்சியம் அனைத்தையும் ஒருங்கே இணைத்து சிறுகதை இலக்கியம் படைத்து வருபவர் தான் இளையதம்பி நடராசா..

இவரால் படைக்கப்பட்ட (இலக்கியம்) சிறுகதைத்தொகுப்பு நூல்கள் இன்றும் பேசு பொருளாக உள்ளன.கிளிநொச்சி திருநகர் வடக்கு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த இளையதம்பி நடராசா ஒரு முதிர்ந்த எழுத்தாளராவார். அவர் 1939 ஆம் ஆண்டு மாசி மாதம் 11 ஆம் திகதி இளைதம்பி பார்வதி தம்பதியினரின் புதல்வராக பரவிப்பாஞ்சான் கிளிநொச்சியில் பிறந்த நடராசா கிளிவெட்டி மத்திய கல்லூரியில் 09 ஆம் தரம் வரை கல்வி கற்றுள்ளார். பின்பு கட்டடத்தொழிலை தனது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வந்தார். தனது இளம் பராயத்திலிருந்தே இலக்கிய துறையின் மீது இவருக்கு ஆர்வம் இயல்பாக ஏற்பட்டது. 1957 ஆம் ஆண்டில் சில பத்திரிகைகளுக்கு தனது ஆக்கங்களை எழுதி அனுப்பினார். ஆனால் அக்கால கட்டங்களில் அவை பத்திரிகைகளில் பிரசுரமாகவில்லை. இருப்பினும் தனது விடாமுயற்சியால் 1968 ஆம் ஆண்டு இவரது கன்னிக்கதை "வாடாமல்லிகை" என்னும் தலைப்பில் "தினபதி" ப் பத்திரிகையில் பிரசுரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து "சுதந்திரன்" பத்திரிகையும் இவரது ஆக்கங்களுக்கு ஊக்கமளித்தது. 1965 ஆம் ஆண்டின் பின் பூண்டு லோயாவில் இருந்து வெளிவந்த "வெற்றி மணி" சஞ்சிகையில் "பசுவும் கயிறும், முதலாளியும் தொழிலாளியும், இதயக் கோயிலும் இறைவழிபாடுகளும், தாயும் சேய்களும், திருவள்ளுவரும் திருக்குறளும்" போன்ற தலைப்புக்களிலான தத்துவக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இக்கால கட்டங்களில் இவர் "இ.என்.ராசா," திருநகர் நடராசன் ஆகிய பெயர்களிலும் எழுதி வந்துள்ளார்.

இவர் இதுவரை 150 இற்கு மேற்பட்ட சிறுகதைகளையும் 200 இற்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, மித்திரன், ராதா போன்ற பத்திரிகைகளிலும் பல்வேறு சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. திருகோணமலை இலக்கிய ஒன்றியம் இவரது 30 சிறுகதைகளைத் தொகுத்து "மண்ணின் வேர்கள்" எனும் தலைப்பில் 2006 இல் வெளியிட்டது. இன்று வரை வீரகேசரி, தினக்குரல், மல்லிகை போன்ற பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வருகிறார். 2008 ஆம் ஆண்டு இவரது நேர்காணல் ஒன்று "ஐ" தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகியது. தொடர்ந்து தினக்குரலிலும் இவரது நேர்காணல் பிரசுரமானது.

மானுடத்தை அதிகமாக நேசிக்கும் எழுத்தாளர் இறை நம்பிக்கை பற்றி தன்னுடைய அண்மைய கதைகளில் அதிகமாக எழுதி வருகின்றார். இவரின் சிறுகதைகள் பல்வேறு பத்திரிகை நிறுவனங்களின் சிறுகதைப் போட்டிகளிலும் இலங்கை கலாசாரத் திணைக்களத்தால் நடத்தப்படும் சிறுகதைப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இதுவரை 150 இற்கு மேற்பட்ட சிறுகதைகள், 200 இற்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதியதோடு

**"ஓய்வு சிறுகதைத்தொகுப்பு"**
**"கரை சேராப் படகுகள்" சிறுகதைத் தொகுப்பு**
**"மனக்கோயில்" சிறுகதைத்தொகுப்பு**
**"மண்ணின் வேர்கள்" சிறுகதைத்தொகுப்பு என்பன**
இவரால் வெளியிடப்பட் சிறுகதை நூல்களாகும்.

இத்தகைய சிறப்புகளைக் கொண்ட சிறுகதை இலக்கிய ஆணிவேருக்கு

கரை எழில் விருது
கலைக்கிளி விருது
ஆளுனர் விருது

கலாபூஷணம் விருது மற்றும் சமூகத்தின் பல்வேறு கௌரவிப்புகளும், லிற்றில் எயிட் நிறுவனத்தின் கௌரவிப்பும் கிடைத்தமை பெருமைக்குரியதே.

**சி.வ.சி.ஏழுமலைப்பிள்ளை**
*மலையாளபுரம்,*
*கரைச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பொருளூடாக காதலும் குடும்ப வாழ்க்கையும் பழந்தமிழ் இலக்கியங்கள் ஊடே ஒரு பார்வை

## 1.நீரும் நீயும்

சங்கப் புலவர்கள் அகம் சார்ந்த பாடல்களாயினும் சரி, புறம் சார்ந்த பாடல்களாயினும் சரி, கூற எடுத்துக் கொண்ட விடயத்தை விளக்குவதற்காக கையாண்ட கருப் பொருட்களை வெறுமையாகக் கையாளவில்லை. அதன் மூலம் சமூகத்துக்கு பல நுட்பமான அரிய கருத்துக்களையே கூறியிருக்கின்றனர்.

நாம் வாழும் பூமியின் நிலமேலோட்ட நீரில் 97 வீத பகுதி உவர் நீராக சமுத்திரங்களிலும் 2.4 வீத நீர் பனிக்கட்டி, பனியாறு, பனிமலையாக துருவப் பிரதேசங்களிலும் காணப்பட மிகுதி 0.6 வீத நீரே ஆறு, குளம், குட்டைகளிலும் மனித உடல்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களிலும் காணப்படுகின்றது. நிலத்தடி நீரைப் பொறுத்தவரை நீர் கொள் படுக்கையின் அளவும் குறைந்து கொண்டு செல்வதனை அறியமுடிகிறது. மழைவீழ்ச்சி குறைவடையும் சந்தர்ப்பங்களில் நிலத்தடி நீரின் அளவும் குறைவடைவது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறி விடுகின்றது.

எதிர் காலத்தில் தங்கத்தைவிட தண்ணீரின் பெறுமதி அதிகரித்துவிடுமென்று கூறப்படுகின்றது. தண்ணீருக்காகவே பல போர்களும் அதனால் பெரும் அழிவுகளும் நிகழலாம் என்றும் அச்சம் கொள்ளப்படுகிறது. இன்னும் ஐந்து வருடத்தில் உலக மக்கள் தொகையில் அரைவாசிப் பேர், நீரை அடிப்படையாகக் கொண்ட பல நோய்களுக்கு உட்படுவர் என்று கூறப்படுகிறது. உலகத்தில் மூன்றில் ஒருவருக்கு போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. ஐந்தில் ஒருவருக்கு சுகாதாரமான குடிநீர் கிடைப்பதில்லை. மாசுபட்ட குடிநீரால் வருடத்தில் ஐந்து மில்லியன் இறப்புக்கள் ஏற்படுகின்றன. உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பின்படி பாதுகாப்பான நீர் கிடைத்தால் வருடாந்தம் வயிற்றுப் போக்கால் இறக்கும் 1.4 மில்லியன் குழந்தை மரணத்தை தடுத்துவிட முடியும் என்று கூறப்படுகிறது.

இவ்வாறான நீரின் சிறப்பை தலைவனின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துவதன் மூலம் நற்றிணையின் முதலாவது பாடலானது நயமாக உரைக்கிறது. நம் காதலர் நிலைத்த சொல்லையுடையவர், நீண்ட காலம் மகிழ்சியாக இருக்க வைத்தவர், எனது தோள்களை என்றும் பிரிந்து செல்வதை அறியாதவர். தாமரை மலர்களிடத்தே காணப்படுகின்ற பூந்தாதினை நுகர்ந்த தேனியானது, அதனை உயர்ந்த சந்தன மரத்தின் மீது தேனடையாகச் சேர்த்து வைக்கும். அந்தத் தேன் போல உயர்ந்த, உறுதியான நட்புடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் இல்லாமல் இந்த உலகம் வாழ முடியாது அதுபோல அவர் இல்லாமல் என்னால் வாழ முடியாது. இவ்வாறாக என்னை விரும்பி அருள் செய்பவர், எனது ஒளி பொருந்திய நெற்றியை ஒளி மங்கச் செய்ய மாட்டார். என்பதாக நேரடிப் பொருள் தருகிறது அப்பாடல்.

என்ன அருமையான வரிகள் தாமரை மலரில் நுகர்ந்து, சந்தன மரத்தில் வைக்கப்பட்ட தேனின் சிறப்புப் போல உயர்வு, தகுதி, நறுமணம், இனிமை முதலான நல்லியல்புகளைக் கொண்டது நம் நட்பு என்று கூறுகிறாள் தலைவி.

அவர்- நீர், நான்- உலகம், அவர்-உயிர், நான்- உடல், நீர் இல்லாமல் உலகம் இல்லாதது போல, அவர் இல்லாமல் நான் இல்லை என்பதனை, தலைவி, "நீர் இன்றி அமையா உலகம் போலத் தம் இன்று அமையா" என்று கூறுகிறாள். வள்ளுவரும் வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில்(குறள்20)

**"நீர் இன்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு'**
என்று குறிப்பிட்டமையும் இங்கு மனங் கொள்ளத்தக்கது.

**"நின்ற சொல்லர், நீடு தோறு இனியர்,**
**என்றும் என் தோள் பிரிபு அறியலரே,**
**தாமரைத் தண் தாது ஊதி மீமிசைச்**
**சாந்தில் தொடுத்த தீம் தேன் போலப்**
**புரைய மன்ற, புரையோர் கேண்மை,**
**நீர் இன்று அமையா உலகம் போலத்**
**தம் இன்று அமையா நம் நயந்து அருளி,**
**நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**
**சிறுமை உறுபவோ? செய்பு அறியலரே"**

## 2.இனிதென

**"முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்**
**தான் றுழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவ னுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே.**

இது குறுந்தொகையின் 167 வது பாடல். கணவன் மனைவி இடையே இருக்கின்ற, இருக்க வேண்டிய மிகமுக்கிய அம்சத்தை வெளிப்படுத்துகின்றது. கட்டித் தயிரை தன் விரல்களால் பிசைந்து தயிர்க்குழம்பு சமைக்கின்றாள் தலைவி. அப்போது தாளிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்காக தனது பட்டாடை அழுக்காகிவிடுமே என்று கூடப் பாராது தயிர் பிசைந்த விரல்களை தனது ஆடையில் துடைத்து விட்டு, புகை கண்ணுக்குள் செல்வதனையும் பொருட்படுத்தாது, தன் கணவனுக்கு இனிமையான குழம்பு தயாரிப்பதிலேயே முனைப்பாக இருக்கின்றாள்.

பட்டாடை அழுக்காவது, மைதீட்டிய கண்கள் கலங்குவது எதுவுமே அவளுக்கு பெரிதாகப் படவில்லை. இவ்வாறு சமைத்த குழம்பை கணவனுக்கு பரிமாறுகின்றாள். நிற்க, கணவனை நோக்குவோம்:

அன்புடனே தன் மனைவி சமைத்தளித்த குழம்பை உண்ணும் போது "இனிது இனிது"(நல்லாய் இருக்கு என்று பேச்சு வழக்கில் கூறுவது பொருந்தும்) என்று பாராட்டி உண்ணுகின்றான். இப்போது அவ்வார்த்தையைக் கேட்ட மனைவியின் முகத்தில் மகிழ்சிக்கு எல்லையில்லை.

ஆக, அன்றாட வாழ்வில் கணவனுக்காக மனைவி மலையைப் பிளக்கவும் தேவையில்லை. மனைவிக்காக கணவன் உலகை வாங்கிப் பரிசளிக்கவும் தேவையில்லை. கணவனைக் கவரக்கூடிய உங்களால் முடிந்த கடமைகளை ஆற்றுங்கள் கணவனும் மனைவியின் உதவிகளை உணர்ந்து பாராட்டுக்களை தெரிவியுங்கள். குடும்பம் மகிழ்வாகும். வாழ்க்கை சிறக்கும். பிரிவு நெருங்காது. பட்டம், பதவி பணம் பகட்டு-இவை எதனாலும் கிடைக்காத குடும்ப இன்பம் வாழ்வில் குதூகலிக்கும். விவாகரத்து வீட்டுப்பக்கம் நெருங்காது. ஒருவருக்கு ஒருவர் மதிப்பளியுங்கள், கடமைகளை கடமைக்காகச் செய்யாது உண்மை உணர்வுடன் செய்யுங்கள். சிறுவிடயமாக இருந்தாலும் பாராட்டத் தவறாதீர்கள் வாழ்க்கை சிறக்கும்.

**ச. கருணாகரன்**
*அபிவிருத்தி உத்தியோகத்தர்,*
*பிரதேச செயலகம்,*
*கரைச்சி.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : திருமதி.அ.கலைவாணி, திருமதி.ச.யமுனாதேவி, திருமதி.அ.குமரவேள், திருமதி.ச.மாதுகி (ADS), திரு.த.முகுந்தன் (DS) திரு.பூ.ராஜ்வினோத் (DDP), திரு.கு.சுரேஸ்குமார்(Accountant), திரு.இ.தச்சினிக்குமார், திரு.க.பிரகலாதன்

முதலாவது வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம்: திருமதி.ச.சுதர்சினி, திருமதி.கே.ஜீவனா, திருமதி.ப.நிறஞ்சலா, திருமதி.கோ.மயூரா, திருமதி.அ.பாஜினி, திருமதி.கி.கிருஸ்ணப்பிரியா, திருமதி.பி.நகுலாதேவி, திருமதி.த.கீர்த்திகா, திருமதி.மோ.சிவமங்களா, திருமதி.இ.கிஷாந்தினி, திருமதி.த.துவாரகா, திருமதி.அ.டிசாந்தி, திருமதி.ச.வினோதா, திருமதி.கே.ஈஸ்வரி, திருமதி.ஜெ.நிறஞ்சினி, திருமதி.அ.தர்சினி, திருமதி.க.அன்பரசி, திருமதி.ப.ரஜினி

இரண்டாவது வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம் :திருமதி.டே.சத்தியவாணி, திருமதி.ம.குணாதிகா, திருமதி.யோ.தவப்பிரியா, திருமதி.பா.கினித்தா, திருமதி.க.தீபா, திருமதி.பி.ஸ்ரீவனஜா, திருமதி.தி.அபிராமி, திருமதி.கு.சுபாஜினி, திரு.அ.அஜந்தா, திருமதி.து.சாந்தகுமாரி, திருமதி.வ.சசிலேகா, திரு.இ.சந்தானலட்சுமி, திருமதி.கி.பிரியதர்சினி, திருமதி.ர.தமிழ்ப்பிரியா, திருமதி.க.ஜெயராஜினி, திருமதி.இ.யாழினி

சமுகமளிக்காதோர்: திருமதி.ச.கம்சானந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிக்கள உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : திரு.செ.ராஜ்குமார் (CO), திருமதி.ந.கீதரோகினி (SSO), திருமதி.ச.வினோதா (LO), திருமதி.ச.மாதுகி (ADS), திரு.த.முகுந்தன் (DS), திரு.பூ.ராஜ்வினோத் (DDP), திரு.கு.சுரேஸ்குமார் (Accountant), திரு.க.பவானந்தன் (RDO), திருமதி.யு.கவிதா (WDO),

முதலாவது வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம் : திருமதி.பா.ஜெயராணி (DO), திருமதி.ஜெ.ஜெயந்தினி (DO), திருமதி.தீ.ஷாமினி (DO), திருமதி.சு.கஜீபா (DO), செல்வி.செ.கஜாந்தினி (DO), திருமதி.பு.தாரணி (DO), திருமதி.பி.தயாளினி (DO), திருமதி.அ.யசிந்தா (DO), திருமதி.கு.சுதர்சினி (DO), திருமதி.ஜெ.தனுஷா(DO), திருமதி.க.நளாயினி (Statistical Officer),திருமதி.கௌ.ஜென்சி(DO) ,திருமதி.க.ஜென்சி (ECDA), திருமதி.சு.கௌரி (CO), செல்வி.செ.நிருபா (CRPA), திருமதி.ச.ஜனனி (CMSO), திருமதி.வி.விஜிதா (DO)

இரண்டாவது வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம் : செல்வி.சி.லகுவணா (FI), திருமதி.யு.சசிகலா (CMSO), திருமதி.பி.தாட்சாயினி (DO), திருமதி.ஸ.காயத்திரி (DO), திரு.ஜெ.சுகந்தன் (YSO), திரு.பொ.சதீஸ் (DO), திரு.ந. நந்தகுமார் (FI), திரு.இ.சுகர்ணன் (CA), திரு.சி.கஜிந்தன் (CO), திரு.இ.போல்ராஜ் (SO), திரு.ஸ்ரீ.ஸ்ரீலக்ஸ்மன்(CO), திரு.க.குகனேசன் (CO), செல்வி.இ.தேனுகா(DO) செல்வி.ர.நிசாந்தினி (DO), திருமதி.தி.ஜெயசுகிதா (DO), செல்வி.அ.கோபிகா (DO) சமுகமளிக்காதோர் : திருமதி.வே.ஜெசிந்தா, திருமதி.கு.சஜீவினி (FC), திருமதி.இ.மனோரஞ்சினிதேவி (CMSO)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை காட்டும் பாதை

மக்கள் மத்தியில் நல்ல விடயங்களை விடவும் தீய விடயங்களே அதிகம் கவரப்படும் என்பது எழுதப்படாத விதிமுறையாகும். அந்த வகையில் நல்ல மாற்றங்களை விடவும் தீய மாற்றங்களை மக்கள் ஏற்பதற்கான நல்ல உதாரணமாக இன்று போதைப் பொருள் பாவனைக்குள் இளம் சமுதாயம் அடிமையாகி வருகின்றமையைக் குறிப்பிடலாம்.

உலகளாவிய ரீதியில் மொத்த சனத்தொகையில் 15 - 64 வயதுக்கு இடைப்பட்ட 243 மில்லியன் மக்கள் இன்று போதைப் பாவனைக்கு அடிமையாகி உள்ளனர் என்ற ரீதியில் போதைப்பொருள் பாவனைக்கு உலக சனத் தொகையில் 200 பேருக்கு ஒருவர் என்ற ரீதியில் அடிமையாகின்றனர். இந்தத் தொகையில் 20% போதைப்பொருள் அடிமையாளர்கள் பெண்களாவர், மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் போதைப்பொருள் பாவனையால் மாத்திரம் சுமாராக 6 லட்சம் பேர் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை தெரிவிக்கின்றது. இந்த நிலையில் நாளுக்கு நாள் உலகளாவிய ரீதியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துக் கொண்டே செல்கின்றதே தவிர இவற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கையாள்வது மிகவும் கடினமானதொரு காரியமாகவே மாறி விடுகிறது. அதே போல் இன்று போதை உற்பத்தியை மேற்கொள்ளும் நாடுகளில் மத்திய கிழக்கு நாடுகளே முன்னிலையில் உள்ளன. குறிப்பாக உலகளாவிய ரீதியில் போதைப்பொருள் உற்பத்தியில் ஆப்கானிஸ்தான் முதன்மை நாடாக உள்ளது.

போதைப்பொருள் உருவாக்குவதற்காக போப்பி செடிகள் ஒரு இலட்சத்து ஐம்பத்துநான்கு ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் செய்கை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டில் மாத்திரம் ஆப்கானிஸ்தானில் இரண்டு இலட்சத்து ஒன்பது ஆயிரம் நிலப்பரப்பில் போப்பி செய்கை பண்ணப்பட்டுள்ளது. அதே போல் மியன்மார் போதைப்பொருள் உற்பத்தியில் இன்னொரு முக்கிய நாடாக உள்ளது. நாட்டில் வருகை தரும் கோக்கெயன் வகையிலான போதைப்பொருள் பிரசித்தி பெற்று வருகின்றது.

இன்று உலகளாவிய ரீதியில் நடைபெறும் பல குற்றச் செயல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு போதைப் பாவனையே முக்கிய காரணமாய் அமைந்துள்ளது. சாதாரண மதுப்பாவனை, சிகரெட் என்பவற்றிற்கு அப்பால் பல வகையிலான போதைப் பொருட்கள் பல நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதே போல் இளம் சமூகத்தினர் அதிகளவில் போதைப்பொருளுக்கு அடிமைகளாக மாறியுள்ளனர்.

இந்த நிலையில் உலகளாவிய ரீதியில் பரவி வரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் வகையில் 1987ம் ஆண்டு ஆனி மாதம் 26 ஆம் திகதியை ஐக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் சபையினால் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தல் தடுப்பு தினமாக பிரகடனம் செய்தது, அன்று தொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் ஆனி 26ம் திகதி போதைப்பொருள் ஒழிப்புத் தினமாக கடைப்பிடித்து வருகின்றனர். இலங்கையிலும் போதைப்பொருள் பாவனையும் சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் தாக்கமும் அண்மைய காலங்களில் மிகவும் அதிகரித்து வருகின்றன. இலங்கையில் கடந்த 3 தசாப்த கால சூழலில் நாட்டில் ஆயுதப் போராட்டத்தை காரணம் காட்டி இலங்கையில் போதைப்பொருள் வியாபாரம் இடம்பெற்று வந்தது. ஆனால் யுத்தத்திற்குப் பின்னரான கடந்த 07 ஆண்டு காலமாக இலங்கையின் போதைப்பொருள் பாவனை இரண்டு மடங்கு அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

இலங்கை சனத்தொகையின் ஒரு இலட்சம் பேருக்கு 322 பேர் என்ற ரீதியில் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனை என்ற குற்றத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கையில் போதை வஸ்துக்களுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கையில் 50 வீதமானோர் திருமணமாகாதோராவார், அதேபோல திருமணமாகாதோர் வீதத்தில் 69 வீதமானோர் பாடசாலை மாணவர்கள் ஆவார், என்றொரு அதிர்ச்சித் தகவலையும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது போதைக்கு அடிமையானவர்களில் 71 வீதமானவர்கள் கொழும்பு மாவட்டத்திலும் 22 வீதமான போதைப் பாவனை வளர்ச்சியை கம்பஹா மாவட்டமும் கொண்டுள்ளது. அதே போன்று யுத்தத்திற்கு பின்னர் வட மாகாணம் இன்று போதை அச்சுறுத்தலில் சிக்கியுள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேற்கத்தைய கலாசார மோகம் இன்று வேகமாக நம் நாடுகளிலும் வெகுவாக பாதித்து வருகின்றது என்பது இன்று நன்றாக உணரக்கூடியதாக உள்ளது. குறிப்பாக 16 தொடக்கம் 30 வயதுக்குட்பட்ட பெண்கள் இப் போதைப் பொருள் சிக்கலை எதிர் கொள்வதாக இலங்கையில் ஓர் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

போதை வஸ்துக்களை ஊசிகள் மூலம் ஏற்றிக் கொள்வதன் மூலம் எயிட்ஸ் தொற்றும் அபாயம் அதிகமாகவே உள்ளது. இலங்கையில் ஒட்டு மொத்த எண்ணிக்கை 1845 ஆகும். இன்று போதைக்கு அடிமையான மக்களால் தமது சொந்த உறவுகளே சீரழிக்கப்பட்டுள்ளன. கொலை, கற்பழிப்பு ஏனைய தாக்குதல் சம்பவங்கள் அனைத்திற்கும் இந்த போதையே வழிகாட்டியாக உள்ளது. ஆகவே போதைப்பொருள் பாவனை நாட்டில் சமூகங்களுக்கிடையில் மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. போதைப் பாவனை வெறுமனே ஒரு விதமான இன்பத்தை ஏற்படுத்தும் எனக் கருதி மக்கள் இந்தப் போதை வஸ்துக்கு அடிமையாகின்றனர். ஆனால் இதன் மூலம் எண்ணிலடங்காத நபர்கள் பாதிக்கப்படுகின்றனர். பல உயிர்கள் பறிக்கப்படுகின்றன. குடும்பங்களில் நிம்மதியின்மை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இருந்து நாட்டில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல வழிமுறைகளைக் கையாண்ட போதிலும் அவை சாத்தியமாகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013 ஆம் ஆண்டு இலங்கை பொலிஸ் திணைக்களம், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம், முப்படை போன்ற அரச நிறுவனங்கள் போதை ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்களின் தலையீட்டுடன் போதைத் தடுப்புச் சட்டங்களும் அமுல்ப்படுத்தப்பட்டு வந்தன. ஆயினும் ஆண்டுக்கு ஆண்டு போதைப்பொருள் பாவனையாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றதே தவிர மக்களிடையே போதைப்பாவனை கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக எந்த அறிக்கையும் வெளிப்படுத்தப்படவில்லை.

ஆகவே மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் இணக்கமான நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும். இளம் சமுதாயத்தை இந்த நாசக்காரப் பாதையில் இருந்து மீட்டெடுக்க வேண்டும். இளம் சமுதாயம் ஆரோக்கியமானதும் தெளிவான சிந்தனையிலும் உருவானால் மட்டுமே வளமான நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். இன்றைய சூழலில் இளைஞர், யுவதிகள் மத்தியில் ஏற்பட்டு வரும் குற்றச் செயல்கள் அனைத்திற்கும் பின்புலத்தில் ஏதோவொரு வகை போதைப்பொருள் காரணமாக உள்ளது. இந்த விடயத்தில் இளம் சமூகம் அதிகம் சிந்தித்து செயற்பட வேண்டியது கட்டாயமானதும் ஒவ்வொருவருடைய பொறுப்புமாகும். நாட்டினை போதையற்ற ஒரு இடமாக மாற்றுவது நம் ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும்.

**றொ. பினோல்ட்**
**கிராம அலுவலர்,**
**ஊற்றுப்புலம் (KN-36),**
**கரைச்சி, கிளிநொச்சி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமூகத்தில் கைம்பெண்களும், அவர்கள் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளும்

21ஆம் நூற்றாண்டில் உலகம் தழுவிய ரீதியில் உள்நாட்டு மோதல்களும், முரண்பாடுகளும், வன்முறைகளும், அதிகரித்து வருகின்றன. குறிப்பாக முதலாம் இரண்டாம் உலகப்போர்களின் பின்னர் உலக நாடுகளில் பெருமளவான உள்நாட்டுக் கலவரங்கள் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் பல அழிவுகளையும், இழப்புகளையும் ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக ஆப்கானிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளும் உள்நாட்டுப் பிரச்சினைகளை எதிர் நோக்கியிருந்தன. இதனைவிட தற்போது இஸ்ரேல், பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் கலவரங்கள் நடைபெற்று வருகின்றன. இதனால் ஊனமுற்றோர், விதவைகள், அநாதைகள், தனித்து விடப்பட்ட பிள்ளைகள், பெற்றோர், மற்றும் கைவிடப்பட்ட பெண்கள் என பலர் உருவாகியுள்ளனர். இவ்வாறான தனி மனிதன் சார்ந்த சமூக நிலைகள் தனி மனிதர்களை பல சமூக பொருளாதார சிக்கல்களில் சிக்கவைத்ததுடன் பல சவால்களையும் எதிர்நோக்க வைத்துள்ளது.

சமூகத்தில் "விதவை" என்ற ஒரு நிலை காலங் காலமாக நோக்கப்படும் ஒரு தனி மனித நிலை. விதவையானவள் கணவனை இழந்தவள் கணவன் இறந்தவுடன் மனைவிக்கு "விதவை" எனும் சமூக முத்திரை குத்தப்படுகின்றது. இது ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை வழக்கத்தில் இருந்து கொண்டே வருகின்றது. ஒரு பெண்ணானவள் இளம் வயதில் கணவனை இழக்கும் போது ஏற்படும் பிரச்சினையும் ஒரு பெண் முதிய வயதில் கணவனை இழக்கும் போது ஏற்படும் பிரச்சினையும் வேறுபட்ட விதத்தில் அமைகின்றன. விதவைகள் உருவாக்கம் என்பது உலகளாவிய ரீதியில் இடம்பெறும் ஒரு சமூக நிகழ்வு ஆகும். ஆனால் விதவைகள் உருவாக்க வளர்ச்சி வீதம் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டு அமைவதற்கு யுத்தம், கொலை, தற்கொலை. நோய், விபத்து போன்ற சமூக நிலைமைகள் காரணமாக அமைகின்றன. இதனால் ஒரு நாட்டில் விதவைகள் அதிகரித்தும் இன்னுமொருநாட்டில் விதவைகள் குறைவடைந்தும் காணப்படுகின்றார்கள்.

இலங்கையில் யுத்தமானது பல யுத்த விதவைகளை உருவாக்கியுள்ளது."போர்" என்பது "ஒரு பண்பாட்டு தொடர்புகள் சார்ந்ததும் நாடுகளின் படைகளுக்கிடையே நடைபெறும் ஒழுங்கமைந்த வன்முறைகளால் வெளிப்படுவதுமான பிணக்கு" ஆகும். இது பற்றி "On War" என்னும் நூலில் "கார் வொன் குளோசவிட்ல்" என்பவர் கூறுகின்ற போது வேறு வழிமுறைகளில் நடக்கும் தொடர்ச்சியான அரசியல் ஊடு தொடர்பு என்றார். இதனை "ஜான்சீகன்" ஒரு உலகளாவிய தோற்றப்பாடு போர் என்றும் அதனை நடத்தும் சமூகத்தைப் பொறுத்து அதன் வடிவமும் வீச்செல்லையும் வேறுபடும் என்றார். இதன் விளைவால் இலங்கையில் 89000 விதவைகள் இருப்பதாக 2010ஆம் ஆண்டு தகவல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருந்தன. தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் 1271 யுத்த விதவைகளுடன் இணைந்து விபத்து. இயற்கை மரணம் என்பவற்றால் சடுதியாக விதவைகள் அதிகரித்துள்ளனர்.

வீதி விபத்துகள் எமது சமூகத்தில் பல பெண்களை விதவைகளாக்கியுள்ளது. அத்துடன் கிராமப்புறங்களில் கசிப்பு, கஞ்சா மற்றும் போதை பாவிப்பு என்பன பல இளைஞர்களை சிறுநீரக கோளாறு, புற்றுநோய் என்பவற்றுக்கு இட்டுச்சென்றுள்ளது. இதனால் ஆண்கள் இறப்பு அதிகரித்துள்ளது. இந் நிலைமை அனேக குடும்பத்தில் குடும்ப பொறுப்புகளை பெண்களிடம் ஒப்படைத்துள்ளது. விதவைகள் ஆக்கப்பட்ட பெண்கள் குடும்ப பொருளாதாரத்தை உயர்த்த பல சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். தமது குழந்தைகளைப் பராமரிப்பதில் இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர். பாதுகாப்பு என்பது அவர்களுக்கு கேள்விக் குறியாகி விடுகின்றது. இதனால் மற்றவர்களிடம் உதவி கேட்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

பெண்கள் வேலைக்குச் செல்கின்ற போது இளம் விதவைப் பெண்கள் பாலியல் பிரச்சினைகளுக்கும், வன்முறைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. மறுமணம் என்பதும் இவர்களுக்குப் பெரும் சவால்களையே தந்து நிற்கின்றது.

குழந்தைகளைக் கற்பிப்பதற்கு ஏற்படும் பொருளாதார செலவுகளுக்கு இடர்படுகின்றனர். வாழ்வாதாரம் மற்றும் நிவாரணங்கள் சில அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் கிடைக்கின்ற போதிலும் அவை போதுமானதாக இருப்பதில்லை. அது மட்டுமல்லாமல் அவர்கள் சமூக நிகழ்வுகளில் கூட பின் தள்ளப்படுகின்றனர். இள வயதிலேயே தங்கள் உறவுகளின் திருமணம், பூப்புனித நீராட்டு விழா, ஏனைய சடங்குகளில் பின்தள்ளப்படுகின்றனர். சம்பிரதாயங்களின் அடிப்படையில் அவர்களை அழைத்து நல்ல செயல்கள் கூட செய்வதில்லை. இதனால் அவர்கள் மனதளவில் எல்லாவற்றிலும் இருந்து ஒதுங்கி தம்மைத் தாழ்த்திக் கொள்கின்றனர். அது மட்டுமல்லாமல் பிள்ளைகளின் மனநிலையை புரிந்து கொண்டு அவர்களை தாய்க்குத் தாயாக, தந்தைக்கு தந்தையாக நின்று வளர்க்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

எமது சமூகத்தில் நாளாந்தம் விதவைகள் அதிகரித்து வருகின்றனர். அவர்களின் பிரச்சினைகளும் அதிகரித்து வருகின்றது. எனவே எம்மால் ஆன சமூக மாற்றங்களுக்கு ஆதரவு வழங்குவோம், அவர்களின் வாழ்வாதார சமூக நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவோம், சமூகத்தில் உடனடியாக மாற்றங்களை ஏற்படுத்த முடியாவிடினும் தனி நபர் சார்ந்த மனநிலையில் நாமும் ஒருவராக இருந்து அவர்களின் வளர்ச்சிக்குப் பங்காற்றுவோம்.

**ஜோபிடலிஸ் கிஷாந்தினி**
*அபிவிருத்தி உத்தியோகத்தர்,*
*பிரதேச செயலகம் , கரைச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனத்த மௌனத்தின் பின்னும்
# காணவில்லை உம்மை இன்னும்..

நெடுவாழ்வின் நினைவுகளில் முத்தான
எம் சொத்தான நினைவுகளே!

நித்தம் ஒரு யுத்தமென சிந்திய இரத்தம்
மொத்தம் இந்தப் பூமி உமை நினைத்துப்
பித்தம் கொண்டு கத்தும்
தொட்டில் மறந்த குழந்தைகளும்
ஒரு தட்டில் உண்ட தோழர்களும்
விட்டுப் போன பெற்றோரும்
பெற்றெடுத்த தாய் மனமும் – நாளை
என் மகன் "வருவான் வருவான்" என
நடுநிசியும் விழித்திருக்கும்

என்ன நடந்ததென்று
எட்டிலும் பார்க்க முடியவில்லை
எட்டியும் பார்க்க முடியவில்லை
தட்டியும் கேட்க முடியவில்லை
முட்டியும் மோத முடியவில்லை
ஆனாலும் மண் வாசனையில்
உன் வீரம் வீசுவது நான் அறிவேன்
இருந்தாலும் நீளும் கனவில் நீங்காத்
துயரமாய் வாழும் நிலையிலும்
மீளாத் தேடலில் எத்தனை தாய் மனங்கள்
நெடுவாழ்வின் நினைவாய்ப் பிறவீரோ?
என்றே உமைத்தேடி அலைகின்றோம்.
நெடுவாழ்வில் நேராய் நினைவில்
புகுந்திடினும் தொடுவானில் உமை
தேடும் துணிவில்லை எம்மிடமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமையான கனவுகள் மாறவில்லை
பக்குவப்படுத்திய காயமும் ஆறவில்லை
எம்முடனே நீங்கள் இல்லை என்றறிந்தும்
மனம் உம்மை நினைப்பதை நிறுத்தவில்லை.
வடுக்கள் நிறைந்த வாழ்வாயினும்
வலுவான உலகம் எம் வாழ்வில் நீங்கள்
இன்று "வருவீர் வருவீர்" என வழிபார்த்து
காத்திருக்க "வலிந்து தொலைக்கப்பட்டீர்"
கதவு அசையும் சத்தத்திலும் கண்விழித்துப் பார்க்கின்றோம்
கனவுகளில் உமை நிரப்பி நிஜமாக்கி நாம் சொல்ல
வந்துவிடு என்னருகில் என் மகனே! என் மகளே!
என்று கதறிக் கதறியே காலம் முடிந்து போக

நடை பிணமாய் எமை நாடி
முதியோர் இல்லம் செல்ல விண்ணப்பிக்கும்
பெற்றோரும்..
உற்றார் தூற்றி நிற்க பெற்றோர் எனக்கில்லை
எனப் பேதலித்து வந்து நின்று
பேரன்பை எதிர்பார்க்கும் பிள்ளை மனம்
படும்பாட்டைக் கண்டறிந்து
யானும் கலங்கித்துடிதுடித்து
ஊர்பேர் இல்லை என்றும்
உற்றார் இல்லை என்றும்
கள்ளம் கபடமல்லா
நல்லோர் மனம் நாடி
கடிதம் அனுப்பி வைத்து
கருணை இல்லம் ஒன்றில்
கவனமாய் கையளித்து
கனத்த மனதுடனே
காணாமல் போகின்றோம்.



**க.விஜிதா**
**கிராம அலுவலர்,**
**கரைச்சி .**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல்நகர் உருவான கதை

1996ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட "சத்ஜெய" நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி மக்கள் இடம்பெயர்ந்தனர். அலுவலகங்களும் இடம்பெயர்ந்தன. கிளிநொச்சி நகரம் வெறிச்சோடி யுத்தகளம் ஆகிவிட்டது. கிளிநொச்சி மாவட்ட செயலகம், கரைச்சிப் பிரதேச செயலகம் என்பன ஸ்கந்தபுரத்தில் உள்ள தனியார் ஓலைக்குடிசைக்கு இடம்பெயர்ந்து, இயங்கிக் கொண்டிருந்தன. அப்போதைய அரசாங்க அதிபராக மதிப்புக்குரிய இராசநாயகம் ஐயாவும், பிரதேச செயலராக மதிப்புக்குரிய ஐயாத்துரை ஐயாவும் சேவையாற்றிக் கொண்டிருந்தனர். இடப்பெயர்வால் காடுகளை வெட்டி மக்கள் தமக்கான குடியிருப்புக்களை அமைத்திருந்தனர். எங்கு பார்த்தாலும் மக்கள் மரங்களின் கீழும், வீதியோரங்களிலும் நிரம்பியிருந்தனர். மிகவும் இக்கட்டான, வேதனை மிகுந்த காலமாக இருந்தது. அனைத்து அரச அலுவலர்களும் தத்தமது கடமைகளை இயன்றவரை செவ்வனே செய்து கொண்டிருந்தனர். இவ்வாறாக சொல்லொணாத் துன்ப துயரங்களின் மத்தியில் வாழ்க்கை பல வருடங்களாக ஓடிக் கொண்டிருந்தன.

இப்படியே இருந்து கொண்டிருக்கையில் இடையிடையே சமாதானப் பேச்சுக்களும் நடைபெறும். ஆனாலும் அமைதியான சூழல் ஏற்படுவதாக இல்லை. பொருளாதாரத் தடையால் பொருட்கள் தட்டுப்பாடு, அதிகரித்த விலைவாசி, மருந்துகள் தட்டுப்பாடு, எரிபொருட்கள் இல்லை. பெரும்பாலான மக்கள் இரவுப்பொழுதை இருளிலேயே கழித்தனர். ஏனையவர்கள் மிகவும் குறைந்தளவு மண்ணெண்ணெய் எரியக்கூடிய குப்பி விளக்கு, பஞ்சு விளக்குகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். இதனால் மக்கள் காட்டுவிலங்குகளாலும் விசஜந்துகளாலும் மிகவும் பாதிக்கப்பட்டனர். மலேரியாக் காய்ச்சலும் மிக உக்கிரமடைந்திருந்தது. இதனால் பல பல இறப்புகளும் பாதிப்புகளும் நிகழ்ந்த வண்ணமிருந்தன.

இப்படியாக மிகவும் கஸ்டத்தின் மத்தியில் காலங்கள் விரைந்தோடின. 2002 ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரம் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பியது. கொழும்பிலிருந்து பாலபெட்டபெண்டி தலைமையில் பேச்சுவார்த்தைக் குழு வருகிறது. அரச தரப்புக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கின்றன. அதன் விளைவாக மீள்குடியேற்றம் மெல்ல மெல்ல ஆரம்பிக்கப்பட்டது. பாதைகள் திறக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டது. மக்கள் தங்கள் வாழ்விடங்களைச் சென்று பார்த்தனர். திருத்த வேலைகள் செய்து வாழ்க்கையில் ஈடுபட்டனர். அரச அலுவலகங்களும் மீண்டும் வழமையான இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இப்படியாக இருந்த வேளையில் தான் ஒருநாள் மாவட்ட செயலராகவிருந்த மதிப்புக்குரிய இராசநாயகம் ஐயா அழைத்தார். அப்போது நான் பொன்னகர், மலையாளபுரம் கிராம அலுவலராக இருந்தேன். என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயமாக அழைத்தார் என்றால், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும். அதற்கு ஒரு இடம் பார்த்துத் தரும்படி கேட்டிருந்தார். சரியென்று பல இடங்கள் தேடினோம். இறுதியில் பொன்னகர் மத்தியில் இடத்தைக் காட்டினேன். அவ்வேளையில் கரைச்சி பிரதேச செயலராக நித்தியானந்தன் ஐயா கடமையிலிருந்தார். உடனே அரசாங்க அதிபர், பிரதேச செயலர் ஆகியோர் வந்து இடங்களைப் பார்வையிட்டனர். இடம் மிகவும் பிடித்து விட்டது என்று கூறி பல்வேறு தரப்பினரையும் கூட்டிவந்து காண்பித்தனர். உடனே பல்கலைக்கழகம் அமைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அப்போது மக்கள் வேலைவாய்ப்பின்றி பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர். எனவே அவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெறும்பொருட்டு அப்பிரதேச மக்களைக் கொண்டே உலக உணவுத்திட்டத்தின் மூலம் காடுகள் வெட்டப்பட்டு துப்புரவுப் பணிகள் நடைபெற்றன. A9 வீதியுடன் அறிவியல்நகர் 1, 2, 3, 4, 5 என்ற இணைப்பு வீதியையும், முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி வரைக்கும் பொன்னகர், பாரதிபுரம் “B” வீதியையும் அமைத்து திருத்தும் பணியும் என்னிடம் வழங்கப்பட்டது. அக்காலப்பகுதியில் நில அளவையாளர்கள் இல்லாதிருந்த போதிலும், மக்களாலேயே நேரான பாதை எடுக்கப்பட்டது. செய்யப்பட்ட ஒவ்வொரு வேலையிலும் அரசாங்க அதிபரினதும், அதிகாரிகளினதும் நேரடிக் கண்காணிப்பும் , வழிகாட்டலும் இருந்தன. இவ்வாறாக மிகவும் குறுகிய காலத்தில் பல்கலைக்கழகத்திற்கான நில வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்று, கட்டட நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

கட்டடப்பணிகள் மிகத் துரிதமாகவும், நேர்த்தியாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை மீண்டும் போர்ச்சூழல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் கட்டட நிர்மாணப்பணிகள் இனிதே நிறைவு பெற்றன. நான் ஒரு கிராம அலுவலராக இருந்து செயற்பட்டமைக்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் மெச்சுரை வழங்கி பாராட்டும் பெற்றேன்.

பல்கலைக்கழகம் அமையப்போகும் இடத்துக்கு புதுப்பெயராக, அறிவுசார்ந்த பெயராக வைக்க வேண்டும் என்பது எல்லோரின் விருப்பமாக இருந்தது. ஆகவே “அறிவியல் நகர் என்று பெயர் சூட்டினார். அன்றிலிருந்து பொன்னகர் கிராமம் அறிவியல் நகராகியது. ஆனாலும் போர்ச்சூழல் காரணமாக பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கைகள் முறைப்படி முன்னெடுக்கப்படவில்லை. யுத்தம் பல வருடங்களாக நடைபெற்று 2009 இறுதிப்போர் மக்களை முள்ளிவாய்க்கால் வரை இடம்பெயர வைத்தது. அதன் பின்னர் மக்கள் வவுனியா இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் தங்க வைக்கப்பட்டு மீண்டும் 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மீள்குடியமர்த்தப்பட்டனர். படிப்படியாக கிளிநொச்சி மக்கள் முழுவதுமாக மீள்குடியேற்றப்பட்டனர். இந்தக்காலப் பகுதியில் கிளிநொச்சி மாவட்ட செயலராக மதிப்புக்குரிய திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் அம்மாவும் பிரதேச செயலராக மதிப்புக்குரிய செல்வி.சுலோஜினியும் இருந்தனர். இவர்களது முன்னேற்றகரமான, முன்மாதிரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளால் சகல அலுவலகங்களும் கிளிநொச்சிக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டு, மக்களுக்கான சேவைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அறிவியல் நகரில் தமிழ்ப்பல்கலைக்கழகத்தோடு இணைத்து விவசாயபீடம், பொறியியல்பீடம், தொழில்நுட்பபீடம் அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. பல்கலைக்கழகத்திற்குத் தேவையான நீர் கொண்டு வருவதற்கான ஏற்பாடாக அக்கராயன் வீதிக்குத் தெற்குப் பக்கமாக 200 ஏக்கர் காடு துப்புரவு செய்யப்பட்டு குளம் அமைத்து அதில் 15 அடி நீர் தேக்கி வைக்கப்பட்டு அதனூடாக தரைவழியாக நீர் பாய்ச்சுவதற்கு ஏதுவாக அந்தக் குளத்திலிருந்து 10 அடி பதிவாக விவசாயபீடம் காணப்பட்டது. இதனால் அனைத்து பீடங்களும் போதிய நீரைப் பெற்று செழிப்பாகவும், வனப்பாகவும் இருப்பதோடு நிலத்தடி நீர் நிலைகள் நன்னீராக மாற்றுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனாலும் யுத்தத்தின் பின்னர் அவ்விடத்தில் பாரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. திட்டங்கள் அமையவில்லை. அதற்கு மேல் பகுதியில் அரசாங்கத்தால் "புலிக்குளம்" என்ற குளம் அமைக்கப்பட்டு குழாய் மூலம் தண்ணீரை விவசாய பீடத்திற்கு கொண்டுவருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தான் அறிவியல் நகர் மெல்ல மெல்ல வளர்ச்சியடையத் தொடங்கியது. அப்பிரதேச மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக "வானவில்", "விடியல்" என்ற இரு ஆடைத் தொழிற்சாலைகள் கொண்டுவரப்பட்டன. "கார்கில்ஸ்" நிறுவனம் வருகை தந்ததன் மூலம் விவசாயிகளிடமிருந்து பழங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இதன்மூலம் பழ உற்பத்தி மேம்படுகின்றன. ஜேர்மன் தொழில் நுட்பக்கல்லூரியில் நாடு முழுவதிலிருந்தும் மாணவர்கள் வருகைதந்து தொழில்நுட்பம் பயில்கிறார்கள். மத்தியவங்கியின் வருகை மூலம் அப்பிரதேசம் மிகவும் தரமான பிரதேசமாகக் காணப்படுகின்றது. இவ்வாறாக பலதரப்பட்ட கல்விசார், தொழில்சார் நிறுவனங்கள் வானளாவ எழுச்சி பெற்றுள்ளது.

அன்று ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத் தோற்றமானது 2014 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக பீடங்களாக திறந்து வைக்கப்பட்டது பெரும் மகிழச்சிக்குரியது. அறிவியல் நகரில் அறிவுச்சூரியன்களாக, கல்வியொளி பரப்பிக்கொண்டிருக்கும் பல்கலைக்கழக பீடங்களைப் பார்க்கும் போது இதன் தோற்றுவாய்களில் நானும் ஒருவனாக இருப்பதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன்.

**திரு.த.குணசிங்கம்**
*கிராம அலுவலர்,*
*உதயநகர் கிழக்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரப் பேரவை



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : திரு.தி.பிரபாகரன், திரு.வை.மகேந்திரராசா, திருமதி.ச.மாதுகி (உதவிப் பிரதேச செயலாளர்), திரு.த.முகுந்தன் (தலைவர் / பிரதேச செயலாளர்), திரு.பொ.உமாகாந்தன் (உப செயலாளர்), திரு.செ.ராஜ்குமார் (செயலாளர்), செல்வி.செ.கஜாந்தினி,

நிற்பவர்கள் இடமிருந்து வலம் : திருமதி.கு.சுதர்சினி, திருமதி.யு.கவிதா, திரு.இ.சத்தியநாதன், திரு.சூ.கமிலஸ், திரு.ப. உதயரூபன் (உப தலைவர்), திரு.தே.தியாகராசா, திரு.பா.றெஜிஸ், திரு.ப.விமல்ராஜ் (பொருளாளர்), திரு.ஆ.சக்திவேல், திருமதி.சு.கஜீபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைஎழில் விருது பெறும் கலைஞர்கள் விபரம் –2024

## பிரதேச செயலகம், கரைச்சி

### மூத்த கலைஞர்கள்



திரு.இ.இராஜேஸ்வரநாதன்
உருத்திரபுரம்



திரு.மூ.நவரத்தினராசமூர்த்தி
இராமநாதபுரம்



திருமதி.வீ.விஜயதர்சினி
பாரதிபுரம்

### இளங்கலைஞர்கள்



திரு.சி.வினோத்
வட்டக்கச்சி



திரு.கி.அகிலநாதன்
கனகாம்பிகைக்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

All Kinds of Furniture & Electronic items

# VINAYAGAR

## Furniture & Multi Trades Centre

## விநாயகர் பேணிச்சர்

அனைத்துவிதமான அலுவலக .வீட்டுத் தளபாடங்கள், சமயலறை உபகரணங்கள், கணினிகள்,
விளையாட்டுப் பொருட்கள், சாதனங்கள் என்பவற்றை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

*Infront of People Bank*
*A9 Road, Kilinochchi.*

*Fax / Tel : 021 228 5372*
*T.P : 077 522 7505*

*Email:vinayagarfurnimart@gmail.com*




கலாசார விழா சிறப்புற வாழ்த்துகிறோம்..

INNOVEX Panasonic Preethi Pioneer SAMSUNG SONY SINGER
Piyestra Richsonic SISIL TCL BRIGHT USHA TELESONIC KDK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org